REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2023 பெப்ரவரி 2 வியாழக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

1932 - 2022

வரு. 91 இல. 28 | Thursday 02, February, 2023 | 12பக்கங்கள் | 50/-

ஊழியர்கள் எண்ணிக்கையை குறைக்க அரச நிறுவனங்களில் சுய ஓய்வு முறை

சகல அரச நிறுவனங்களிலுமுள்ள அரச ஊழியர்களின் எண்ணிக்கையை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், அதற்காக சுய ஓய்வு பொறிமுறை அறிமுகப்படுத்தப்படுமெனவும் அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இந்த சுய ஓய்வு பொறிமுறையின் மூலம் திறமையற்ற அரச ஊழியர்கள் நீக்கப்படுவரென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து திணைக்களங்களிலும் தமது செலவினங்களைக் குறைக்குமாறு அமைச்சுக்களுக்கு திறைசேரி அறிவுறுத்தியுள்ளது.

இதன் பிரகாரமே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார். இதுபற்றித் தெரிவித்த அவர், திறைசேரியின்

04

உள்ளூராட்சித் தேர்தல் வர்த்தமானி வெளியானது

மார்ச் 09ஆம் திகதி; காலை 07 மணி முதல் 04 மணி வரை வாக்களிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

உள்ளூராட்சி சபை தேர்தல் எதிர்வரும் மார்ச் 9ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் தேர்தலுக்கான விசேட வர்த்தமானி உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கிணங்க உள்ளூராட்சி சபை தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதம் ஒன்பதாம் திகதி நடைபெறவுள்ளதுடன் அன்றைய தினம் காலை 7.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரை வாக்கெடுப்பு நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை உள்ளூராட்சி சபை தேர்தலில் 339 உள்ளூராட்சி சபைகளுக்காக 58 பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளும்

04

சீனத் தூதரக கடிதத் தலைப்பில் போலிக் கடிதம் விநியோகம்

CID யினரால் விசாரணை ஆரம்பம் - டிரான்

சீனத் தூதரக கடிதத் தலைப்பில் போலிக் கடிதம் வெளியாகியுள்ளமை தொடர்பில்,சீ.ஐ.டியினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடன் தொகைகளுக்கு தவணை வழங்க முடியாதென அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தப் போலிக் கடிதம் சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வருவதாக சீனத் தூதரக அதிகாரியொருவர்

04

இலங்கையின் நிலை வழமைக்கு திரும்பும் வரை அமெரிக்கா உதவும்

ஜனாதிபதியிடம் விக்டோரியா நூலண்ட் தெரிவிப்பு

அமெரிக்கா வழங்கிய ஆதரவுக்கும் ஜனாதிபதி ரணில் நன்றி தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

பொருளாதார இயல்புநிலை திரும்பும் வரை, இலங்கைக்கு தொடர்ச்சியாக அமெரிக்கா ஒத்துழைக்கும் என, அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் உதவி இராஜாங்கச் செயலாளர் விக்டோரியா நூலண்ட் நேற்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் தெரிவித்தார். இலங்கைக்கு இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரம் தொடர்பான உதவி இராஜாங்க செயலாளர் விக்டோரியா நூலண்ட் நேற்று ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சு நடத்தினார். இச்சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

04

சிறுபோகம் மற்றும் சோளப் பயிர்ச்செய்கைக்கு

25,000 மெ.தொன் யூரியாவை கொள்வனவு செய்ய திட்டம்

1,00,000 மெ.தொ யூரியாவை கையிருப்பில் வைக்கவும் தீர்மானம்

லோரன்ஸ் செல்வநாயகம்

இந்த வருடத்தின் சிறுபோக நெற்செய்கை மற்றும் சோளப் பயிர்ச்செய்கைக்கு தேவையான யூரியா உரத்தை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதுடன் அதற்கென 10 பில்லியன் ரூபாவை ஒதுக்குமாறு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர விவசாய அமைச்சின் அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

தற்போது இலங்கை உர நிறுவனம் மற்றும் கொமர்ஷல் உர நிறுவனம் ஆகியவற்றுக்குச் சொந்தமான களஞ்சியசாலைகளில் 30,000 மெற்றிக்தொன் யூரியா உரம் காணப்படுகிறது. அதற்கு மேலதிகமாக

04

கோதுமை மா, சிவப்பரிசி உட்பட 04 பொருட்களின் விலை குறைப்பு

லங்கா ச.தொ.ச அறிவிப்பு

லங்கா சதொச மேலும் நான்கு அத்தியாவசிய பொருட்களுக்கான விலையை குறைத்துள்ளது.

அதற்கமைய, இன்று (02) முதல் அமுலுக்கு வரும் வகையில் இவ்விலை குறைப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக லங்கா சதொச அறிவித்துள்ளது.

ஒரு கிலோ செத்தல் மிளகாய் 25

04

திடீர் மின்சாரத் தடை; இருளில் மூழ்கியது வைத்தியசாலை

மொபைல்போன் வெளிச்சத்தில் சிகிச்சை

கொழும்பு ராகம போதனா வைத்தியசாலையில் திடீரென மின்தடை ஏற்பட்டது. இதையடுத்து, கையடக்க தொலைபேசி வெளிச்சத்தில் வைத்தியர்கள் நோயாளிகளுக்கு சிகிச்சையளித்தனர். ராகம போதனா வைத்தியசாலையின் மின் பிறப்பாக்கிகளில்

04

உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல்

நௌபர் மௌலவி உட்பட 25 பேருக்கு எதிரான வழக்கு; பெப். 28 விசாரணை

மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் நேற்று அறிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் சூழ்ச்சிகளை மேற்கொண்டமை அதற்கான அனுசாரணை வழங்கியமை ஆகியவை உள்ளிட்ட குற்றச்சாட்டின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள நௌபர் மௌலவி

04

கடவுச்சீட்டு பெற்றுத் தருவதாக கூறி பண மோசடி செய்தோர் கைது

ஒரு நாள் சேவை குறித்து மக்களுக்கு எச்சரிக்கை

கடவுச்சீட்டுகள் தயாரித்து தருவதாகக் கூறி பணத்தை மோசடி செய்த இரண்டு சந்தேகநபர்கள் தலங்கம பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு நாள் சேவையின் கீழ், கடவுச்சீட்டுகளை தயாரித்து தேசிய அடையாள அட்டைகள் மற்றும் ஆவணங்கள்

04

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில், நாடு.

தேர்தலில் மட்டுமே கவனம் செலுத்தி வரும் எதிர்க்கட்சி

U.N.P தவிசாளர் வஜிர MP கடும் சாடல்

03

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் விக்டோரியா நூலண்ட் நேற்று எதிர்க்கட்சிகளிலுள்ள சிறுபான்மை அரசியல் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடினார். இனப்பிரச்சினை மற்றும் அரசியல் தீர்வுகள் குறித்து இதன்போது கவனம் செலுத்தப்பட்டது.

ஜே.வி.பியை கண்டு S.J.B ஒருபோதும் அஞ்சாது

S.M. மரிக்கார் MP தெரிவிப்பு

03

உடல்நிலையில் முன்னேற்றம்:

TNA தலைவர் சம்பந்தன் நேற்று வீடு திரும்பினார்

03

இன்னும் 2 நாட்கள்

அஹச மீடியா" நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற விஷ்வ கலா அபிமானி 2023 விருது வழங்கும் நிகழ்வு (31) மகாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்றது. இதில் தினகரன் முன்னாள் பிரதி ஆசிரியர் திருமதி ஆனந்தி பாலசிங்கம் விருது வழங்கி கௌரவிக்கப்படுகிறார். அஹச மீடியா நிறுவனத்தின் ஆலோசகரும், புரவலருமான ஹாசிம் உமரும் காணப்படுகிறார். (படம்: அஷ்ரப் ஏ சமத்)

லேக்ஹவுஸ் நிறுவனத்திலிருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் உதவி கணக்காய்வாளர் திருமதி எஸ். என். ஆர்.மல்காந்திக்கு அவருக்குரிய காசோலையை ஊடகத்துறை அமைச்சின் செயலாளரும் லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவருமான அனுஷ பெல்பிட கையளிப்பதையும் நிறுவனத்தின் பொது முகாமையாளர் விராஜின் பொய்ஸ், முகாமையாளர் எரந்த விதானகே ஆகியோரையும் படங்களில் காணலாம். (படம்: ஷான் ரூபஸ்சர)

'அப அகய' நியூஸ் பேப்பர்ஸ் என்ட் மீடியா நிறுவனம் ஏற்பாடு செய்த 'விஸ்வ கலாபிமானி' விருது வழங்கும் விழாவில் சிரேஷ்ட ஊடகவியலாளரும் தினமின பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியரும் ஆசிரியர் பீட ஆலோசகருமான காமினி ஜயலத் 'விஸ்வ கலாபிமானி' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டபோது எடுத்த படம். புரவலர் ஹாசிம் உமர் உட்பட முக்கியஸ்தர்களை படத்தில் காணலாம். (படம்: சுதத் நிஷாந்த)

சனத் குணவர்த்தனவின் 'சிஹின சருங்கல்' இசை இறுவட்டு வெளியீடு இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. நிகழ்வில் போக்குவரத்து ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன, இசை இறுவட்டை ஒருவருக்கு கையளிப்பதையும் அருகில் ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் அனுஷ பெல்பிட ஆகியோரையும் படத்தில் காணலாம்.
(படம்: சிந்தக்க குமாரசிங்க)

நகர்வலம்

சுற்றுலா பயணியின் 800 டொலர் திருட்டு

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

திஸ்ஸமகாராமை, யோதவாவிக்கு அருகாமையில் உள்ள சுற்றுலா விடுதியொன்றில் தங்கியிருந்த செக் கொஸ்லொவாக்கிய நாட்டு சுற்றுலா தம்பதியினரின் 800 டொலர்களை திருடிச் சென்றுள்ளதாக சந்தேகத்தில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக (29) கிரிந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

யோத வாவிக்கு அருகாமையிலுள்ள சுற்றுலா விடுதியின் வேலியினால் உள்ளே நுழைந்து மூடியிருந்த அரைக்குள் நுழைந்து தம்பதியினரின் டொலரினை திருடிச் சென்றுள்ளதாக ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பணத்தினை மாற்றுவதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தபோதே பொலிஸாரினால் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜெய்சங்கர் – மிலிந்த மொரகொட டெல்லியில் சந்தித்து உரையாடல்

இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொட இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கரை புதுடில்லியிலுள்ள வெளிவிவகார அமைச்சில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சந்திப்பில், இலங்கை,இந்தியாவுக்கிடையிலான உறவுகளின் தற்போதைய நிலை தொடர்பில் ஆராயப்பட்டது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் மற்றும் இலங்கை உயர்ஸ்தானிகர் ஆகியோர், அமைச்சர் ஜெய்சங்கரின் அண்மைய இலங்கை விஜயத்தின் பின்னரான தொடர் நடவடிக்கைகள் குறித்தும் விவாதித்துள்ளனர்.

பாலியல் துஷ்பிரயோக வழக்கு :

உத்தரவை நிறைவேற்றாமல் இலஞ்சம் பெற்ற பொலிஸ் அதிகாரி கைது

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

கற்பழிப்பு வழக்கு தொடர்பிலான வழக்கைத் தீர்ப்பதற்கும் உத்தரவை நிறைவேற்றாமல் இருப்பதற்கும் கோணகுவுக்கொல்லாவ பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரிடமிருந்து 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா இலஞ்சம் பெற்றதாக கூறப்படும் மதவாச்சி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவில் கடமையாற்றும் சார்ஜன்ட் ஒருவரை இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு பிரிவு அதிகாரிகள் (31) கைது செய்துள்ளனர்.

கடவத்கம ரம்பாவ பகுதியைச் சேர்ந்த சார்ஜன்ட் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ள வராவர்.

மதவாச்சி பகுதியைச் சேர்ந்த முறைப்பாட்டாளரின் வீட்டுக்கு பணத்தை பெற்றுகொள்ளச் சென்றபோது குறித்த சார்ஜன்ட் இலஞ்ச ஊழல் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முறைப்பாட்டாளருக்கு எதிராக நடந்து வரும் பலாத்கார வழக்குடன் சம்பந்தப்பட்ட மற்றைய தரப்பினருடன் சமரசத்தை ஏற்படுத்தவும் உத்தரவை நிறைவேற்றாமல் இருப்பதற்கும் முறைப்பாட்டாளரிடம் மூன்றரை இலட்சம் ரூபா பணத்தை கோரியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சந்தேக நபரான சார்ஜன்ட் மதவாச்சி நீதிமன்றில் (31) ஆஜர்படுத்தப்பட்டார்.

தேர்தல் காலங்களில் பாராளுமன்றத்தை ஒத்திவைத்தமை இதுவே முதற்தடவை

பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும

வெலிகம தினகரன் நிருபர்

நாட்டின் அரசியல் வரலாற்றிலேயே தேர்தல் நடைபெறும் காலத்தில் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது இதுவே முதற் தடவையாகும் என மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

சுதந்திர மக்கள் முன்னணி கட்சி சார்பில் இம்முறை உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்கள் முன்னிலையில் வெற்றியை உறுதிப்படுத்துமுகமாக இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில், தேர்தல் காலங்களில் பாராளுமன்றத்தை ஒத்தி வைப்பதை அனுமதிக்க முடியாது.

நாடு சுதந்திரம் அடைந்து 75 வருடங்கள் நெருங்கியிருக்கும் இவ் வேளையில் வரலாற்றில் பாராளுமன்றம் ஒத்தி வைக்கப்பட்டதை நாம் காணக்கூடிய முதற் சந்தர்ப்பம் இதுவாகும்.

இதற்கு முன்னர் கிழக்கு மாகாண சபைக்குச் சொந்தமான அம்பாறை மாவட்ட தேர்தல் நடைபெறும் போது மாத்திரமே இவ்வாறு பாராளுமன்றம் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. அதன் பின்னர் எச்சந்தர்ப்பத்திலும் இவ்வாறு பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படவில்லை என்றார்.

இந்நிகழ்வில் தேர்தலில் களம் இறங்கும் அபேட்சகர்கள் உட்பட முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

அமைச்சரவை அங்கீகாரத்துடன்

ஜனாதிபதி தலைமையில் நாளை கரு ஜயசூரியவுக்கு உயரிய கௌரவம்

முன்னாள் சபாநாயகர் தேசபந்து கரு ஜயசூரியவுக்கு 'ஸ்ரீலங்காபிமான்ய'என்ற கௌரவப் பட்டத்தை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கடந்த ஜனவரி 24 ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பில் இந்த விருது வழங்குவதற்கான தீர்மானம் அறிவிக்கப்பட்டது.

இதன்படி, நாளை 03ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ள நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த கௌரவம், கரு ஜயசூரியவுக்கு வழங்கப்படவுள்ளது.

'ஸ்ரீலங்காபிமான்ய' என்பது இலங்கையின் அதியுயர் சிவில் கௌரவமாக அரசாங்கத்தின் சார்பில் ஜனாதிபதியினால் வழங்கப்படுகிறது. தேசத்திற்கு மிகச்சிறந்த சேவை செய்தவர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

2015, 2020 வரை பாராளுமன்றத்தின் சபாநாயகராகப் பணியாற்றிய கரு ஜயசூரிய, 1995 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி தனது தீவிர அரசியல் வாழ்க்கையைத் தொடங்கியதில் இருந்து பல அமைச்சரவை அமைச்சுப் பதவிகளையும் வகித்துள்ளார்.

கரு ஜயசூரிய, தனது அரசியல் வாழ்க்கையைத் தொடங்குவதற்கு முன்னர், 1965, 1972 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை இராணுவத் தொண்டர் படையில் பணியாற்றினார். பின்னர் தனியார் துறையில் இணைந்த அவர், தேசிய வர்த்தக சம்மேளனம், சார்க் வர்த்தக சம்மேளனம், கொழும்பு இறப்பர் வர்த்தகர்கள் சங்கம், சீனி இறக்குமதியாளர் சங்கம் மற்றும் இலங்கை வர்த்தக அபிவிருத்தி நிலையம் ஆகியவற்றின் தலைவராக பணியாற்றியுள்ளார்.

அத்துடன், ஏற்றுமதி மேம்பாட்டு சபையின் பணிப்பாளராகவும் பதவி வகித்துள்ளார்.

தனியார் துறையை விட்டு வெளியேறிய பின்னர், கரு ஜயசூரிய 1992 ஆம் ஆண்டில் ஆஸ்திரியா மற்றும் சுவிட்சர்லாந்துக்கான அங்கீகாரத்துடன் ஜேர்மனிக்கான இலங்கை தூதராக நியமிக்கப்பட்டார். 1994 ஆம் ஆண்டு வரை அவர் அந்த பதவியை வகித்தார்.

பாணந்துறை அல் பஹ்றியா

மாணவி 168 புள்ளிகள் ; பாடசாலையில் முதலிடம்

(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

பாணந்துறை அல் பஹ்றியா தேசிய பாடசாலை மாணவி எம்.ஐ. ஸீனதுல் இஸ்மா அண்மையில் வெளியான ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 168 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து கல்லூரியில் முதலாம் இடத்தைப்பெற்று கல்லூரிக்கும் பாடசாலை சமூகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

இவர், தொட்டவத்தையைச் சேர்ந்த முஹம்மது இல்யாஸ் தாஸிம், நஸீக்குன் நிஸா தம்பதிகளின் புதல்வியாவார். தனக்கு சிறந்த முறையில் கல்வியை போதித்த ஆசிரியர் உட்பட பாடசாலை சமூகத்திற்கு இவரின் பெற்றோர் நன்றிகளை தெரிவித்துள்ளார்.

வத்தளை ஹேக்கித்த ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான தைப்பூச வருஷாபிஷேக மஹோற்சவம் கணபதி ஹோமத்துடன் அறங்காவலர் சபைத் தலைவர் ரவி சிவகுமார் தலைமையில் வெள்ளிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் சிறப்பாக ஆரம்பமாகியது, வசந்தமண்டப சிறப்பு பூஜைத் தொடர்ந்து மஹோற்சவ குருக்கள் சிவஸ்ரீ யோகீஸ்வர சுபாஸ்கர குருக்கள் கொடியேற்றி வைப்பதையும் தொடர்ந்து ஆறுமுகப்பெருமான் உள்வீதி வலம் வருவதையும் காணலாம்.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் புதிய பொதமுகாமையாளராக பொறியியலாளர் கலாநிதி வசந்தா இலங்கசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். புதிய பொதுமுகாமையாளர் சுபவேளையில் கடமைகளை பொறுப்பேற்றபோது எடுத்த படம். இந்நிகழ்வில் முன்னாள் பொதுமுகாமையாளர் பொறியியலாளர் திலின எஸ். விஜயதுங்க உள்ளிட்ட உயரதிகாரிகள் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: பி.எம். முக்தார்)

அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபையின் நூற்றாண்டு விழாவின் சிறப்பு பேச்சாளராக கலந்து கொண்ட தென்னாபிரிக்கா உலமா சபை தலைவர் அஷ் ஷெய்க் மௌலானா இப்றாஹிம் இஸ்மாயில் பாம் (பின்னூரி) அவர்கள் தெஹிவளை பெரிய ஜும்ஆ பள்ளிவாசலில் இஷா தொழுகையின் பின்னர் நிகழ்த்திய விசேட நிகழ்வின் பின் யாழ். எழுத்தாளர் கலா பூஷணம் பரீட் இக்பால் அவரை பொன்னாடை அணிவித்து கௌரவித்தபோது எடுத்த படம்.

புத்தளம் வேப்பமடு பிரதேசத்தில் வீட்டுத்திட்டம் திறந்துவைப்பு

(புத்தளம் தினகரன் நிருபர்)

புத்தளம் வேப்பமடு பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள "ஹாலித் அல் பஹ்த் அல்ஜெரி" வீட்டுத்திட்டமும் அங்கு அமைக்கப்பட்டுள்ள தையல் பயிற்சி நிலையமும் அண்மையில் குறித்த வீட்டு திட்டத்திற்கு நன்கொடை வழங்கிய ஹாலித் அல் பஹ்த் அல் ஜெர்ரி குடும்பத்தினரால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

இந்த வீட்டுத்திட்டத்தை அமைப்பதற்காக தனது சொந்த 5.5 ஏக்கர் நிலத்தை நன்கொடையாக வழங்கிய புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தொழில் அதிபருமான அலி சப்ரி ரஹீம் இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக கலந்து கொண்டார். இந்நிகழ்வில் உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம், இத்திட்டத்திற்கு உதவிய காலித் அல்பஹ்த் அல்ஜெரி குடும்பத்திற்கு நன்றி தெரிவித்தார்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 பெப்ரவரி 2 வியாழக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

தொழுகை நேரம்

சுபஹ்	05.11
லுஹர்	12.26
அஸர்	03.48
மஃரிப்	06.20
இஷா	07.32

இன்றைய சுபதினம்

சுபகிருது வருடம் தை 19

ராகுகாலம்	: பகல்	: 1.30	- 3.00வரை
சுபநேரம்	: காலை	: 10.30	- 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

பாவனைக்குதவாத பால்மா விலங்குகளின் உணவுக்காக விற்பனை

விசாரணையை ஆரம்பிக்கிறது விவசாய அமைச்சு

மனித நுகர்வுக்குத் தகுதியற்ற 635 மெற்றிக் தொன் பால் மாவை, அனுமதியின்றி கால்நடைத் தீவனத்துக்காக மில்கோ நிறுவனம், மற்றொரு நிறுவனமொன்றுக்கு விற்பனை செய்தமை குறித்து விவசாய அமைச்சு விசாரணையை ஆரம்பித்துள்ளது.

பால் மாவை விற்பனை செய்ய வேண்டாமென அமைச்சின் செயலாளர் உத்தரவிட்டிருந்த போதிலும், மில்கோ நிறுவனத்தின் உயரதிகாரிகள், பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு தரமற்ற பால்மாவை விற்பனை செய்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் விளக்கமளிக்குமாறு, மில்கோ தலைவருக்கு அமைச்சின் செயலாளர் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

சட்டவிரோத கையடக்க தொலைபேசி இறக்குமதியை தடுக்க நடவடிக்கை

பதிவுசெய்யப்படாத தொலைபேசிகள் குற்றச்செயல்களுக்கு பயன்பாடு

சட்டவிரோதமாக கையடக்கத் தொலைபேசிகளை இறக்குமதி செய்வதைத் தடுப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படுமென நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

கையடக்கத் தொலைபேசி இறக்குமதியாளர்களுடன் (31) நிதி அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

இவ்வாறான சட்டவிரோத இறக்குமதிகளால் அரசாங்கம் பாரியளவு வரி வருமானத்தை இழப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சட்டபூர்வமாக இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து தொலைபேசிகளின் IMEI எண்கள் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனினும், சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட தொலைபேசிகள், பதிவு செய்யப்படாதுள்ளமை தெரியவந்துள்ளது. இதையடுத்தே, இவ்வாறான இறக்குமதிகைளத் தடைசெய்வது பற்றி ஆலோசிக்கப்படுகிறது.

இது குறித்து எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் அறிக்கை வழங்க வேண்டுமென அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சட்டபூர்வமாக இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து கையடக்கத் தொலைபேசிகளினதும் IMEI இலக்கங்கள் தொலைத்தொடர்பு ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்த தொலைபேசிகள் தவறாக பயன்படுத்தப்பட்டாலோ அல்லது சட்டவிரோதமாகச் செயல்பட்டாலோ இந்த இலக்கத்தை பயன்படுத்தி தொலைபேசிகளை அடையாளம் காண முடியுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்விடயங்களை ஆராய்ந்த இராஜாங்க அமைச்சர், இது தொடர்பில் தற்போதுள்ள சட்டங்களை கடுமையாக்குமாறு சுங்கத் திணைக்களத்துக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நாடு பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில்

தேர்தலில் மட்டுமே கவனம் செலுத்தி வரும் எதிர்க்கட்சி

U.N.P தவிசாளர் வஜிர MP கடும் சாடல்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தி நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் 8,000 உறுப்பினர்களுக்கு சம்பளம் வழங்குவதை எதிர்க்கட்சி எதிர்பார்க்குமானால், மீண்டும் இந்நாடு, பொருளாதாரத்தில் அதல பாதாளத்துக்கு செல்லுமென ஐ,தே, கட்சி தவிசாளர் வஜிர அபேவர்த்தன எம்.பி. தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது.

உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட்டால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும். ஓரளவு இயல்பு நிலைக்கு கொண்டுவரப்பட்டுள்ள சுற்றுலாத்துறைக்கு பெரும் பாதிப்பு ஏற்படும்.

மேலும்,எதிர்காலத்தில் வாகனங்களுக்கான லீசிங் மற்றும் வங்கிக் கடன்களை செலுத்தவும் முடியாத நிலையில் உள்ளவர்கள் மேலும் மோசமான நிலையை எதிர்கொள்ள நேரும். இவ்வாறான எதனையும் கருத்திற் கொள்ளாமல் தேர்தல் மட்டுமே வேண்டுமென எதிர்க்கட்சி கோரிக்கை விடுக்கிறது. இதை விடுத்து, நாட்டு மக்கள் தொடர்பில் சிந்திப்பது அவசியம்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு 20 பில்லியன் செலவாகும். தேர்ந்தெடுக்கப்படும் 8000 உறுப்பினர்களுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்க வேண்டியுள்ளது. நாட்டிலுள்ள பொருளாதார நெருக்கடி இவ்வாறான சுமையைத் தாங்காது.

04

உடல்நிலையில் முன்னேற்றம்

TNA தலைவர் சம்பந்தன் நேற்று வீடு திரும்பினார்

திடீர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வீடு திரும்பியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் உறுதிப்படுத்தியுள்ளார்.

திடீர் சுகயீனம் காரணமாக நேற்று முன்தினம் தீவிர சிகிச்சை பிரிவில் அவர் அனுமதிக்கப்பட்டிருந்தார். இது தொடர்பில் நேற்று வினவிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வழமையான பரிசோதனைக்காகவே இரா. சம்பந்தன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும், அவரது உடல்நிலையில் தற்போது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

75 ஆவது சுதந்திர தின விழாவை SJB, TNA, FPA புறக்கணிப்பு

நாட்டின் 75ஆவது சுதந்திர தின விழாவை ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, சுதந்திர மக்கள் காங்கிரஸ் போன்ற அரசியல் கட்சிகள் புறக்கணிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சுதந்திர தினத்தை முன்னிட்டு நடைபெறும் தேசிய விழாவில், தமது கட்சி கலந்து கொள்ளாதென ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

சுதந்திர மக்கள் காங்கிரஸும் சுதந்திர தினக் கொண்டாட்டங்களைப் புறக்கணிக்கப் போவதாகக் கூறியுள்ளது.

இதேவேளை, 75 ஆவது சுதந்திர தின விழாவை புறக்கணிக்கும் தீர்மானத்தை எடுத்துள்ளதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு நேற்று முன்தினம் அறிவித்தது.

1948 ஆம் ஆண்டு பிரிட்டனிடமிருந்து நாடு சுதந்திரம் பெற்ற போதிலும் தமிழ் மக்களுக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை.

இதனால், கொண்டாட்டங்களைப் புறக்கணிக்கப் போவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியை கண்டு S.J.B ஒருபோதும் அஞ்சாது

S.M. மரிக்கார் MP தெரிவிப்பு

தேசிய மக்கள் சக்தியை கண்டு அஞ்சவில்லையென ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி தேசிய அமைப்பாளர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி, கடந்த 53 வருடங்களாக நாட்டை நாசப்படுத்தியதென்றும் 1983 க்குப் பின்னர் பிறந்தவர்களுக்கு அவர்கள் செய்த நாச வேலைகள் தெரியாதென்றும் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே எஸ்.எம். மரிக்கார் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் தேர்தல்களில் பெரிய வெற்றியைப்

04

அகவை 65 இல் பாபு சர்மா

முன்னாள் ஜனாதிபதியின் இந்து மத விவகார இணைப்பாளர் சர்வதேச இந்துமத பீடத்தின் செயலாளருமான கலாநிதி சிவ ஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபு சர்மா, இன்று அகவை 65ல் தடம் பதிக்கிறார். பாபு சர்மா, முன்னாள் ஜனாதிபதி மற்றும் பிரதமரினதும் இந்துமத விவகார இணைப்பாளராக கடமையாற்றியவர்.

கொழும்பு முகத்துவாரம் ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் ஆலய வளாகத்தில் ஸ்ரீ வித்தியா குருகுலம் எனும் வேத சிவாகம அந்தணர் பாடசாலையை உருவாக்கி வேதாகம கல்வி பயில்வதற்கு ஸ்தாபகராக இருந்தவர்.

மேலும் பல உலக நாடுகளுக்கு சென்று இந்து மதத்துக்கான அடையாளங்களை வெளியில் கொண்டுவந்தவர். இவர் கொழும்பு முகத்துவார சர்வார்த்த சித்தி விநாயகர் ஆலயத்தின் பிரதம குருக்களும் யாழ் வண்ணார்பண்ணை அமரர் இராமச்சந்திர குருக்கள் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய கோவிலடி மகேஷ்வரி அம்பாள் அம்மையார் தம்பதிகளின் புதல்வனும் ஆவார். அவருக்கு எல்லாம் வல்ல இறைவன் ஆசி பெற்று இந்து மதம் மற்றும் கலாச்சாரம்சார் சேவைகளை மேலும் ஆற்ற வேண்டுமென இந்து குருமார்கள் மற்றும் இந்துக்கள் அவருடைய பிறந்த தினத்தையொட்டி வாழ்த்து தெரிவித்துள்ளனர்

பஸ், ரயில் பயணச் சீட்டுக்கு பதிலாக போக்குவரத்து அட்டை

விரைவில் நாடு முழுவதும் அமுல்

பயணிகள் பஸ்கள் மற்றும் ரயில்களில் பயணச்சீட்டுக்குப் பதிலாக புதிய போக்குவரத்து அட்டையை அறிமுகப்படுத்துவதற்கான ஒப்பந்தம் நேற்று (01)கைச்சாத்தானது.

போக்குவரத்து அமைச்சு, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபையை உள்ளடக்கி இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

மாகும்புர காலி அதிவேக நெடுஞ்சாலையில் பஸ்களுக்கான இந்தப் புதிய சேவை உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும்,

04

பெயர்மாற்றம்

மாத்தளை மாவட்ட உக்குவளை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட இல.34/A, மட்டாவ வீதி, வரக்காமுறை எனும் முகவரியைச் சேர்ந்த முஹம்மட் அப்ரார் Fாத்திமா சஹ்னாஸ் ஆகிய நான் எனது பெயரை மேற்குறிப்பிட்டவாறு முஹம்மட் அப்ரார் Fாத்திமா சஹ்னாஸ் என எதிர்காலத்தில் சகல ஆவணங்களிலும் பிரயோகிப்பேன் என இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசிற்கும் பொது மக்களுக்கும் இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முஹம்மட் அப்ரார்
Fாத்திமா சஹ்னாஸ்
(தே.அ.அ.இல:200058503783)

கணித ஆசிரியர் உடன் தேவை

தரம் 06 - க.பொ.த. (சாதாரணம்) வரை கற்பிக்க கூடிய கணித ஆசிரியர் தேவை.

பாத்திமா பெண்கள் பாடசாலை
191/50 , மங்கள உயன ,திம்பிரிகஸ்யாய,
கொழும்பு – 05

- தொடர்புக்கு -
Mrs. Lamaan (077) 554 1177
Mrs. Saidiya (077) 113 0502

வசந்த முதலிகேயுக்கு 03 வழக்குகளில் பிணை

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அழைப்பாளர் வசந்த முதலிகேவுக்கு மேலும், மூன்று வழக்குகள் தொடர்பில் கோட்டை நீதவான் நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதி வழங்கியுள்ளது.

இது தொடர்பான வழக்குகள் நேற்று (01)

04

மக்கள் வங்கி

தங்க நகை அடகுப் பொருட்கள் ஏலவிற்பனை

மக்கள் வங்கியின் பதுளை பிராந்தியத்திற்கு உட்பட்ட கீழ்க்காணும் கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் 30.09.2021 ம் திகதிக்கு முன் அடகு வைக்கப்பட்டு 24.02.2023ம் திகதி வரை மீட்கப்படாத அடகு நகைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் கீழ்க்காணும் இடங்களில் மு.ப. 9.00 மணி முதல் ஏலத்தில் விற்கப்படும்.

	கிளை/சேவை நிலையம்	ஏலவிற்பனைத் திகதியும், ஸ்தானமும்
01	**கிளைகள் :-** பதுளை, மஹியங்கனை, பசறை, ஹாலிஎலை, கந்தகெட்டிய, லுனுகலை, கிராந்துருகோட்டை, பதுளை முதியங்கனை **சேவை நிலையங்கள் :-** பதுளை, வெலேகடை, பதுளை பஸார் வீதி, மடுல்சீமை, தெமோதரை, எட்டம்பிட்டிய, மிகஹகிவுல, நவமெதகம, பதுளை லோவர் வீதி, பதுளை மாவட்ட செயலக காரியாலயம், ஊவா மாகாண சபை	2023.02.25 ம் திகதி மற்றும் 2023.02.26 ம் திகதி பதுளைக் கிளைத் தொகுதியில்
02	**கிளைகள் :-** வெளிமடை, கெப்பெட்டிபொல, ஊவாபரணகம, பொரலந்தை, பண்டாரவளை, ஹப்புத்தளை, கொஸ்லந்தை, ஹல்தும்முல்லை, தியத்தலாவை **சேவை நிலையங்கள் :-** வெளிமடை நகரம், லுணுவத்த, மெதவெல, போகஹகும்புர, பண்டாரவளை நகரம், பண்டாரவளை சிங்ஹகிரி, பெரஹெட்டிய, பல்லகெட்டுவ	2023.02.25 ம் திகதி மற்றும் 2023.02.26 ம் திகதி பண்டாரவளைக் கிளைத் தொகுதியில்

மேற்குறிப்பிடப்பட்ட படி நடைபெறவுள்ள இவ் ஏலவிற்பனையை அறிவித்தல் எதுவுமின்றி வங்கியின் விருப்பத்திற்கேற்ப இரத்துச் செய்யவோ ஒத்தி வைக்கவோ ஒன்றிணைந்து நடாத்தவோ அல்லது ஏலவிற்பனை நடைபெறும் இடத்தை மாற்றியமைக்கவோ நடவடிக்கைகளை மேற்கொள்ள வங்கிக்கு அதிகாரமுள்ளது.

பிரதேச முகாமையாளர்
மக்கள் வங்கி,
பிரதேச பிரதான அலுவலகம்
இல. 24, R.H. குணவர்த்தன மாவத்தை, பதுளை.

மக்கள் வங்கி
PEOPLE'S BANK
www.peoplesbank.lk
AA+ (lka) Fitch Rating, AA - Brand Finance Rating

வெற்றிடம்

எமது குழுவுடன் இணைவதற்கு இலட்சியம் கொண்ட பிரதேச முகாமையாளர்களை நாம் தேடுகிறோம். ஒதுக்கப்பட்ட மதுபானசாலைகளின் செயற்பாடுகளுக்கு நீங்கள் பொறுப்பு வகிப்பீர்கள். எமது ஊழியர்களுக்கும் நீங்கள் பொறுப்பாக இருப்பீர்கள். எனவே முன்னுதாரணமாக தலைமை வகிக்கும் கடுமையாக உழைக்கும் ஒருவராக இருக்க வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

பிரதேச முகாமையாளர்கள்

தகைமைகள்

1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிர்வாகம்/ வர்த்தக முகாமைத்துவம்/ பொது நிர்வாகம்/ பொருளியல் அல்லது வர்த்தகத் துறையில் பட்டம்.

மற்றும்

2. பதவிக்குத் தொடர்புடைய விடயப் பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் இடைநிலை சான்றிதழை பூர்த்தி செய்திருத்தல்.

பணிகள் மற்றும் பொறுப்புகள்

- பிராந்திய செயற்பாட்டு முலோபாயத் திட்டம், செயற்படுத்தல் மற்றும் கண்காணிப்பு.
- பிரதேசத்தில் உள்ள விற்பனை நிலையத்திற்கான இலக்குகள் மற்றும் நோக்கங்களை அமைத்தல்.
- பிரதேசத்திற்குள் செயல்திறனை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்பார்வையிடல்.
- புதிய ஊழியர்களை பணியில் அமர்த்தல் மற்றும் பயிற்சி அளித்தல்.
- விற்பனை நிலையங்களில் KPI (செயல்திறன் குறிகாட்டிகள்) மற்றும் அறிக்கை அமைத்தல்
- நிறுவனத்தின் கொள்கைகள் மற்றும் செயற்பாட்டு வழிகாட்டல்களை பின்பற்றுவதை உறுதி செய்தல்.
- ஊழியர்களின் முறைப்பாடுகளை கையாளுதல், செயல்பாட்டு தடைகளை அடையாளம் காணல் மற்றும் மேம்பாட்டுக்கான தீர்வுகளை பரிந்துரைத்தல்.
- வருவாயை அதிகரித்தல்
- பிராந்திய பயிற்சிகளை திட்டமிட்டு செயல்படுத்தல்

சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்

- சம்பள அளவு - JM 1-1 ரூபா 42,600 [10 x 755 – 18 x 1,135 – 70,580] தவிர, அரசின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
- ஏனைய நன்மைகள் - (மீளளிப்பு அடிப்படையில்) 50,000.00 ரூபா போக்குவரத்துக் கொடுப்பனவுகள், 5,000.00 ரூபா பிரதேச முகாமையாளர் கொடுப்பனவு மற்றும் 1,125.00 ரூபா தொடர்பாடல் கொடுப்பனவு.

அனைத்து விண்ணப்பதாரர்களும்

i. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
ii. 45 வயதுக்குக் கீழ் இருத்தல் வேண்டும்.
iii. நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும் பதவியின் பணிகளை மேற்கொள்வதற்கும் உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.
iv. சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.
v. சில்லறை வர்த்தகத்தில் அனுபவத்திற்கு அதிக முன்னுரிமை அளிக்கப்படும்

நீங்கள் சரியான தகைமைகள் மற்றும் அனுபவத்தை பெற்றவராக இருந்தால், சான்றிதழ்களின் பிரதிகளுடன் உங்களது சுயவிபரக்கோவையை கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது vacancies@lankasathosa.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு, இந்த விளம்பரம் வெளியான 10 நாட்களுக்குள் அனுப்பவும்: (கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்/ மின்னஞ்சலின் "Subject" பகுதியில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்)

தேர்வு செய்யப்பட்ட அபேட்சகர்களுடன் மாத்திரமே நிறுவனம் தொடர்புகொள்ளும்.

தலைவர், லங்கா சதொச லிமிடட்,
இல. 27, CWE செயலகக் கட்டிடம்,
வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு (SLTB)

டியூப்களையும் மடல்களையும் வழங்கி விநியோகிப்பதற்கான விலைமனு

பெறுகை இலக்கம்:- SMOT/04/11/SLTB/07

மேற்படி தலைப்பில் கடந்த 2023.01.30ம் திகதி தினகரன் நாளிதழ் 11ஆம் பக்கத்தில் பிரசுரமான விளம்பரத்தின் 7ஆம் பந்தி பின்வருமாறு திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.

7. 2023.02.22 பி.ப. 2.00 அல்லது அதற்கு முன் பத்தரமுல்ல, செத்சிரிபாய கட்டம் II, 7ம் மாடி, போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு கணக்குப் பிரிவில் இந்த நோக்கத்திற்காக குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் விலைமனுக்கள் வைப்பிலிடப்படல் வேண்டும்.

தலைவர்,
அமைச்சு பெறுகைக்குழு,
போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சு.

சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு புதிய உறுப்பினர்கள் தெரிவு

விண்ணப்பம் கோரல் நேற்று முதல் ஆரம்பம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

தேர்தல் ஆணைக்குழு உள்ளிட்ட அனைத்து சுயாதீன ஆணைக்குழுக்களுக்குமான உறுப்பினர்களை நியமிப்பதற்கு விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

அதேவேளை இதுதொடர்பான விளம்பரங்கள், தேசிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டுள்ளன. எதிர்வரும் (15) வரை விண்ணப்பங்கள் பெறுப்பேற்கும் நடவடிக்கைகள் இடம்பெறுமென, பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

அனைத்து சுயாதீன ஆணைக்குழுக்களினதும் உத்தியோகபூர்வ காலம் 21ஆவது அரசியல் அமைப்பு நிறைவேற்றப்பட்டதால், ரத்தாகுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிக்கும் போது, தேர்தல் ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்களை நியமிக்க வேண்டாமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

தேர்தலில் மட்டுமே கவனம்... 03ஆம் பக்கத் தொடர்

இது தொடர்பில் மக்கள் புரிந்து கொள்ள வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்களுடனான சந்திப்பிலே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியை கண்டு S.J.B... 03ஆம் பக்கத் தொடர்

பெறுவார்களென ஜே.வி.பி.யினர் கூறினாலும் தங்களது கட்சியைப் பின்னுக்குத்தள்ள, வாக்காளர் எண்ணிக்கையை 08 மடங்கு அதிகரிக்க வேண்டுமென கூறியுள்ளார்.

1971 ஆம் ஆண்டு கிளர்ச்சி மூலம் நாட்டை அழித்த ஜே.வி.பி., அன்றிலிருந்து தொடர்ந்து நாட்டில் நாச வேலைகளை மேற்கொண்டு வருவதாகவும் எஸ்.எம். மரிக்கார் குற்றம் சாட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் அவர்கள் பொருளாதாரம், விவசாயம், கல்வி மற்றும் ஏனைய துறைகளை அபிவிருத்தி செய்வதற்கான தமது திட்டங்களை வெளிப்படுத்த வேண்டுமென்றார்.

பஸ், ரயில்... 03ஆம் பக்கத் தொடர்

கூடிய விரைவில் இந்த முறை நாடு முழுவதும் விரிவுபடுத்தப்படுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மார்ச் மாத இறுதிக்குள் கையடக்க தொலைபேசியூடான செலுத்துகைகளும் செயற்படுத்தப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வசந்த முதலிகேயுக்கு... 03ஆம் பக்கத் தொடர்

அழைக்கப்பட்ட போது, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதேவேளை, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழான குற்றச் சாட்டிலிருந்து வசந்த முதலிகேவை விடுவித்து கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பித்தது.

அத்துடன், நிலுவையிலிருந்த மேலும் 03 வழக்குகளில், வசந்த முதலிகேவுக்கு நேற்று பிணையில் செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

இந்திய – சீன எல்லைப் பகுதியில் பாரிய விமான யுத்தப் பயிற்சி: பெப்ரவரியில் நடத்த இந்தியா ஏற்பாடு

கடந்த டிசம்பர் ஒன்பதாம் திகதி அருணாசல பிரதேச தவாங் பகுதியில் இந்திய – சீன எல்லையோரமாக இரு தரப்பு படையினர் மத்தியில் ஏற்பட்ட மோதல்களையடுத்து கடந்த மாதம் வடகிழக்கு பிராந்தியத்தில் இந்திய விமானப்படை யுத்தப் பயிற்சிகளில் ஈடுபட்டது.

இதையடுத்து அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் 5ம் திகதி வரை மற்றொரு பாரிய அளவிலான போர் விமான பயிற்சி நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக இந்திய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. இப் பயிற்சியில் ஏர்குலஸ் விமானங்கள், சினூக் பளுதூக்கி ஹெலிகள், அப்பாச் தாக்குதல் ஹெலிகள் ஈடுபடுத்தப்படும் என மேலும் விவரங்கள் வெளியாகியுள்ளன. இந்தியாவின் கிழக்கு பிராந்திய எல்லைப் பகுதியில் சீன விமானங்களின் நடமாட்டம் அவதானிக்கப்பட்டதையடுத்து இந்திய விமானப்படை சுக்கோய் ரக ஜெட் யுத்த விமானங்களை எல்லைப் பாதுகாப்புக்காக பயன்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. இதே சமயம் கிழக்கு லடாக் எல்லைப் புறமாக 50 ஆயிரத்துக்கும் அதிகமான படையினரையும் கனரக ஆயுதங்களையும் சீனா குவித்து வருகிறது. சிக்கிம் மற்றும் அருணாசல பிரதேச எல்லையோரமாக சீன இராணுவம் படை குவிப்பை நடத்தி வருவதோடு 4500 துருப்பினரைக் கொண்ட இரண்டு மேலதிக படைப்பிரிவுகளை நகர்த்தி இருப்பதாக பாதுகாப்பு அமைச்சு தகவல் தெரிவித்துள்ளது.

இதே சமயம், சிக்கிம், பூட்டான் மற்றும் திபெத் ஆகிய மூன்று நாடுகளின் எல்லைகள் சந்திக்கும் டொக்லாம் பகுதியில் சீன இராணுவம் அடிப்படை கட்டுமானங்களை எல்லையோரமாக அமைத்து வருகிறது. டொக்லானில் சீனா பாதை அமைக்க, முன்னர் முற்பட்டபோது இந்திய இராணுவம் அதைத் தடுத்தது.

இப் பின்னணியிலேயே இப் பிராந்தியத்தில் இந்தியா பாரிய விமான பயிற்சியை நடத்தவுள்ளது.

அயர்லாந்தில் கல்வி கற்க இந்திய மாணவர்களுக்கு அழைப்பு

உயர்கல்விக்கு பொருத்தமான இடம் என தூதுவர் தெரிவிப்பு

இந்திய மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் அயர்லாந்துக்கு வர வேண்டும் என்றும் உயர் கல்விக்கான செலவு பிரிட்ஷ், அமெரிக்காவை விட டப்ளினில் குறைவு என்றும் கூறி, இந்தியாவுக்கான அயர்லாந்து தூதுவர் பிரண்டன் வார்ட் 'த பிரிண்ட்' ஊடகத்துக்கு அளித்த பேட்டியில் இந்திய மாணவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த வருடம் அதிக அளவில் இந்திய மாணவர்களுக்கு உயர் கல்விக்காக விசா வழங்கிய நாடாக திகழ்கின்ற போதிலும் வெளிநாடுகளில் கல்வி பெறும் மொத்த மாணவர் தொகையில் அயர்லாந்தில் கல்வி கற்கும் இந்திய மாணவர் தொகை ஒரு சதவீதத்துக்கும் சற்று அதிகம்.

அயர்லாந்தின் தலைநகரான டப்ளினில் இந்திய உயர்கல்வி மாணவர்களின் கற்கைக்கு போதிய வசதிகள் காணப்படுவதாகவும் ட்ரினிடி கல்லூரி மற்றும் யுனிவர்சிட்டி கல்லூரி என்பன பிரசித்தமானவை எனவும் தன் செவ்வியில் குறிப்பிட்டுள்ள தூதுவர் பிரண்டன் வார்ட், 102 நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் டப்ளினில் கல்வி கற்பதாகவும் பெரும்பாலான மாணவர்கள் இந்தியாவையும் சீனாவையும் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

முதுகலை மற்றும் கலாநிதி கற்கைகளுக்காகவே அதிக அளவில் இந்திய மாணவர்கள் டப்ளின் வருவதாகவும் பட்டப்படிப்பு மாணவர்கள் அதிக அளவில் வரவேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ள அவர், நாட்டின் மொத்த சனத்தொகையில் 50 ஆயிரம் பேர் இந்தியர்கள் என்றும் இந்திய கோவில்கள், உணவகங்கள், பொழுது போக்கு கழகங்கள், பலசரக்குக் கடைகள் என்ற இந்தியச் சூழல் டப்ளினில் காணப்படுவதாகவும் விவரித்துள்ளார்.

கடந்த ஆண்டில் மாத்திரம் டில்லி அயர்லாந்து தூதரகம் 6,422 மாணவர் விசாவை அளித்திருக்கிறது.

பேராசிரியர் மீதான தாக்குதல் சம்பவம்

பேராதனை பல்கலை மாணவர் 14 பேர் பிணையில் விடுவிப்பு

(எம்.ஏ.அமீனுல்லா)

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தரும், சிரேஷ்ட பேராசிரியருமான அத்துல சேனாரத்ன மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களை தாக்கி உத்தியோகபூர்வ இல்லத்துக்கு சேதம் விளைவித்த சம்பவம் தொடர்பில், கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 14 மாணவர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

ஒவ்வொரு மாணவரும் தலா 15,000 ரூபா மற்றும் 05 இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளில், இவர்களை விடுவிக்க மஜிஸ்திரேட் ஸ்ரீநித் விஜேசேக்கர உத்தரவிட்டார்.

பிணையில் விடுவிக்கப்பட்ட பேராதனை பல்கலைக்கழக மாணவர் சங்கத் தலைவர் சாமோத் சத்சர, மாதத்தில் முதலாம் மற்றும் மூன்றாம் வார ஞாயிற்றுக்கிழமைகளில் 09:00 மற்றும் 12:00 க்கு இடையில் கொழும்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட குற்றவியல் (03) பிரிவில் ஆஜராக வேண்டும் எனவும் மஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

ரொக்கப் பிணையிலும், சரீரப் பிணையிலும் விடுவிக்கப்பட்ட மாணவர்களுக்கு மேலும் பல நிபந்தனைகளை விதித்த மஜிஸ்திரேட், மீறினால் பிணை இரத்து செய்யப்படும் என்று அறிவித்தார்.

மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவர் அனுராதா விதானகே உள்ளிட்ட 13 மாணவர்களையும் ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கும் 12.00 மணிக்கும் இடைப்பட்ட காலத்தில் கொழும்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட குற்றப்பிரிவு (03) பிரிவில் ஆஜராகுமாறு மஜிஸ்திரேட் அறிவித்துள்ளார். சந்தேக நபர்கள் வெளிநாடு செல்லவும் தடை விதிக்கப்பட்டது.

இந்த வழக்கில் சாட்சியங்களை வழங்கிய முறைப்பாட்டின் சாட்சிகள் மற்றும் எதிர்காலத்தில் சாட்சியமளிக்கவுள்ளமாணவர்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்த வகையிலும் இடையூறுகளை ஏற்படுத்தக்கூடாதெனவும் சந்தேகத்திற்குரிய மாணவர்களுக்கு மாஜிஸ்திரேட் அறிவித்துள்ளார்.

இந்த வழக்கு மார்ச் (15) மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இலங்கையின் நிலை...

இச்சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, இலங்கையை வழமை நிலைக்குக் கொண்டுவரும் முயற்சிகளுக்கு அமெரிக்கா தொடர்ந்தும் ஆதரவளிக்கும். சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் தொடர்பிலும் அமெரிக்கா கவனம் செலுத்தும் என்றார். இதன்போது,நாடு எதிர்நோக்கும் மிகவும் கடினமான சூழ்நிலையில் அமெரிக்கா வழங்கிய ஆதரவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது நன்றியைத் தெரிவித்தார்.

13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பில், சிறிய கட்சிகளுடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பிலான நடவடிக்கைகள் குறித்தும் இச்சந்திப்பில் ஜனாதிபதி தெளிவுபடுத்தினார். அதிகரித்து வரும் போதைப்பொருள் வர்த்தகத்துக்கு எதிராக தொடர்ச்சியாக எடுக்கப்படும் முயற்சிகள் குறித்தும் இதில் கவனம் செலுத்தப்பட்டது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, ஜனாதிபதியின் சர்வதேச உறவுகள் பணிப்பாளர் தினுக் கொலம்பகே, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் உள்ளிட்ட குழுவினர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

25,000 மெ.தொன் யூரியாவை...

மேலும் 25,000 மெற்றிக்தொன் உரத்தை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த உரங்களுக்கு மேலதிகமாக மேலும் 25,000 மெற்றிக்தொன் கொள்வனவு செய்வதற்காகவே 10 பில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். அதற்கிணங்க, ஒரு இலட்சம் மெற்றிக் தொன் யூரியா உரத்தை கையிருப்பில் வைத்துக்கொள்வதற்கும் அதன்மூலம் சிறுபோக நெற் பயிர்ச்செய்கை மற்றும் சோளப் பயிர்ச்செய்கை உள்ளிட்ட பயிர்ச் செய்கை நடவடிக்கைகளுக்கு அதனைப் பெற்றுக்கொடுக்கவும் எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

கோதுமை மா, சிவப்பரிசி உட்பட...

ரூபாவினால் குறைக்கப்பட்டு, 1,675 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது. ஒரு கிலோ பெரிய வெங்காயம் 15 ரூபாவினால் குறைக்கப்பட்டு 165 ரூபாவுக்கும், உள்நாட்டு சிவப்பரிசி 10 ரூபாவினால் குறைக்கப்பட்டு 169 ரூபாவுக்கும், கோதுமை மா 05 ரூபாவினால் குறைக்கப்பட்டு 230 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படவுள்ளதாக லங்கா சதொச அறிவித்துள்ளது.

நௌபர் மௌலவி உட்பட 25 பேருக்கு...

உள்ளிட்ட பிரதிவாதிகள் 25 பேருக்கு எதிராக சட்ட மாஅதிபரினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கின் விசாரணையை இம் மாதம் 28 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு கொழும்பு மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் தீர்மானித்துள்ளது.

மேற்படி வழக்கு விசாரணை நேற்றைய தினம் நீதிபதிகளான தமித் தொட்டவத்த, அமல் ரணராஜா மற்றும் நவரத்ன மாரசிங்க ஆகிய மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே வழக்கு விசாரணைகளை இம்மாதம் 28 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்போது விசாரணைக்குத் தேவையான ஆவணங்கள் அவசியமானால் அதனை சட்ட மாஅதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறு நீதிபதிகள் குழாம் பிரதிவாதிகளின் சட்டத்தரணிகளுக்கு நேற்று அறிவுறுத்தல் வழங்கியது.

இக் குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் 23,270 குற்றங்களின் கீழ் நௌபர் மௌலவி, சஜிட் மௌலவி, மொஹம்மட் மில்ஹான், சாதிக் அப்துல்லா, ஆதம் லெப்பே, அலியஸ் நௌபர், முஹம்மட் சம்சுதீன் உள்ளிட்ட 25 பேருக்கு எதிராக சட்ட மாஅதிபரால் வழக்குத் தொடரப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடவுச்சீட்டு பெற்றுத் தருவதாக...

பெறப்பட்டு பண மோசடி செய்யப்பட்டுள்ளது. தலங்கம பொலிஸாருக்கு கிடைத்த மூன்று முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கமைய, நேற்று முன்தினம் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபரிடம் முறைப்பாடு செய்த இருவரின் தேசிய அடையாள அட்டைகளும் கண்டுபிடிக்கப்பட்டன. சந்தேகநபரிடமிருந்து தேசிய அடையாள அட்டை, 15,000 ரூபாய் பணம் மற்றும் கடவுச்சீட்டுத் தயாரிக்க பயன்படுத்தப்படும் 09 போலி டோக்கன்கள் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 47 , 65 வயதுடைய மாலபே மற்றும் கொழும்பு 09 ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களென தெரியவந்துள்ளது. இவர்களை நேற்று கடுவெல நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

எந்தவொரு அரச நிறுவனத்தையும் மூடத் தீர்மானிக்கவில்லை

நாட்டிலுள்ள எந்தவொரு அரச நிறுவனத்தையும் மூடுவதற்கு தீர்மானிக்கப்படவில்லையென பிரதமர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். தற்போதைய பொருளாதாரம் மற்றும் சமூக நிலை தொடர்பில் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுடன் அலரிமாளிகையில் நடைபெற்ற சந்திப்பிலே, அவர் இதனைக் குறிப்பிட்டார். நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலையில் தனியார் மற்றும் அரச நிறுவனங்களுக்கு பாரிய பொறுப்புகள் உள்ளன. அந்நியச் செலாவணியை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எந்த அரச நிறுவனங்களையும் மூடுவதற்கு இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லையெனவும் பிரதமர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இடைக்கால மின் கட்டண திருத்தம்

நடைமுறைப்படுத்துவதை தவிர்க்க பொது பயன்பாட்டு ஆணைக்குழு இணக்கம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் இடைக்கால மின் கட்டண திருத்தத்தை நடைமுறைப்படுத்தாதிருக்க, பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் சகல உறுப்பினர்களும் ஏகமனதான தீர்மானித்துள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார். ஆணைக்குழுவின் தலைவரின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், அங்கத்தினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்திற்கு ஆணைக்குழுவின் மூன்று உறுப்பினர்கள் சூம் தொழில்நுட்பம் மூலம் கலந்து கொண்டனர். அவர்களும் இதற்கு தமது முழுமையான இணக்கப்பாட்டைத் தெரிவித்துள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை பொது க.பொ.த. உயர்தரப் பரீட்சை காலங்களில் மின்துண்டிப்பை மேற்கொள்வதா? இல்லையா?என்பது தொடர்பான உயரதிகாரிகள் மட்டப் பேச்சுவார்தை ஒன்றும் நடைபெற்றுள்ளது. இன்றைய தினம் இதற்கான தீர்மானம் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல்...

329 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுவதுடன் மொத்தம் 80 ஆயிரத்து 720 வேட்பாளர்கள் இம்முறை தேர்தலில் போட்டியிடவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள விஷேட வர்த்தமானியானது நாடளாவிய 23 நிர்வாக மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ளது.

தேர்தல்கள் நடைபெறவுள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளின் பெயர் விபரங்களும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஊழியர்கள் எண்ணிக்கையை குறைக்க...

சுற்றறிக்கைகளுக்கு அமைச்சின் செயலாளர்கள் அனைவரும் கட்டுப்பட்டுள்ளனர். அரச சேவையில் புதிதாக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படமாட்டாது.அரச துறையில் நிலவும் வெற்றிடங்கள், அரச நிறுவனங்களில் பணிபுரிவோர்க ளால் நிரப்பப்படும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். "உதாரணமாக, புதிதாக 29,000 ஆசிரியர்களை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவர்கள் பரீட்சை மூலம் அரசாங்கத் துறையின் உற்சாகமான பணியாளர்களிலிருந்து ஆட்சேர்ப்பு செய்யப்படுவர்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சீனத் தூதரக கடிதத் தலைப்பில்...

அமைச்சருக்கு அறிவித்துள்ளார்.

சீனத் தூதரகத்தின் அதிகாரபூர்வ கடிதத் தலைப்பில் கடந்த (18) இடப்பட்டு இந்த போலிக் கடிதம் வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. நிலுவைக் கடன்களுக்கு தவணை வழங்கப்பட முடியாதெனவும்,கொவிட்19 காரணமாக தமது நாடும் பொருளாதார ரீதியாக பின்னடைவை சந்தித்துள்ளதாகவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும் இந்தத் தகவல்கள் பொய்யானவையெனவும் அதிகாரபூர்வமான தகவல்களை மட்டும் கருத்திற் கொள்ளுமாறும் சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

திடீர் மின்சாரத் தடை...

ஏற்பட்ட கோளாறினால், நேற்று முன்தினம் 9.30 மணியளவில் இவ் வைத்தியசாலையில் மின்தடை ஏற்பட்டது.

இதன் காரணமாக நோயாளிகள் உட்பட ஒட்டுமொத்த ஊழியர்களும் பெரும் சிரமத்துக்குள்ளாகினர். எனினும் உடனடியாக நோயாளிகளை பரிசோதிக்கும்பொருட்டு கையடக்கத் தொலைபேசி ஒளியைக் கொண்டு நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து சுமார் ஒரு மணி நேரத்தின் பின்னர் மின் விநியோகம் சீரமைக்கப்பட்டதாக வைத்தியசாலை பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களூடாக 2022 இல் 3,789 மில்.டொலர் வருமானம்

மத்திய வங்கி தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாட்டிலிருந்து 2022ஆம் ஆண்டில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சென்றுள்ளவர்கள் மூலம் 3,789 மில்லியன் அமெரிக்க டொலர் நாட்டுக்கு கிடைத்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதேவேளை 2021ஆம் ஆண்டு இவ்வாறு நாட்டிலிருந்து வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சென்றுள்ளவர்கள் மூலம் 5,491 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைத்துள்ளதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் மேலும் தெரிவித்துள்ள மத்திய வங்கியின் அதிகாரிகள், 2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அந்த வருமானம் 2022ம் ஆண்டு 31.0 வீதமாக குறைவடைந்து ள்ளதாகவும், எவ்வாறெனினும் கடந்த வருடத்தின் நடுப்பகுதியில் அதனை இயல்பு நிலைக்கு கொண்டுவர முடிந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

சுதந்திரதின விழா மேடையை படம் பிடித்த இருவர் கைது

சுதந்திர தின வைபவத்துக்காக காலிமுகத்திடலில் நிர்மாணிக்கப்பட்டு வரும் மேடை உள்ளிட்ட இடங்களைப் படம் பிடித்துக் கொண்டிருந்த போராட்டக் குழுவைச் சேர்ந்த இருவர், கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். நேற்று முன்தினம் இரவு (31) 8.00 மணியளவில் இந்த இடத்தை அனுமதியின்றி இருவரும் புகைப்படம் எடுத்தனர்.இதன் போது,அங்குநின்றபொலிஸார்இவர்களைக் கைது செய்து கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். இவர்கள், கொழும்பு மற்றும் காலி பிரதேசத்தை சேர்ந்தவர்களென பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக இருவரிடமும் வாக்குமூலம் பெறப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். சம்பவம் தொடர்பில் கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பொரளை சிறுநீரக மோசடி சம்பவம் மற்றுமொரு தரகர் வெல்லம்பிட்டியில் கைது

சிறுநீரக மோசடி தொடர்பில் வெல்லம்பிட்டிய பிரதேசத்தில் மற்றுமொரு தரகர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரிகள் இவரைக் கைது செய்தனர்.இவரிடமிருந்து இரண்டு கையடக்க தொலைபேசிகளும் மீட்கப்பட்டன. பொரளை பிரதேசத்திலுள்ள தனியார் வைத்தியசாலை சட்டவிரோதமாக சிறுநீரக மாற்றுச் சிகிச்சையில் ஈபடுவதாக பெண்ணொருவர்உட்படஐவர்,பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.இம்முறைப்பாட்டின் பிரகாரம் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.இதில் பலர் கைதாகியிருந்தனர்.இந்நிலையிலே, கொலன்னாவ பிரதேசத்தை சேர்ந்த 53 வயதுடைய இந்நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை நேற்று (31) புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஆரோக்கிய அறிவியல்

முஹம்மத் மர்லின்

வளி மாசடைதலும் பக்வாதத்துக்கு காரணமா?

முதியவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய நோய்களில் ஒன்று தான் பக்கவாதமாகும். உலக அளவில் அதிகளவானோர் உயிரிழப்பதற்கு காரணமான இரண்டாவது நோயாக இதுவே விளங்குகிறது. ஒவ்வொரு ஐந்து விநாடிக்கு ஒருவர் இந்நோயினால் உயிரிழக்கின்றனர். அத்தோடு இந்நோய்க்கு உள்ளாகின்றவர்களில் பெரும்பாலானவர்கள் அடுத்தவரில் தங்கி இருக்க வேண்டிய நிலைக்கே உள்ளாவர்.

அதேநேரம் இந்நோயினால் பாதிக்கப்படுபவர்கள் கிராமங்களை விடவும் நகரங்களில் தான் அதிகம்.

ஒருவரின் மூளையில் உள்ள இரத்தக் குழாய்களில் ஏற்படும் பாதிப்புகளால் மூளையின் இழையங்கள் பாதிப்படையும். அதன் விளைவாக கை, கால் மற்றும் வாய்ப்பகுதியில் ஏற்படும் செயலிழப்பே பக்கவாதம் எனப்படுகிறது.

பொதுவாக இதயத்திலிருந்து வெளியேறும் குருதி, கழுத்துப் பகுதியில் உள்ள குருதிக் குழாய்கள் ஊடாக சென்று மூளையின் இழையங்கள் ஆரோக்கியத்துடன் செயல்பட உதவுகிறது. அதன் பயனாக உடல் உறுப்புக்களின் அங்க இயக்கங்கள், பேச்சுத்திறன், சிந்தனைத் திறன், மனநிலை, பார்வை, கேட்கும் திறன், உடல் உணர்வுகளின் தன்மை ஆகியவை சீராகச் செயல்படுகிறது. அன்றாடப் பணிகளைச் சரியான முறையில் சுயசிந்தனையுடன் செய்ய அது வழிவகுக்கிறது.

ஆனால் மூளையின் இளையங்களில் பரவி இருக்கும் குருதிக் குழாய்களில் கொழுப்பு படியும் போது அடைப்புகள், குருதி உறைந்து போதல், சில நேரம் மூளையின் இழையங்களில் குருதி கசிந்து விடுதல் என்பன ஏற்படலாம்.

அதனால் மூளையின் கலங்களுக்குத் தேவையான குருதி செல்வதில் தடை ஏற்படும்.

அதன் விளைவாக மூளையின் கட்டுப்பாட்டில் உள்ள குறிப்பிட்ட உடல் பகுதிகளில் செயலிழப்பு ஏற்படலாம்.

இவை இவ்வாறிருக்க, பக்கவாதம் ஏற்பட காற்று மாசடைதலும் காரணமாக அமைவதாகக் கண்டறியப்பட்டுள்ளன. காற்று மாசடைதலானது சுவாசத் தொகுதியில் மாத்திரமல்லாமல் மூளையிலும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதென சில மருத்துவ நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர். அதாவது மூளையின் குருதிக் குழாய்களில் குருதிக்கசிவு ஏற்பட வளி மாசடைதல் பங்களித்து பாதிப்பை ஏற்படுத்த முடியும் என்பதும் அவர்களது கருத்தாக உள்ளது. அந்தவகையில், பக்கவாதம் காரணமாக உயிரிழப்பவர்களில் 15 வீதத்திற்கும் மேற்பட்டோரின் மரணத்திற்கு வளி மாசடைதலே காரணமென தெரிவிக்கப்படுகிறது.

பொதுவாக மூளையின் வலது பக்கம் பாதிக்கப்படும்போது உடலின் இடது பகுதியிலும், மூளையின் இடது பக்கம் பாதிக்கப்படும்போது உடலின் வலது பக்கத்திலும் பக்கவாதத்தன்மை வெளிப்படும்.

அதேநேரம் ஒருவருக்கு பக்கவாதம் ஏற்படுமாயின் அதற்கு முன்னரான இரண்டொரு தினங்களுக்குள் முகம், கை, பேச்சு என்பவற்றில் திடீரென சில வினாடிகள் மாற்றம் ஏற்பட்டு வழமைக்கு திரும்பிவிடும். அவ்வாறானவர்கள் தாமதியாது தகுதிவாய்ந்த மருத்துவரை அணுகி உரிய ஆலோசனையுடன் சிகிச்சை பெற்றுக்கொள்ளத் தவறக்கூடாது.

அவ்வாறான சிகிச்சையின் மூலம் பக்கவாதத்தின் தாக்கத்தைப் பலவீனப்படுத்திக் கொள்ளலாம்.

ஆனாலும் ஒருவருக்கு பக்கவாதம் ஏற்படுமாயின் பார்வைக் குறைபாடு, மனநிலை மாற்றம், சுய உணர்வில் தடுமாற்றம், தலைவலி, குமட்டல், வாந்தி, தலைசுற்றுதல், இரட்டைப் பார்வை, உடல் உணர்வில் மாற்றம், தள்ளாட்டம், நடையில் தடுமாற்றம், வலிப்பு போன்ற உபாதைகள் ஏற்படலாம். இவை பொதுவான அறிகுறிகளாக இருந்தாலும் உடலின் ஒரு பகுதி கை, கால்களை அசைக்க முடியாதபடி செயலிழப்பதோடு செயலிழந்த பகுதியில் முகம் கோணலாகி, வாயும் அசைக்க முடியாமல் போய்விடும். முகப் பகுதியும் வாதத்தால் பாதிக்கப்படும்போது பேசுவதில் சிரமம் ஏற்பட்டு, பேசும் போது நாக்குளறுதலும் ஏற்படும்.

என்றாலும் பக்கவாதம் என்பது கடந்த காலங்களில் குணப்படுத்துவதற்கு சிக்கலான நோயாக இருந்தது. ஆனால் தற்போது சிகிச்சை அளித்து குணப்படுத்தக்கூடிய சிகிச்சை முறைகள் பயன்பாட்டுக்கு வந்துள்ளன.

குறிப்பாக பக்கவாதத்தினால் ஏற்படக்கூடிய உயிரிழப்பைக் குறைப்பதில் நவீன சிகிச்சை முறைமைகள் பெரிதும் உதவுவதாக மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் மூளையில் குருதி உறைந்து பக்கவாதம் ஏற்படும்போது, அந்தக் குருதி உறைவைக் கரைத்து,

குருதியோட்டத்தைச் சீர்செய்யக்கூடிய மேம்பட்ட சிகிச்சை முறைமை பயன்பாட்டுக்கு வந்துள்ளது போன்று மூளையில் குருதிக்கசிவு ஏற்பட்டு உண்டாகும் பக்கவாதத்தைக் குணப்படுத்தவும் உரிய சிகிச்சைகள் உள்ளன. நவீன மருத்துவ விஞ்ஞானத்தின் பாரிய வெற்றியே இவை.

ஆகவே பக்கவாதத்தைத் தவிர்த்துக் கொள்வதில் ஒவ்வொருவரும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இதன் நிமித்தம் குருதியழுத்தம் ஏற்படாமல் தவிர்த்துக் கொள்ளவென குருதியழுத்தத்திற்கு உரிய சிகிச்சை அளித்து அதனை சீரான மட்டத்தில் பேணிக் கொள்வது இன்றியமையாததாகும்.

அதேநேரம் உடலின் குருதியழுத்தத்தை சீராகவும் ஒழுங்கு முறையாகவும் பேணிக்கொள்வதிலும் அதிக கவனம் செலுத்தத் தவறலாகாது.

குறிப்பாக உணவில் உப்பைக் குறைத்துக்கொள்வதோடு பொற்றாசியம் நிறைந்துள்ள பழங்களை உணவோடு சேர்த்துக் கொள்ளவும் வேண்டும்.

இதன் ஊடாகப் பக்கவாதம் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

மேலும் கொழுப்பு அதிகமுள்ள இறைச்சி வகைகளைத் தவிர்த்துக்கொள்வதும் நல்லது. அத்தோடு மது அருந்துதல், புகைபிடித்தல், போதைப்பொருள் பாவனை என்பவற்றை தவிர்த்துக்கொள்வதும் இந்நோயில் இருந்து விலகி இருக்கப்பெரிதும் உதவும்.

இவை மாத்திரமல்லாமல் மனச்சோர்வு மற்றும் மன அழுத்தத்தைக் குறைத்துக்கொள்ளுதல், உடற்பயிற்சி, தியானம் போன்றவற்றில் ஈடுபடுவதும் நல்லது. பக்கவாதத்தை உண்டாக்கும் நச்சுகள் உடலில் சேராமல் இருப்பதற்காகப் பொருத்தமான விட்டமின் மாத்திரைகளைப் பாவிக்கலாம்.

அது தொடர்பில் மூளை நரம்பியல் மருத்துவ நிபுணரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளத் தவறலாகாது.

மலச்சிக்கல் வராமல் பார்த்துக்கொள்வதும், மலம் கழிக்கும்போது அதிக சிரமப்படாமல் இருப்பதும் அவசியம்.

குருதியழுத்தம் உள்ளவர்கள் மூக்கு அடைப்பைப் போக்கப் பயன்படுத்தும் மூக்கு சொட்டு மருந்துகள், ஒவ்வாமை நீக்கி மருந்துகள் போன்றவற்றை மருத்துவர் ஆலோசனையுடன் பெற வேண்டும். இந்த அம்சங்களைக் கடைப்பிடிப்பது பக்கவாதத்தைத் தவிர்த்துக்கொள்ள பெரிதும் உதவும்.

உடல், உள ஆரோக்கியத்தில் மனநலத்தின் செல்வாக்கு

மர்லின் மரிக்கார்

பரபரப்பான வாழ்க்கைச் சூழலில் எதிர்காலத்தையும் கடந்த காலத்தையும் நினைத்துக்கொண்டே கடத்தும் நொடிகளின் தொகுப்பே நம்முடைய வாழ்வு. அந்த நொடியில் நாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் சவால்களும் ஏராளம். வீடு கட்டுதல், திருமணம், முடிக்க வேண்டிய வேலைகள், அருகில் உள்ளவர்களின் தொந்தரவு, அரசியல் நிகழ்வுகள், நோயுறுவது, வேலை இழப்பு, வாடகை, கடனுக்கான வட்டி என நாம் சந்திக்கும் பல சவால்கள் மன அழுத்தத்தை ஏற்படுத்தும் அளவுக்கு வீரியத்துடன் இருக்கின்றன.

மன அழுத்தம் என்ற வுடன், அது தீயது என்று முடிவுக்கு வர வேண்டியதில்லை. ஏனென்றால், மன அழுத்தத்தில் நல்லதும் உண்டு, தீயதும் உண்டு. ஆபத்து நேரத்தில் விரைந்து முடிவெடுக்கவும், பொறுப்பை நிறைவேற்றி முடிக்கவும், போட்டிகளுக்கும் நேர்முகத் தேர்வுகளுக்கும் தயாரிக்க, குடும்ப நிகழ்வுகளுக்கு முன்பாக ஏற்படுகிற அழுத்தம் உள்ளிட்டவை நல்ல மன அழுத்தம் (Eustress) ஆகும். மன அழுத்தம் நாட்பட்டதாக நிலைக்கும்போதே, அது உடல் நலனைப் பாதிக்கக்கூடியதாக அமைவதோடு உள நலனுக்கும் கேடானதாக வலுப்பெறும்.

மன அழுத்தம் என்பது ஓர் எதிர்வினைதான். ஆபத்து, அவமானம், காத்திருப்பு, ஏமாற்றம் உள்ளிட்ட சூழலில் அதைத் துணிந்து சந்திக்க வேண்டும் அல்லது விலகிச் செல்ல வேண்டும். இவற்றில் எதைத் தேர்ந்தெடுப்பது என்று சிந்தித்து முடிவெடுப்பதற்கு முன்பாகவே நம்முடைய எதிர்வினைகள் தொடங்கி முடிந்துவிடுகின்றன.

நாம் ஆபத்தான சூழலில் இருப்பதைக் கண்களும் காதுகளும் மூளைக்கு தெரியப்படுத்தியதும் உடலில் எண்ணற்ற மாற்றங்கள் ஏற்பட ஆரம்பிக்கும். குறிப்பாக இதயம் வழமைக்கு மாறாக வேகமாகத் துடிக்கும். தசைகளுக்கும், இதயத்துக்கும், முக்கிய உறுப்புகளுக்கும் குருதியோட்டம் அதிகரிக்கும். நாடித்துடிப்பும் குருதியழுத்தமும் அதிகரிக்கும். நுரையீரலில் உள்ள மூச்சு கிளைச் சிறுகுழல்கள் விரிந்துகொடுக்கும். ஒவ்வொரு முறையும் சுவாசிக்கும்போது இதன் வழியாகப் போதுமான ஒட்சிசனை நுரையீரல் பெற்றுக்கொள்ளும்.

ஒட்சிசன் அதிகளவில் மூளைக்கு அனுப்பப்பட்டு விழிப்புணர்வு அதிகரிக்கிறது. பார்வை, செவிமடுத்தல் உள்ளிட்ட மற்ற புலன்கள் கூர்மையடையும்.

எவ்வளவுதான் ஆபத்துகள் இருந்தாலும் சில மணி நேரங்களிலோ, சில நாட்களிலோ மூளை, நரம்பு தொகுதி, தசைகள், இதயம் உள்ளிட்டவை மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பிவிடுகின்றன. இருப்பினும், சிலர் தம் மன அழுத்தத்தை நிறுத்தி, சமநிலைக்கு வரும் வழி தெரியாமல் தவிக்கிறார்கள். மனித உடலின் தசைநார், சுவாச உறுப்புகள், இதயம், குருதிக்குழாய், நாளமில்லாச் சுரப்பி, இரைப்பைக் குடல், நரம்பு, இனப்பெருக்க தொகுதி உள்ளிட்டவை பாதிப்புக்குள்ளாகின்றன. மனம், உணர்ச்சி ரீதியிலான எதிர்வினையைக் கவலை, அவமானம், எரிச்சல், கோபம், சோகம், துயரம், நம்பிக்கையின்மை, படபடப்பு, அமைதியற்ற நிலை, மகிழ்ச்சியின்மை எனப் பல வகைகளில் வெளிப்படுத்தும். அது நாட்பட்ட மன அழுத்தமாக மாறுகிறபோது மனச்சோர்வு, பதற்றம், பாலுறவில் நாட்டமின்மை, கவனம் செலுத்துவதிலும் நினைவில் வைத்திருப்பதிலும் சிக்கல், நிலையில்லாத மனநிலை, போதைக்கு அடிமையாதல், அதிகப்படியான கோபம் போன்றவாறான அறிகுறிகளை அவதானிக்கலாம்.

ஒருவருக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்துகிற ஒரு நிகழ்வோ சூழலோ மற்றவருக்கும் அதே தாக்கத்தை உருவாக்கும் என எதிர்பார்க்க முடியாது. அதேபோன்று அனைவருக்கும் பொதுவான உத்திகள் என்று ஏதும் இல்லை. அதனால் மகிழ்ச்சியையும் மனத்துக்குச் சமநிலையையும் அளிக்கக்கூடிய செயற்பாடுகளில் ஈடுபடுவதில் கவனம் செலுத்துவது நல்லது.

குறிப்பாக ஓட்டம், நீச்சல் உள்ளிட்ட உடற்சக்தி அதிகம் தேவைப்படும் உடற்பயிற்சிகளைச் செய்வது உடலை இலகுவாக்கும், தியானம் உள்ளிட்ட மனச்சமநிலைப் பயிற்சிகள் மன அழுத்தக் காரணிகள் மீதான எதிர்வினையைப் பக்குவமாக வெளிப்படுத்த உதவும். மன அழுத்தம் தரும் நிகழ்வுகளில் விழிப்புடன் இருப்பதும், தொடர் பயிற்சிக்குப் பிறகும் இயல்பு நிலைக்கு வர இயலாவிட்டால் மனநல மருத்துவரின் ஆலோசனைப் பெற்றுக் கொள்வது அவசியம்.

தினகரன்
THINAKARAN
கிகைரன்
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சுபகிருது வருடம் தை மாதம் 19ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரஜப் பிறை 10

குறள் தரும் சிந்தனை

ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையார் இல்

படித்தும், படித்ததை உணர்ந்தும், உணர்ந்ததைப் பலருக்கு உணர்த்திடவும் கூடியவர்கள், தாங்கள் மட்டும் அவ்வாறு நடக்காமலிருந்தால் அவர்களைவிடப் பேதைகள் யாரும் இருக்க முடியாது.

மக்கள் நலனை முன்னிலைப்படுத்தி தீர்மானம் மேற்கொள்வதன் அவசியம்

உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படுமா? என்ற ஐயம் நிலவி வந்த சூழலில் எதிர்வரும் மார்ச் 09 ஆம் திகதி தேர்தல் நடத்தப்படுமென வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. அதன் ஊடாக இத்தேர்தல் நடத்தப்படுமா? என்ற ஐயம் நீங்கியுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு தேர்தல் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளில் அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் ஈடுபட்டுள்ளன.

இத்தேர்தலின் நிமித்தம் கடந்த ஜனவரி 18 முதல் 21 வரை மாவட்ட மட்டத்தில் வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அதற்கேற்ப நாட்டிலுள்ள 339 உள்ளூராட்சி மன்றங்களுக்கான இத்தேர்தலில் 58 அரசியல் கட்சிகள் மற்றும் 329 சுயேச்சைக் குழுக்கள் போட்டியிடுவதோடு 80 ஆயிரத்து 720 பேர் அபேட்சகர்களாகக் களமிறங்கியுள்ளனர்.

ஜனநாயகப் பாரம்பரியப்படி உரிய நேரகாலத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும். அதனை அடிப்படையாகக் கொண்டு மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட வேண்டும். இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

ஆனால் தேர்தலொன்றை நடத்துவதற்கு பெருந்தொகை நிதியைச் செலவிட நேரிடும். அவ்விதமான செலவுடன் தேர்தலொன்றை நடத்துவதற்கு ஏற்ற சூழலை நாடு இன்னும் அடைந்திருப்பதாகத் தெரியவில்லை.

கடந்த வருடம் மிகமோசமான பொருளாதார நெருக்கடிக்கு நாடு முகம்கொடுத்தது. அந்நெருக்கடியினால் நாடும் மக்களும் பல்வேறு விதமான அசௌகரியங்களுக்கும் பாதிப்புகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியேற்பட்டது. அந்நெருக்கடி கடந்த வருடம் மே முதல் ஜுலை வரையான காலப்பகுதியில் உச்சகட்டத்தை அடைந்திருந்தது.

இச்சூழலில் நாட்டின் தலைமைப் பதவியை ஏற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்களின் பயனாக பொருளாதார நெருக்கடியின் தீவிர நிலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஆனாலும் பொருளாதார நெருக்கடி தோற்றம் பெறுவதற்கு முன்னரான நிலையை நாடு இன்னும் அடைந்து கொள்ளவில்லை.

இவ்வாறான நிலையில் பெருந்தொகைச் செலவுடன் தேர்தலொன்றுக்கு செல்வதானது, பொருளாதார நெருக்கடியின் தீவிரநிலைக்கு மீண்டும் முகம்கொடுப்பதைத் தவிர்க்க முடியாது போய்விடும். அதுதான் பொருளாதார நிபுணர்களின் கருத்துமாகும்.

இன்றைய காலகட்டத்தில் தேர்தலொன்றை நடத்துவதாயின் அதற்கான ஒவ்வொரு ஏற்பாட்டுக்குமான செலவும் பொருளாதார நெருக்கடிக்கு முன்னரான காலத்தை விடவும் இரண்டு மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. இதற்கு காகிதாதிகளுக்கு ஏற்பட்டுள்ள செலவினங்கள் நல்ல எடுத்துக்காட்டாகும். தேர்தல்களில் காகிதாதிகளின் பயன்பாடு மிக அதிகம். வாக்காளர் இடாப்பு, வாக்குச்சீட்டு உள்ளிட்ட பல தேவைகளுக்கும் காகிதாதி மிக அவசியம்.

இதேபோன்று தான் ஏனைய செலவினங்களும் அதிகரித்து காணப்படுகின்றன. அதனால் பொருளாதார நெருக்கடியில் இருந்து முழுமையாக மீட்சி பெறாத நிலையில் அதிக செலவு மிக்க காரியத்தில் ஈடுபடுவது நாட்டுக்கும் மக்களுக்கும் ஒருபோதும் நன்மையாக அமையாது. அது நாட்டையும் மக்களையும் மீண்டும் நெருக்கடிகளுக்குள் தள்ளிடவிடத் துணைபுரிவதாகவே அமையும்.

மேலும் நாடு முகம்கொடுத்த பொருளாதார நெருக்கடியானது தனித்து நின்று தீர்வு காணக்கூடிய ஒன்றுமல்ல. அதனால் கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் எல்லோரும் ஒன்றுபட்டு நாட்டையும் மக்களையும் இந்நெருக்கடியில் இருந்து மீட்டெடுப்பது அவசியம்.

மக்களின் எதிர்பார்ப்பையும் உணர்வுகளையும் உரிய முறையில் புரிந்து கொள்ளத் தவறியுள்ள ஒரு சில அரசியல் கட்சிகள்தான் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென குறியாக இருக்கின்றன.

ஆனால் இத்தேர்தலை நடத்துவதால் நாட்டின் ஆட்சியில் மாற்றம் ஏற்படப் போவதுமில்லை. பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கிடைக்கப் போவதுமில்லை. இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாத சில கட்சிகள்தான் தேர்தலில் குறியாக இருக்கின்றன. பொருளாதார நெருக்கடிக்கு தீர்வைக் கோரி வளமான வாழ்வையே மக்கள் எதிர்பார்த்து நிற்கின்றனர். இதன்படி சில அரசியல் கட்சிகள் செயற்பாடுகள் மக்களின் தேவைக்கும் எதிர்பார்ப்புக்கும் முரணாகவே அமைந்துள்ளன. அதாவது தற்போதைய சூழலில் மக்கள் எதிர்பார்ப்பது ஒன்று. அரசியல் கட்சிகள் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்கள் மற்றொன்று. ஆனால் மக்கள் தற்போதைய சூழலில் மிகுந்த தெளிவுடன் உள்ளனர். தேர்தலைக் கோருபவர்களின் எதிர்பார்ப்பையும் மக்கள அறியாதவர்கள் அல்லர். அதனால் இக்கட்சிகளை நம்பி மீண்டுமொரு தடவை தீவிர பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட அவர்கள் ஒரு போதும் விரும்பவே மாட்டார்கள்.

ஆகவே பொருளாதார நெருக்கடியின் தாக்கங்கங்களும் அழுத்தங்களும் நீடித்துக் கொண்டிருக்கும் சூழலில் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தியே தீர்மானங்களை எடுக்க வேண்டுமேயொழிய கட்சிகளின் அற்ப நலன்களை அடிப்படையாகக் கொண்டு அல்ல. அதுவே மக்களின் எதிர்பார்ப்பும் வேணவாவும் ஆகும்.

editor.tkn@lakehouse.lk

மக்களுக்கு பயன்தருகின்ற காரியங்களில் கைகொடுக்கும் ட்ரோன் தொழில்நுட்பம்

மனிதனின் நவீன கண்டுபிடிப்புகள் ஏராளம். அவற்றில் ஒன்றுதான் ஆளில்லாமல் வானில் பறக்கும் ட்ரோன் விமானம். ட்ரோன் என்றால் (Unmanned aerial vehicle) ஆளில்லா பறக்கும் வாகனம் என்று பொருள்.

தொழில்நுட்பத்தின் பரிணாமம் குறைந்த முயற்சியுடன் எவரும் தங்கள் பணிகளை செய்யக்கூடிய ஒரு சகாப்தத்திற்கு வழிவகுத்துள்ளது. உலகில் பரவலாக பயன்படுத்தப்படும் பல்வேறு தொழில்நுட்பங்களில் ட்ரோன் தொழில்நுட்பம் ஒரு முக்கிய இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது. ஏனெனில் இது தொழில்நுட்ப வளர்ச்சியில் அனைவரையும் கவரக்கூடிய விளைவாகும். ட்ரோன்கள் தரையில் இருந்து விமானிகளால் கட்டுப்படுத்தப்படும் அல்லது முன் திட்டமிட்ட பணியை மேற்கொள்ளும். ட்ரோன் தொழில்நுட்பத்தின் தொடர்ச்சியான முன்னேற்றங்கள் பல துறைகளிலும் பயனளிக்கும் வகைகளில் பயன்படுத்தப்படுகின்றன.

பல்வேறு நேர்மறையான அம்சங்கள் இருந்த போதிலும், ட்ரோன்களின் ஏராளமான திறன்கள் மக்களின் சுதந்திரத்திற்கும் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையிலும் அமைகின்றன. தொழில்நுட்பத்தின் நிரந்தர வளர்ச்சியின் காரணமாக எதிர்காலத்தில் ட்ரோன்கள் இன்னும் கவர்ச்சிகரமான திறன்களுடன் உருவாக்கப்படலாம்.

முக்கியமாக உலகில் பாதுகாப்புப் பயன்பாட்டில் ட்ரோன் கமராவின் பங்கு அதிகமாகும். பொலிஸாரும் இராணுவத்தினரும் தங்களது பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ட்ரோன் கமராவை பயன்படுத்துகின்றார்கள். ட்ரோன்கள் பல வகைகளில் கிடைக்கின்றன. பறக்கும் நேரம், பறக்கும் தூரம், கமராவின் தரம் ஆகியவற்றைப் பொறுத்து மாறுபடுகிறது.

குறிப்பாக பாதுகாப்புக்காகப் பயன்படுத்தப்படும் ட்ரோன்கள் அதிக நேரம், நீண்ட தூரம் பறக்கக் கூடியவையாக உள்ளன. ஆட்கள் நுழைய முடியாத மலைப்பகுதிகள், காட்டுப் பகுதிகள் என இக்கட்டான நிலப்பரப்பில் எல்லாம் ட்ரோன் 'மூன்றாவது கண்' போன்று பறக்கின்றது. நேரடியாக நாம் இருக்கும் இடத்திலிருந்து, வானில் இருந்து பார்க்கும் வசதியை கொடுப்பதால் ட்ரோன் கமரா என்பது மிகப்பெரிய கண்டுபிடிப்பாகவே கருதப்படுகிறது.

பத்தாயிரம் ரூபா தொடக்கம் பல இலட்சம் ரூபா வரையிலான ட்ரோன்கள் சந்தையில் கிடைக்கின்றன. அவற்றை பலரும் வாங்கி தங்களுக்குப் பிடித்த ஊர்களை இதுவரை பார்த்திராத கோணத்தில் படம் எடுத்து ரசிக்கின்றனர். திருமணங்கள், சுற்றுலா, திரைப்படக் காட்சிகள், திருவிழாக்கள், பேரிடர்கள், போராட்டங்கள், பாதுகாப்பு என பலவற்றுக்கும் பயன்படும் ட்ரோன் கமரா கழுகுப் பார்வையில் நம் கண்களுக்கு புதிய கோணத்தில் காட்சிகளை வழங்குகின்றது.

விவசாயத்திற்காக இந்தியா போன்ற நாடுகள் தற்போது ட்ரோன்களைப் பயன்படுத்தி வருகின்றன. அண்மையில் இந்தியாவின் இளைஞர்நல மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அனுராக் சிங் தாக்கூர் "ட்ரோன் தொழில் நுட்பத்தில் இந்தியா உலகின் மையமாக உருவெடுக்கும் வகையில் 2023 ஆம் ஆண்டுக்குள் குறைந்தபட்சம் ஒரு இலட்சம் ட்ரோன் பைலட்டுகளை தயார்படுத்த வேண்டும்" என வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையிலும் கொரோனா காலகட்டத்தில் ட்ரோன் கமெராக்கள் மூலம் பொலிஸார், ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்ட வேளையில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். எதிர்காலத்தில் இதன் மூலம் விவசாய நடவடிக்கைகளை மாத்திரமல்ல உணவுப் பொருட்கள் மற்றும் மருந்து பொருட்கள் விநியோகம் போன்றவற்றிற்கும் இவற்றைப் பயன்படுத்தலாம்.

நாம் எதிர்வரும் காலங்களில் ட்ரோனை வாடகைக்குப் பெறக்கூடிய வாய்ப்பும் உள்ளது. ட்ரோன் உற்பத்திக் கைத்தொழில், பழுதுபார்த்தல், அதற்கான பயிற்சிகளை வழங்கும் நிறுவனங்கள் என பல வேலைவாய்ப்புகள் உருவாகும் சாத்தியமும் உள்ளது.

இலங்கையில் ஆளில்லா விமானத்தை பயன்படுத்த விரும்பினால் அதற்கான அனுமதியை பெற வேண்டும். அனைத்து ட்ரோன் கமராக்களும் இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். திட்டமிடப்பட்ட அனைத்து பறக்கும் இடங்களிலும் அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

ட்ரோன் சாதனங்கள் பல்வேறு துறைகளிலும் பயன்படுத்தப்பட்டு வருவதனால் தற்போது வெகுவாக பிரபல்யம் அடைந்து வருகின்றன. இதன் காரணமாக எதிர்காலத்தில் புதிய தொழில் நுட்பங்கள் உள்ளடக்கி இந்த பறக்கும் சாதனங்கள் மேம்படுத்தப்படும் என எதிர்பார்க்கலாம்.

வீ.ஆர்.வயலட்...✍

மகளிருக்கு முன்னுரிமை வழங்கும் இந்திய தேசம்

வரலாற்றில் ஒருபோதும் இடம்பெறாத நிகழ்வு!

இந்தியாவின் 2023_24 ஆம் நிதியாண்டுக்கான பட்ஜெட் அறிக்கையை நாடாளுமன்றத்தில் நேற்று தாக்கல் செய்தார் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். பா.ஜ.க அரசின் 2024 ஆம் ஆண்டுத் தேர்தலுக்கு முந்திய முழுமையான இறுதி பட்ஜெட் இதுவாகும்.

ஜனாதிபதி திரௌபதி முர்முவை சந்தித்த மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், வரலாற்றில் முதன் முறையாக ஒரு பெண் நிதியமைச்சர், பெண் குடியரசு தலைவரிடம் பட்ஜெட் அறிக்கையைத் தாக்கல் செய்வதற்காகச் சமர்ப்பித்துள்ளார். இது வரலாற்று நிகழ்வாகப் பார்க்கப்படுகிறது. இந்தியாவில் இதுவரை இப்படியொரு நிகழ்வு நடந்ததே இல்லை. ஜனாதிபதி திரௌபதி முர்மு மற்றும் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் ஆகியோரின் புகைப்படம் இணையத்தில் வைரலாகி வருகிறது.

பெப்ரவரி 1 ஆம் திகதி 2023_24 ஆம் நிதியாண்டுக்கான பட்ஜெட் டிஜிட்டல் முறையில் அதாவது Paperless பட்ஜெட் ஆகத் தாக்கல் செய்யப்படும் என நிதியமைச்சகம் அறிவித்திருந்தது. கடந்த 2 ஆண்டுகளாகக் கொரோனா தொற்றுக் காரணமாக Paperless பட்ஜெட் ஆகத் தாக்கல் செய்யப்பட்டது, இந்த ஆண்டும் அதே நடைமுறை தொடரப்படுகிறது.

இந்தியாவின் வரவுசெலவுத் திட்டத்தில் முற்போக்கான பல்வேறு அம்சங்கள் உள்ளதாக பொருளாதார நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

வட்டவளையில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்படும் மக்களால் சங்கம் உதயம்

அம்பகமுவ பிரதேச செயலகத்திற்குட்பட்ட வட்டவளை நகரத்தில் சீரற்ற காலநிலையின் போது வெள்ள அனர்த்தத்திற்குட்படும் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.இவர்கள் அண்மையில் வட்டவளை சிவசுப்பிரமணிய தேவஸ்தான கேட்போர் கூடத்தில் ஒன்றுகூடி தமது பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடினர்.இதன் போது 'வட்டவளை சமூக அபிவிருத்தி நலன்புரிச் சங்கம்' என்ற அமைப்பொன்றை உருவாக்கியுள்ளனர்.

இதுவரை தங்களது பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று கிடைக்கவில்லை. இதனை கருத்திற்கொண்டு தமது சங்கத்தினூடாக பிரதேச செயலாளருக்கு கடிதம் ஒன்று அனுப்பியிருந்தனர். இருப்பினும் அங்கிருந்தும் தமது பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று கிடைக்கவில்லை. இதைத் தொடர்ந்து நுவரெலியா மாவட்ட செயலாளருக்கு குறித்த சங்கத்தினூடாக கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.அவ்வாறு அனுப்பப்பட்ட கடித்திற்கு நுவரெலியா மாவட்ட செயலாளரிடத்திருந்து குறித்த சங்கத்திற்கு பதில் வழங்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

அதன்படி குறித்த பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள நீர்மின் உற்பத்திக்காக அமைக்கப்பட்டுள்ள அணைக்கட்டு காரணமாகவே இப்பிரதேசத்தில் அடிக்கடி வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த அணைக்கட்டு அமைந்துள்ள வான்கதவு முறையாக கவனிப்பாரற்ற நிலையிலும் பழுதடைந்தும் இருப்பது தெரியவந்துள்ளதோடு, குறித்த அணைக்கட்டு அமைந்த பகுதியில் காவலாளி மற்றும் மேலதிகநீர் வெளியேறும் வகையில் தொழிலாளி ஒருவரை அமர்த்துவதனு பொருத்தமானது என்றும் மேற்குறித்த சங்க உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் குறித்த பகுதியில் வெள்ளம் ஏற்படாத வகையில் நடவடிக்கைகளை எடுக்குமாறு நீர்மின் உற்பத்திக்குப் பொறுப்பான தரப்புக்கு நுவரெலியா மாட்ட செயலாளரினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகவும் அதுகுறித்து இதுவரை எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்றும் அவர்கள் தெரிவித்தனர். வட்டவளை நகர பிரதேசத்தின் மகாவலி ஆற்றுக்கு இரு பக்கங்களிலும் சுமார் 100 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் திடீரென ஏற்படும் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்படுகின்றனர்.

2013ஆண்டுக்குப் பிறகே இவ்வாறான பாதிப்பினை சந்திப்பதாக இம்மக்கள் கூறுகின்றனர். இப்பிரச்சினைக்கு இதுவரை எவ்விதமான தீர்வினையும் பெற்றுத் தரப்படவில்லையெனவும் அம்மக்கள் கூறுகின்றனர்.

இது குறித்து நகரத்தில் வாழும் மக்களது சங்கத்தின் செயலாளர் எம்.மோகனேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கும் போது "கோயில் பிரதேசத்தை அண்மித்த பகுதியில் சுமார் 47 குடும்பங்கள் வாழுகின்றன. ஒவ்வொரு வருடமும் மழைக்காலம் வரும் போது வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றோம். சுமார் 5 அல்லது 6 அடி வெள்ளம் வருகின்றது.இம்முறை அதிகாலை இரண்டு மணிக்கே வெள்ளம் வந்துவிட்டது. வெள்ளம் வரும் போது பொருட்களை எங்கு வைப்பது என்பது எங்களுக்குத் தெரியாது. இதனால் அடிக்கடி பாதிக்கப்படுகின்றோம்" என்று குறிப்பிட்டார்.

சங்க உறுப்பினர் ரகுமான் கருத்து தெரிவிக்கும் போது "கடந்த காலத்தில் வெள்ளத்தில் பாதிக்கப்பட்டோம். வெள்ளம் வரும் போது மாத்திரம் வான்கதவை திறந்து தருமாறுதான் கூறினோம். பல்வேறு காரணங்களை கூறுகின்றனர். நாங்களும் பல்வேறு தரப்பினர்களிடையே உதவி கேட்டுள்ளோம்" என்றார். மேற்படி பிரச்சினைக்கு உரிய தீர்வு ஒன்று பெற்றுத் தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

இரா.யோகேசன்...✍
(கினிகத்தேனை தினகரன் நிருபர்)

மெல்பேர்ன் இலக்கிய சந்திப்பும், ஆவூரானின் நூல் வெளியீடும்

அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் மூத்த எழுத்தாளர் 'ஆவூரான் சந்திரன்' எழுதிய 'சின்னான்' குறுநாவல் வெளியீடு கடந்த சனிக்கிழமை மாலை (28/1/23) மெல்பேர்னில் உள்ள பேர்விக் (Berwick) மூத்த பிரஜைகள் மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

எழுத்தாளரும், வானொலி ஊடகவியலாளருமான திருமதி சாந்தினி புவனேந்திரராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இலக்கிய ஆர்வலர்கள் பலர் கலந்து சிறப்பித்தனர்.

புலம்பெயர் இலக்கிய நூற்றாண்டு:

தமிழ் இலக்கிய வரலாற்றில் புலம்பெயர் இலக்கியத்துக்கான நூற்றாண்டாக இருபத்தோராம் நூற்றாண்டைக் குறிப்பிடலாம். போர்ச்சூழலால் இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து பல்வேறு நாடுகளுக்கும் சென்று வாழ்கின்ற தமிழர்கள், தாம் சென்றடைந்த நாடுகளிலெல்லாம் தமது இருப்பை நிலைநிறுத்தும் முயற்சியில் மொழி, இலக்கியம், சமயம், பண்பாடு ஆகிய மரபு வேர்களை ஆழமாகப் பதிப்பித்து முனைப்புடன் செயலாற்றுவதைப் பார்க்கக் கூடியதாக இருக்கிறது என இந்நூலின் முன்னுரையில் சி. சண்முகராஜா குறிப்பிட்டுள்ளார்.

இக்குறுநாவல் வெளியீட்டு நிகழ்வில் பாடும்மீன் சிறிஸ் கந்தராசா, கம்பன் கழக குமாரதாஸ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தின் மூத்த உறுப்பினரும், எழுத்தாளரும், சமூகச்செயற்பாட்டாளருமான ஆவூரான் சந்திரனுக்கு இந்த ஆண்டு மணிவிழாக் காலம் என்றும் வாழ்த்தினர்.

சமூகத்தால் ஒதுக்கப்பட்ட மக்களை மையமாக வைத்து சமுதாயப் பொறுப்புணர்வோடு படைப்புகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. அப்படியான அடித்தள மக்கள் பற்றிய சமூகச் சிந்தனையோடுதான் 'சின்னான்' குறுநாவல் நடைபோடுகிறது என ஆய்வுரை வழங்கியவர்கள் குறிப்பிட்டனர். இந்நூலின் ஆய்வுரையை கலாநிதி வேர்ஜினா மருதூர்க்கனி, கேதா, திவாகரன் ஆகியோர் வழங்கினர்.

மூத்த எழுத்தாளர் லெ. முருகபூபதி இந்நூலாசிரியரைப் பற்றி சிறப்புரை ஆற்றினார். ஆவூரானின் முதலாவது கதைத் தொகுதியான 'ஆத்மாவைத் தொலைத்தவர்கள்' நூல் சில வருடங்களுக்கு முன்னர் அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் வெளியீடாக வெளியானது. இந்நூலை கொழும்பு ஞானம் இலக்கியப் பண்ணை பதிப்பித்தது என்றும் தன் சிறப்புரையில் மூத்த எழுத்தாளர் லெ. முருகபூபதி குறிப்பிட்டார்.

தற்போது வெளியாகியிருக்கும் 'சின்னான்' குறுநாவல் யாழ்ப்பாணம் ஜீவநதி வெளியீட்டகத்தால் பதிப்பிக்கப்பட்டுள்ளது. ஆவூரான் வாழ்ந்து, கல்விகற்ற பரந்தனிலும் இந்நூல் முதலில் வெளியாகியது. கடந்த வாரம் 22.01.2023 ஞாயிறு பரந்தன் குமரபுரம் தர்மம் மண்டபத்தில் நடைபெற்ற 'சின்னான்"'குறுநாவல் நூல் வெளியீட்டு விழாவில் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

ஐங்கரன் விக்கினேஸ்வரா...✍

கிழக்கின் குரல்

சுதந்திரதின விழா; அம்பாறையில் மத வழிபாடுகளுக்கு ஏற்பாடு

ஒலுவில் விசேட நிருபர்

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் சிரமதானத்தை மேற்கொண்டு, மத வழிபாடுகளை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக, அம் மாவட்ட மேலதிக செயலாளர் வீ.ஜெகதீசன் தெரிவித்தார்.

கடற்கரையோரங்களில் தூய்மையைப் பேணுவதற்கான விழிப்புணர்வு நடவடிக்கை மற்றும் சிரமதானத்தை முன்னெடுப்பது தொடர்பாக பிரதேச செயலாளர்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. கல்முனை, சாய்ந்தமருது, அட்டாளைச்சேனை, திருக்கோவில், பொத்துவில், அக்கரைப்பற்று ஆகிய பிரதேச செயலாளர்களுக்கே அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

கடற்கரையோரங்களில் வீசப்படும் பிளாஸ்ரிக் வெற்றுப் போத்தல்கள், பொலித்தீன் பைகள் உள்ளிட்ட குப்பைகளினாலும் பயன்படுத்தப்படாத நிலையில் நிறுத்தி வைக்கப்பட்ட தோணிகளினாலும் சூழல் அசுத்தமடைகின்றது. ஆகையினால், அவ்விடங்களில் சிரமதானம் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், பிரதேச செயலகங்கள், வைத்தியசாலைகள், பொலிஸ் நிலையங்கள், சமூக மற்றும் சமய நிறுவனங்கள், பாடசாலைகள், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள், மத வழிபாட்டிடங்கள் ஆகியவற்றில் சிரமதானத்துடன் மத வழிபாடுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பொலிஸ் நிலையங்கள், பிரதேச செயலகங்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள் ஆகியவற்றில் தேசியக் கொடிகளைப் பறக்க விடுவதற்கும் மின் விளக்குகளினால் அலங்கரிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், இரத்ததான முகாம், விளையாட்டு நிகழ்வுகளை நடத்துவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

உணவு உற்பத்தி மாதிரிக் கிராமங்களுக்கு அம்பாறை மாவட்ட அரச அதிபர் கள விஜயம்

திருக்கோவில் தினகரன் நிருபர்

உணவுப் பாதுகாப்பு மற்றும் உணவு உற்பத்திக் கிராமங்களை உருவாக்கும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பிரதேசத்தில் உணவு உற்பத்தி மாதிரிக் கிராமங்களையும் அங்குள்ள வீட்டுத் தோட்டங்களையும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரனுடைய ஒழுங்கமைப்பின் கீழ், தங்கவேலாயுதபுரம் மற்றும் கஞ்சிகுடியாறு மீள்குடியேற்ற விவசாய உணவு உற்பத்தி மாதிரிக் கிராமங்களையே அவர் நேற்று முன்தினம் (31) சென்று பார்வையிட்டுள்ளார்.

இதன்போது, மேற்படி கிராமங்களில் விவசாயிகளினால் பயிரிடப்பட்ட கரட், பீட்றூட், சிவப்பு கோவா, வெள்ளைக் கோவா உருளைக்கிழங்கு உள்ளிட்ட மரக்கறிகளும் அறுவடை செய்யப்பட்டன.

பொருளாதார நெருக்கடி மற்றும் உணவுப் பஞ்சத்திலிருந்து பொது மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் அரசாங்கத்தினால் தற்போது தேசிய வேலைத்திட்டமாக உணவுப் பாதுகாப்புத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. அந்த வகையில், அம்பாறை மாவட்டத்தின் 20 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

ஐஸ் போதைப்பொருளுடன் கைதானவருக்கு விளக்கமறியல்

பாலமுனை தினகரன் நிருபர்

ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட ஒருவரை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம். ஹம்ஸா உத்தரவிட்டார்.

ஒலுவில் பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் இச் சந்தேக நபரைக் கைது செய்த பொலிஸார், அவரிடமிருந்து 1,400 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளையும் கைப்பற்றியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, சந்தேக நபரை கடந்த திங்கட்கிழமை (30) நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய போதே, இவ்விளக்கமறியல் உத்தரவை நீதவான் பிறப்பித்தார்.

ஊடகவியலாளர் நிபோஜனின் மறைவுக்கு மட்டக்களப்பில் அஞ்சலி

மட்டக்களப்பு விசேட, வெல்லாவெளி நிருபர்கள்

அகால மரணமடைந்த ஊடகவியலாளர் எஸ்.என். நிபோஜனின் இறுதிக்கிரியைகள் கிளிநொச்சியில் நேற்று (01) நடைபெற்ற அதேவேளை, மட்டக்களப்பு மாவட்ட ஊடக மையத்திலும் அன்னாரது உருவப்படத்துக்கு இறுதி அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியமும் மட்டக்களப்பு ஊடக மையமும் இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வில் ஊடகவியலாளர்கள் பலரும் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தியதுடன், தமது அனுதாபத்தையும் தெரிவித்தனர்.

ஒரு பிள்ளையின் தந்தையான 30 வயதுடைய ஊடகவியலாளர் நிபோஜன், மாத்தறையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த புகைவண்டியில் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது தெஹிவளையில் தவறி விழுந்து உயிரிழந்தார்.

சிறந்த புகைப்படக் கலைஞராகத் திகழ்ந்த நிபோஜன், அரசியல் கைதிகளின் விடுதலை, கிளிசொச்சி மாவட்ட மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் போராட்டங்களை வெளிக்கொண்டு வந்த ஊடகவியலாளராகச் செயற்பட்டார்.

உகந்தைமலை முருகன் ஆலயத்தில் பாற்குடப் பவனியுடன் தைப்பூசத் திருவிழா

காரைதீவு குறூப் நிருபர்

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தைமலை முருகன் ஆலயத்தில் எதிர்வரும் ஐந்தாம் திகதி தைப்பூசத் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ க.கு.சீதாராம் தலைமையிலும் உதவிக் குருமார்களான சிவஸ்ரீ ஆ.கோபிநாத சர்மா, சிவஸ்ரீ சி.கு.கோவர்த்தன சர்மா ஆகியோரின் ஒத்துழைப்புடனும் தைப்பூசத் திருவிழா பூஜை நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு ஆசிரியக் கலாசாலை ஓய்வுநிலை அதிபர் வேலாப்போடி இலட்சுமிசுந்தரத்தின் உபயத்தில் தைப்பூசத் திருவிழாவானது வழமை போன்று இம் முறையும் நடைபெறவுள்ளதாக, அவ்வாலய வண்ணக்கர் சுதுநிலமே திஸாநாயக்க தெரிவித்தார்.

அன்றையதினம் முற்பகல் 10 மணிக்கு உகந்தைமலையிலுள்ள வள்ளியம்மன் ஆலயத்திலிருந்து பாற்குடப் பவனி ஆரம்பமாகி, மீண்டும் அவ்வாலயத்தைச் சென்றடையவுள்ளது.

இதனைத் தொடர்ந்து, அபிஷேகமும் அலங்காரப் பூஜையும் நடைபெறவுள்ளதுடன், மாலையில் திருவிளக்குப் பூஜையும் வசந்த மண்டப அலங்காரப் பூஜையும் நடைபெறவுள்ளன. இதன் பின்னர், சுவாமி உள்வீதி உலா வரவுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

பாற்குடப் பவனிக்கான பால் பக்தர்களுக்கு இலவசமாக வழங்கப்படுமென்பதுடன், இதற்கான உபய ஏற்பாடுகளை தம்பிலுவிலைச் சேர்ந்த ரமேஷ்குமார்-ஜனாதினி தம்பதியினர் மேற்கொள்ளவுள்ளனர். தைப்பூச விழாவையிட்டு பக்தர்களின் நலன் கருதி விசேட பஸ் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக, உகந்தைமலை முருகன் ஆலயச் செயலாளர் கு.சிறிபஞ்சாட்சரம் தெரிவித்தார்.

மணல் ஏற்றிய உழவு இயந்திர உரிமையாளருக்கு அபராதம்

பாலமுனை தினகரன் நிருபர்

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய உழவு இயந்திர உரிமையாளர் ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதத்தை, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா விதித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தின் ஒலுவில் பிரதேசத்தில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய உழவு இயந்திரமொன்றை அக்கரைப்பற்று பொலிஸார் கைப்பற்றினர்.

இந்நிலையில், கைப்பற்றிய உழவு இயந்திரத்தை நீதிமன்றத்தில் கடந்த திங்கட்கிழமை (30) முன்னிலைப்படுத்திய போதே, இந்த அபராதத்தை நீதவான் விதித்துள்ளார்.

தோப்பூரில் மழையால் அறுவடை பாதிப்பு

தோப்பூர் குறூப் நிருபர்

தோப்பூரின் தில்லங்குழி பிரதேசத்தில் பெரும் போக நெற்செய்கைக்கான அறுவடை ஆரம்பமாகியுள்ள நிலையில், கடந்த இரு நாட்களாகப் பெய்த மழையினால், அறுவடை நடவடிக்கை பாதிக்கப்பட்டுள்ளதாக, விவசாயிகள் தெரிவித்தனர்.

திடீர் மழையினால் நெற்கதிர்கள் சரிவடைந்துள்ளதாகவும் இவ்வாறான நிலையில் அறுவடை செய்வதற்கு அதிகளவில் செலவிட நேரிடுமெனவும், விவசாயிகள் தெரிவித்தனர்.

இம்மழையினால் தாம் நட்டத்தை எதிர்நோக்கலாமெனவும், விவசாயிகள் எதிர்வுகூறியுள்ளனர்.

சிறுவர் எதிர்நோக்கும் பிரச்சினைகள்; கிண்ணியாவில் கலந்தாலோசனை

கிண்ணியா மத்திய நிருபர்

தற்காலச் சிறுவர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடலொன்று, கிண்ணியா பிரதேச செயலகத்தில் நேற்று (01) மேற்கொள்ளப்பட்டது.

கிண்ணியா பிரதேச செயலகத்துக்கு விஜயம் செய்த நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் தேசிய ஆணையாளரும் யுனிசெப் அமைப்பின் இலங்கைக்கான இணைப்பாளரும், கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனியுடன் கலந்துரையாடினர். வெளிநாடு செல்லும் தாய்மார்களின் பிள்ளைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சிறுவர்கள் போதைப்பொருளுக்கு அடிமையாகுதல், கையடக்கத் தொலைபேசிப் பாவனையினால் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக இக்கலந்துரையாடலின் போது கவனம் செலுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களும் பங்குபற்றினர்.

கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்றுக் (31) காலை திருக்கோவில் பிரதேசத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டபோது...
(படம்: காரைதீவு குறூப் நிருபர்)

மட்டக்களப்பில் இருவருக்கு உதவி

காரைதீவு குறூப் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கும் இரு கால்களை இழந்த ஒருவருக்கும் மட்டக்களப்பு மாவட்ட ரோட்டரிக் கழகம் உதவியுள்ளது.

அந்த வகையில், சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட குருமண்வெளியைச் சேர்ந்த பெண்ணொருவருக்கு முதற்கட்டக் கொடுப்பனவாக ஜனவரி மாதக் கொடுப்பனவை, மட்டக்களப்பு மாவட்ட ரோட்டரிக் கழகத் தலைவர் ரோட்டேரியன் பு.ரமணன் கடந்த திங்கட்கிழமை (30) வழங்கி வைத்தார்.

இதேவேளை, மண்டூர் தம்பலவத்தையைச் சேர்ந்த இரு கால்களையும் இழந்த ஒருவருக்கு சக்கரக் கதிரையை அவர் வழங்கி வைத்தார்.

மட்டு. மாவட்ட செயலகத்தில் சிரமதானப்பணி முன்னெடுப்பு

மட்டக்களப்பு, கல்லடி குறூப் நிருபர்கள்

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் சிரமதானம் நேற்று (01) மேற்கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜாவின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இச்சிரமதான நடவடிக்கையில் இராணுவத்தினர், மட்டக்களப்பு மாநகர சபை தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உறுப்பினர்கள் உட்பட ஏனைய பல நிறுவனங்களைச் சேர்ந்த உறுப்பினர்களும் பங்கேற்றனர். இதன்போது மட்டக்களப்பு மாவட்ட செயலக வளாகம், கோட்டைப் பூங்கா உட்பட பல பகுதிகள் சுத்தப்படுத்தப்பட்டன.

வரிச்சட்டத்தை மீளாய்வு செய்யக்கோரி ஆர்ப்பாட்டம்

ஒலுவில் விசேட நிருபர்

அரசாங்க ஊழியர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள புதிய வரிச் சட்டத்தை மீள் பரிசீலனை செய்யுமாறு கோரி தென்கிழக்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமானது, அப்பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தின் பிரதான நுழைவாயிலுக்கு முன்பாக நேற்று (01) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

அனைத்துப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் ஒன்றிணைந்து முன்னெடுத்துள்ள இவ்வார்ப்பாட்டத்துக்கு இதன்போது ஆதரவு தெரிவிக்கப்பட்டதாக, ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கு மேலதிகமாக வழங்கப்படும் ஆராய்ச்சிகளுக்கான கொடுப்பனவு, மருத்துவ செலவு என்பவற்றுக்கு வரி விதிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும், ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

500 கிராம் கஞ்சா பொதிகளுடன் அத்தாபெந்திவெவ 'ரத்தரங்' கைது

ரொட்டவெவ குறூப் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரொட்டவெவ பகுதியில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன், அவரிடமிருந்து 500 கிராம் கஞ்சாவையும் கைப்பற்றியதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தாபெந்திவெவ பகுதியைச் சேர்ந்த 'ரத்தரங்' என்று அழைக்கப்படும் 28 வயதுடைய சுனில் சாந்தகே ஹசேல பியசாந்த என்பவரே நேற்று (01) கைது செய்யப்பட்டார்.

இச்சந்தேக நபர் கஞ்சாவை மறைத்து வைத்திருப்பதாக பொலிஸ் விசேட பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, அவரது வீட்டைச் சோதனையிட்ட போது, விற்பனைக்காக வைத்திருந்த மேற்படி கஞ்சாவைக் கண்டுபிடித்ததாகவும், பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன், இச்சந்தேக நபருடன் அவரது வீட்டில் தங்கியிருந்த குற்றச்சாட்டில் நாத்தாண்டிய, இஹலமாவில பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய மற்றுமொருவரும் கைது செய்யப்பட்டார்.

இந்நபருக்கு ஏற்கெனவே நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில், கஞ்சா வியாபாரியுடன் வீட்டில் தங்கியிருந்ததாகவும், பொலிஸார் தெரிவித்தனர். இச்சந்தேக நபர்களிடம் பொலிஸார் விரிவான விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

மலைச்சாரல்

மஸ்கெலியாவில் தொடர் குடியிருப்பில் தீ பரவல்

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

ஆர்.பி.கே.பிலான்டேசனுக்கு உரித்தான மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட பகுதியிலுள்ள சாமிமலை ஸ்ரஸ்ப்பி தோட்ட குமரி பிரிவில் நேற்று காலை 9 மணிக்கு 24 வீடுகளைக் கொண்ட தொடர் குடியிருப்பில் தீ பரவியுள்ளது. இதனைக் கண்ட ஏனைய குடியிருப்பாளர்கள் மேலும் தீ பரவலை தடுக்க நடவடிக்கை எடுத்தனர். இதில் ஒரு வீடு முற்றாக சேதமடைந்துள்ளது.

இதனைதொடர்ந்து பாதிக்கப்பட்ட குடும்பத்தாருக்கு தோட்ட நிர்வாகம் தற்காலிகமாக இல்லமொன்றை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

தீ பரவிய நேரம் சிறுவரொருவர் மாத்திரம் வீட்டில் இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது,

கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமாரின் ஏற்பாட்டில் அசீஸா பவுண்டேசன் ஊடாக க.பொ.த சாதாரணதர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற பதுளை மாவட்ட தமிழ் மற்றும் முஸ்லிம் பாடசாலைகளைச் சேர்ந்த 125 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அடங்கிய பொதி இலவசமாக செனரத் பரண வித்தான மண்டபத்தில் (பழையநூலகம்) அண்மையில் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார் மற்றும் அசீஸா பவுண்டேசனின் பிரதித் தலைவர் ராயிஸ் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்குவதை படத்தில் காணலாம்,

ரேந்தபல பொரகஸ் ஸ்ரீ கணபதி இந்து கல்லூரியில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் ஏ.எச்.தாகிப் (156), ஏ.எச்.ஹிக்மா (150) எஸ்.கபிலா ஷினி (149), எம்.எம்.எம்.சாதிர் (145) சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.
(படம்: லுணுகல நிருபர்)

மலையக கலை கலாசார சங்கம் ஏற்பாடு செய்த கலைஞர்கள் பாராட்டு வைபவம் மற்றும் நடிகை மனோரமா, நினைவு வைபவம் என்பன இரத்தின தீபம் அமைப்பு கண்டி வீர கெப்பட்டிப்பொல நினைவு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நடிகை மனோரமாவின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிப்பதை படத்தில் காணலாம்.
(படம்: அக்குறணை குறூப் நிருபர்)

சிறுத்தையின் சடலம் மீட்பு

தலவாக்கலை குறூப் நிருபர்

நுவரெலியா பீட்றூ தோட்ட லவர்சிலிப் பிரிவில் நேற்று முன்தினம் (31) மாலை கம்பி வலையில் சிக்கியிருந்த சிறுத்தையொன்றின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக ஹக்கல வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தேயிலை மலையில் விலங்குகளை வேட்டையாடுவதற்காக அமைக்கப்பட்டிருந்த கம்பி வலையில் சிக்கி சிறுத்தை உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

நான்கு வயது மதிக்கத்தக்க ஆண் சிறுத்தை என தெரியவருகின்றது. இதுவே இவ்வருடத்தில் இடம்பெற்ற சிறுத்தையின் முதல் மரணம் எனவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பில் நுவரெலியா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய பின்னர் உயிரிழந்த சிறுத்தையின் சடலம் ரன்தெனிகல கால்நடை வைத்தியப்பிரிவுக்கு கொண்டு சென்று அங்குபிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளதாகவும் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

தேசிய வீரர் வீரபுரன் அப்புவுக்கு உருவச்சிலை

மாத்தளை சுழற்சி நிருபர்

75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு 1848 இல் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் ஒருவரான வீரபுரன் அப்புவின் உருவச்சிலையை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டு நிகழ்வு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி காலை 7 மணிக்கு மாத்தளை வீ.டீ. நாணயக்கார பூங்காவில் நடைபெறவுள்ளது.

இதற்கான நிதி உதவியை மாத்தளை மாநகர சபையினால் 10 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அடிக்கல் நாட்டும் நிகழ்வில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யு காமகே மாத்தளை மாநகர சபை முதல்வர் எஸ். பிரகாஷ் உட்பட பலர் கலந்து கொள்ள உள்ளதாக மாத்தளை வீர மொனரவில கெப்பெட்டிபோல வீர மடுகல்ல பெலிண்டீ களின் செயலாளர் எம். டபிள்யு சோமரத்ன தெரிவித்தார்.

யாழ். வைத்தியசாலை மருத்துவ கழிவுகள் அழித்தல்; மாநகர சபையுடன் பேச்சு

யாழ்.விசேட நிருபர்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட யாழ்.போதனா வைத்தியசாலையில் மருத்துவ கழிவுகளை உரிய முறையில் அழிப்பது தொடர்பில் மாநகர சபை முதல்வர் இமானுவேல் ஆனோல்ட், போதனா வைத்தியசாலை பணிப்பாளர் சத்திய மூர்த்தி, மாநகர சபை ஆணையாளர், மாநகர சபை பொறியியலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் ஆகியோருக்கிடையில் விசேட கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றது.

மருத்துவ கழிவுகளை உரிய முறையில் அழிப்பதற்கான இடத்தை தெரிவுசெய்து கழிவகற்றல் பொறிமுறைகளை உருவாக்குவது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக வைத்தியசாலை மருத்துவ கழிவுகள் தற்போது தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கே அழிக்கப்படுகின்றன.

எனினும், யாழ்ப்பாண குடாநாட்டில் பிரதான வைத்தியசாலையாக இது காணப்படுவதால் அதிகளவு மருத்துவ கழிவுகள் ஒவ்வொரு நாளும் சேகரிக்கப்படுகின்றன.

எனவே அந்த கழிவுகளை யாழ்ப்பாண மாநகரத்துக்குட்பட்ட பகுதியில் ஒரு இடத்தில் பாதுகாப்பான முறையில் பொதுமக்களுக்கு தீங்கு ஏற்படுத்தாத வண்ணம் அழிப்பதற்கான பொருத்தமான இடத்தை தெரிவு செய்வது தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டது.

வடக்கின் உதயம்

நாரந்தனையிலுள்ள சிறுவர் பாடசாலைக்கு தேவையான தளபாடங்கள் இத்தாலியில் வாழும் பேதுறு அலிஸ்ரன் என்பவரின் நிதி பங்களிப்பில் யாழ்.மாநகர சபை உறுப்பினார் லயன் கலாநிதி நா.தனேந்திரன் ரூபவ், வைத்தியர் சற்குருநாதன் ஆகியோரால் சிறு குடும்ப கன்னியர் மடம் முன்பள்ளியின் பொறுப்பாளர் அருட்தந்தையிடம் அன்பளிப்பு செய்த போது எடுக்கப்பட்ட படம்.

வர்த்தக நிலைய உரிமையாளரை தாக்கி கொள்ளை; மூவர் கைது!

கல்வியங்காட்டில் சம்பவம்

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டு பகுதியிலுள்ள வர்த்தக நிலையம் மீது தாக்குதல் நடத்தி உரிமையாளரை வாளினால் வெட்டுக்காயங்களுக்குள்ளாகிய பின்னர், வர்த்தக நிலையத்திலிருந்த 5 இலட்சம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையமொன்றின் மீதும், அதன் உரிமையாளர் மீதும், இனந் தெரியாத குழுவினர் கடந்த 18ஆம் திகதி இரவு தாக்குதல் நடத்தி, ஐந்து இலட்ச ரூபா பணத்தை கொள்ளையடித்து சென்றிருந்தனர்.

வர்த்தக நிலையத்தின் உரிமையாளர், வர்த்தக நிலையத்தை மூடுவதற்கு தயாரான நேரத்தில், வாள் மற்றும் கொட்டன்களுடன் 3 மோட்டார் சைக்கிளில் வந்த 7 பேர் கொண்ட குழுவினரே தாக்குதலை நடாத்தியுள்ளனர். தாக்குதலில் வர்த்தக நிலையம் சேதமாக்கப்பட்டதுடன், உரிமையாளரும் காயங்களுக்குள்ளானார்.

அத்துடன் வர்த்தக நிலையத்திலிருந்த ஐந்து இலட்சம் ரூபா பணத்தையும் கொள்ளையடித்து சென்றனர்.

வெட்டுக்காயங்களுக்குள்ளான வர்த்தக நிலைய உரிமையாளர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். யாழ். மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸார், தடயவியல் பொலிஸார் மற்றும் கோப்பாய் பொலிஸார் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். சி.சி.டி.வி காணொளிகளின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை, யாழ்ப்பாணம், கல்வியங்காடு மற்றும் கோப்பாய் பகுதிகளைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சீரற்ற காலநிலை: விவசாயிகள் பாதிப்பு

மன்னார் குறூப் நிருபர்

மன்னார்,கிளிநொச்சி மாவட்டங்களில் தொடர்ச்சியாக மழையுடன் கூடிய காலநிலை நிலவி வருகின்றமையால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மழை காரணமாக அறுவடைக்கு தயாரான நிலையில் காணப்பட்ட நெற்செய்கைகள் சரிந்துள்ளதுடன் வயல் நிலங்களுக்குள் நீரும் அதிகளவு தேங்கியுள்ளது.

அதேநேரம் அறுவடையின் பின்னர் வீதிகளில் உலர விடப்பட்டிருந்த பல மெற்றிக்தொன் நெல் முற்றுமுழுதாக மழையில் நனைந்துள்ளது.

முன்னதாகவே பசளை, உரம், எரிபொருள் விலை என அனைத்தினது விலையேற்றத்தின் மத்தியிலும் விவசாய செய்கையை மேற்கொண்ட விவசாயிகளிடம் நெல் மிகவும் அடிமாட்டு விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது. சீரற்ற காலநிலை காரணமாக மன்னார், கிளிநொச்சி மாவட்ட ஏழை விவசாயிகள் மேலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவில் மாபெரும் மரதன் ஓட்டப் போட்டி

மாங்குளம் குறூப் நிருபர்

முல்லைத்தீவு மாவட்டத்தின் குமுழமுனை கிராமத்தின் மைந்தன் கந்தசாமி பத்மநாதனின் பூரண நிதிப்பங்களிப்பில் மாபெரும் மரதன் ஓட்டப் போட்டி நேற்றைய தினம் காலை 7.30 மணிக்கு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதனினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மரதன் ஓட்டப் போட்டியில் 179 வீரர்களும், 60 வீராங்கனைகளும் கலந்துகொண்டனர்.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற இருபாலாருக்கும் தங்கப்பதக்கம் வழங்கப்பட்டது.

ஆண்கள் பிரிவில் முதலிடம் ஜெ.சுபராஜ் கொக்குத்தொடுவாய், இரண்டாமிடம் எஸ்.யாழ்மைந்தன் வள்ளுவர்புரம் விசுவமடு,

மூன்றாமிடம் எஸ். அகிலன் தியோ நகர் சிலாவத்தை பெண்கள் பிரிவில் முதலாம் இடம் என்.கேமா குரவயல் உடையார்கட்டு, இரண்டாம் இடம் விதுசா கெருடமடு மன்னகண்டல், மூன்றாம் இடத்தினை மாணிக்கபுரம் விசுவமடுவை சேர்ந்த ஏ.அபிநயா ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

காலி, கோட்டை

அல் பஹ்ஜதுல் இப்ராஹீமிய்யா அரபுக் கல்லூரியின் 130வது வருட பூர்த்தி விழா

(பேருவளை விசேட நிருபர்)

காலி கோட்டை அல்பஹ்ஜதுல் இப்ராஹீமிய்யா அரபுக் கல்லூரியின் 130வது ஆண்டு பூர்த்தி விழாவும் 34வது பட்டமளிப்பு வைபவமும் எதிர்வரும் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அஸர் தொழுகையின் பின் கலாபீட மண்டபத்தில் மிக விமர்சையாக நடைபெறவுள்ளது.

கலாபீட தர்மகர்த்தாவும் இலங்கை கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபை பொருளாளருமான அல்ஹாஜ் எம்.நுஸ்கி முஹம்மத் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி அல்ஹாஜ் அஸ்ஸெய்யித் அலவி ஸாலிஹ் மௌலானா பிரதம அதிதியாகவும், காலி அலிய்யா சட்ட அரபுக் கல்லூரி பணிப்பாளரும் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா காலி கிளையின் தலைவருமான கலீபதுஷ்ஷாதுலி மௌலவி அல்ஹாஜ் எம்.இஸட். ஸுஹுர் முஹம்மத் (பாரி), கொழும்பு உம்மு ஸாவியா அஜ்வாத் அல் பாஸி அரபுக் கல்லூரி முதல்வர் கலீபதுஷ்ஷாதுலி மௌலவி எம்.எஸ்.எம்.அஹமத் (மஹ்ழரி) ஆகியோர் சிறப்பதிதிகளாகவும் கலந்து கொள்வர்.

2018, 2019, 2021, 2022ம்ஆண்டுகளில் பரீட்சை எழுதி அல் ஆலிம் பட்டம் பெறும் 19 பேருக்கு விழாவில் சான்றிதழ் வழங்கப்படவுள்ளதாக அதிபர் மௌலவி முஹம்மத் ரஸூக் (பஹ்ஜி) தெரிவித்தார்.

மாணவி இல்மா நஸீர் எழுதிய "லெப்ட் அலோன்" நூல் வெளியீடு அண்மையில், குருநாகல் நகர மண்டபத்தில் நடைபெற்றது. இதில், மாகாண முன்னாள் கல்விப் பணிப்பாளர் ஜே.ஜீ.என்.தில கரத்ன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். கௌரவ அதிதிகளாக ஜப்பான் ஒகினவா பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர் திரு. திலீப் சந்திரலால் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர் அமரகீர்த்தி தொடங்கொட ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். சர்வ மத வழிபாடுகளுடன் தொடங்கி வைக்கப்பட்ட இந்நூல் வெளியீட்டு விழாவில், நூலாசிரியரான இல்மா நஸீர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரையும் காணலாம்.

ஜாதிக லொதரய் மண்டலய
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய்க்கிழமை 2023.01.31
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5017 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,928,476.00
ஆங்கில எழுத்து E — வெற்றி இலக்கங்கள் 1 1 9 3 2 4

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1047 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 81,064,960.00
ஆங்கில எழுத்து R — வெற்றி இலக்கங்கள் 03 38 48 55

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3259 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 75,740,972.40
ஆங்கில எழுத்து Z — வெற்றி இலக்கங்கள் 39 49 78 80

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1365 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 296,903,802.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து D — சுப்பர் இலக்கம் 11 — வெற்றி இலக்கங்கள் 06 14 54 59
அடுத்த கிரான்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1472 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,958,910.40
வெற்றி இலக்கினம் தனுசு — வெற்றி இலக்கங்கள் 1 3 1 9 6 2

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 326 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,680,950.20
வெற்றி இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 05 17 53 54 — விசேட இலக்கினம் மகரம்

சட்டமா அதிபர் திணைக்களம்

தனியார் பாதுகாப்பு சேவைகள் வழங்கலுக்கான கேள்வி மனுக்கோரல் – 2023/24

01. இந்த திணைக்களத்திற்கு 2023.03.16ஆம் திதகியிலிருந்து தனியார் பாதுகாப்பு சேவைகளினை வழங்குவதற்காக இத்துறையில் ஐந்து (05) வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தினைக் கொண்டுள்ளதும் பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்துகொண்ட வலிதான சான்றிதழினை தம் வசம் வைத்திருப்பதும் அதன் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவினை சம்பள சபைகள் கட்டளைச் சட்டம் உள்ளடங்கலான நியதிச்சட்ட ஏற்பாடுகளின் நியதிகளின்படி மேற்கொள்கின்றதுமான கம்பனிகளிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட கேள்வி மனுக்கள் கோரப்படுகின்றன. குறித்த தனியார் பாதுகாப்பு கம்பனியில் தொழில் புரியும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் குறித்த சேவையில் உறுதிப்படுத்தப்படுவதுடன் அனுபவம் வாய்ந்த உத்தியோகத்தர்களாகவும் இருத்தல் வேண்டும்.

02. இதற்கான தகைமையினைக் கொண்டுள்ள நிறுவனங்கள், தமது எழுத்து மூலமான கோரிக்கையுடன் ரூபா. 5000 இனை மீளளிப்புச் செய்யப்படாத விண்ணப்ப கட்டணமாக கொடுப்பனவு செய்வதன் மூலம் 2023.02.01ஆம் திகதியிலிருந்து 2023.02.28 ஆம் திகதி வரையில் அலுவலக வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையிலான காலப்பகுதியில் திணைக்களத்தின் நிதிப் பிரிவில் உரிய விண்ணப்பப்படிவங்களினைப் பெற்றுக் கொள்ளலாம்.

03. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவமானது அதன் நகல் பிரதியுடன் முத்திரை பொறிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் விண்ப்பத்தினைக் கொண்டுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் 'பாதுகாப்பு சேவைகளுக்கான கேள்வி மனு- 2023/24' எனக் குறிப்பிடப்பட்டு தலைவர், பெறுகைகள் குழு, சட்டமா அதிபர் திணைக்களம், கொழும்பு 12 எனும் முகவரிக்கு 2023.03.01 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அல்லது குறித்த முகவரியில் நேரடியாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

தலைவர்,
பெறுகைகள் குழு,
சட்டமா அதிபர் திணைக்களம்.
2023.01.31

வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு
லலித் அதுலத்முதலி மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம்

ஆர்வத்தை வெளிப்படுத்துதல் (EOI) இற்கான அழைப்பு மற்றும் முன்மொழிவுக்கான கோரிக்கை (RFP)

மஹபொல கல்வி மற்றும் வர்த்தக சந்தையினை செயற்படுத்துதல்

வர்த்தக வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் கீழான லலித் அதுலத்முதலி மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம் 1981 ஆண்டின் பாராளுமன்ற சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்டது. அன்று முதல் இலங்கையில் 325000 இற்கு மேற்பட்ட பல்கலை மாணவர்களுக்கு அது கூட்டு உதவித் தொகையை வழங்குகிறது.

லலித் அதுலத்முதலி மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியம் அதன் உதவித்தொகை நிதியின் உள்ளடக்க நோக்கத்தை அதிகரிக்கவும் விரிவுபடுத்தவும் ஆர்வமாக உள்ளது.

லலித் அதுலத்முதலி மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்தின் நம்பிக்கையாளர் சபையானது மஹபொல கல்வி மற்றும் வர்த்தக சந்தையை நடத்தத் தீர்மானித்துள்ளது. அதனடிப்படையில் குறைந்தபட்சம் கடந்த 05 ஆண்டுகளில் தேசிய மட்டத்தில் நிகழ்வுகளை செயற்படுத்தலில் அனுபவத்துடன் நிகழ்வு முகாமைத்துவத்தில் அனுபவத்தை நிரூபிக்கக் கூடிய நம்பகமான உள்ளூர் நிறுவனங்களில் இருந்து இத்தால் EOI மற்றும் RFPஐ கோருகின்றது. நிறுவனமானது நிகழ்வு முகாமை செயற்பாட்டிற்காக சிறந்த நிதி நிலைப்பாடு மற்றும் திறனை நிரூபிக்க இயலுமாயிருத்தல் வேண்டும்.

லலித் அதுலத்முதலி மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியமானது 2023, 04 நிகழ்வுகளை ஒழுங்கு செய்துள்ளது. அத்துடன் வர்த்தக வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சினால் மதிப்பிடப்படும் அவர்களது செயற்றிறனில் தேர்ந்தெடுக்கப்படும் உத்தேச வழங்குநர்/நிகழ்வு முகாமைத்துவ நிறுவனம் 2023 காலப்பகுதியில் 03 தொடர்ச்சியான வர்த்தக சந்தைகளை வழங்குதல் வேண்டும்.

லலித் அதுலத்முதலி மஹபொல உயர் கல்வி புலமைப்பரிசில் நம்பிக்கை நிதியத்திற்கு விரும்பிய வருமானத்தை உருவாக்கக் கூடிய மஹபொல கல்வி மற்றும் வர்த்தக சந்தையின் நிகழ்வு முகாமைத்துவத்திற்காக EOI மற்றும் RFP களை ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்தல் வேண்டும். வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் https://www.trade.gov.lk/downloads/ministry-notifications அல்லது லலித் அதுலத்முதலி மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கை நிதியத்தின் http://mahapola.lk/index.php உத்தியோகபூர்வ இணைய தளங்களின் தரப்படும் இணைப்பில் (link) இருந்து ஆங்கில மொழியிலான RFP ஆவணங்களுடனான EOI விண்ணப்பத்தை விண்ணப்பதாரிகள் பதிவிறக்கம் (download) செய்து கொள்ளலாம்.

ஒழுங்காக பொறியிடப்பட்ட EOI மற்றும் RFP களை உள்ளடக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'மஹபொல கல்வி மற்றும் வர்த்தக சந்தை' எனக் குறிப்பிட்டு இலங்கை, கொழும்பு-03, ஆர். ஏ. டிமெல் மாவத்த, இல. 492, வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு, அமைச்சு பெறுகைக் குழுவின் தலைவருக்கு முகவரியிடப்பட்டு கூரியர் மூலம் அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது 2023.02.15ம் திகதி 15.00 மணிக்கு அல்லது அதற்கு முன்பு இலங்கை, கொழும்பு-03 ஆர்.ஏ. டிமெல் மாவத்த, இல. 492, வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு, 3ஆம் மாடியில் நேரில் கையளிக்கலாம்.

கிடைக்கப்பெறும் EOI மற்றும் RFPக்கள் 2023 பெப்ரவரி 15ம் திகதி 15.15 மணிக்கு இலங்கை, கொழும்பு-03 ஆர்.ஏ. டிமெல் மாவத்த, இல. 492, வர்த்தக வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு. 3ஆம் மாடியில் திறக்கப்படும். EOI திறக்கப்படும் வேளையில் எந்த விண்ணப்பதாரி/ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்குபற்றலாம்.

எந்த தெளிவுபடுத்தல்களுக்கும், திரு. M. P. பண்டார, பணிப்பாளர், லலித் அதுலத்முதலி மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நிதியம், கைகயடக்கத் தொலைபேசி 071-9900014 - மின்னஞ்சல் mahapoladirector@gmail.com அல்லது உதவி செயலாளர், வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு 0112 304078 அல்லது mahapolatradefair@gmail.com இனை தயவு செய்து தொடர்பு கொள்ளுங்கள்.

தலைவர்,
அமைச்சு பெறுகைக் குழு,
வர்த்தக, வணிக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு,
இல. 492, ஆர்.ஏ.டிமெல் மாவத்த, கொழும்பு-03.

தென் மாகாண சபை - முதலமைச்சு

பெறுகை அறிவித்தல்

தென் மாகாண சபையின் முதலமைச்சு பெறுகைக் குழுவின் தலைவரால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிர்மாண வேலை விடயங்களுக்காக திறன் உடைய மற்றும் தகைமையுடைய கேள்விதாரர்களிடமிருந்து வேறு வேறாக பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

தொ. இல.	வேலைகள்	மானியத்தின் தன்மை	மதிப்பீட்டுப் பெறுமதி ரூ. (வெட் இன்றி)	தேவைப் படும் பதிவு	கேள்விப் பிணை	மீளளிக்கப் படாத கேள்வி வைப்புத் தொகை
1.	உடுகம ஆதார வைத்தியசாலையின் நான்கு மாடிக் கட்டிடம் நிர்மாணம் (ii ம் கட்டம்)	ஆரம்ப சுகாதார சிகிச்சை சேவையை கட்டியெழுப் பும் திட்டம் (உலக வங்கி நிதியுதவி)	125,510,608.50	C4- C3	1,255,000.00	12,500.00
2.	காலி தாஸீம் வைத்தியசாலையின் கூரை, கொங்கிறீட் தட்டு, நீர் மற்றும் மின் வழங்கல் பழுதுபார்த்தல்		18,328,775.70	C6- C5	183,000.00	3,000.00
3.	உடுகம வைத்திய சாலையின் வசதிகளை விரிவாக்கலுக்கு சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தை நாகொட வைத்திய சாலையில் ஸ்தாபித்தல்		15,880,727.30	C6- C5	158,000.00	3,000.00
4.	நெலுவ மாவட்ட வைத்தியசாலை யின் பிரவேச பாதை வாயிற்கதவு, பாதுகாப்புக் கூடம் மற்றும் எல்லை வேலியை நிர்மாணித்தல்		9,332,210.44	C7- C6	93,000.00	1,500.00

02. தேசிய போட்டி கேள்வி முறைமையின் ஊடாக கேள்விகளை சமர்ப்பித்தல் வண்டும். ஒப்பந்தங்களை வழங்கும் போது, தகைமை பெறும் சித்திகரமான கேள்விதாரர்கள் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாது இருப்பதுடன் நிர்மாண, கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் மேற்படி வகுதிகளின் கீழ் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

03. அரச நிதி சுற்றறிருப இல 03/2020 மற்றும் 2020.10.09ம் திகதிய மற்றும் 03/2020(i) மற்றும் 2021.01.11ம் திகதிய சுற்றுநிருபங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளும் செல்லுபடியாவதுடன் மாகாண முன்னுரிமை மற்றும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA Grade) முன்னுரிமை, கேள்வி மதிப்பீட்டின்போது கவனத்தில் கொள்ளப்படும்.

04. கேள்வி விண்ணப்பங்கள் 2023.02.01 முதல் 2023.02.21 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை லபுதுவ, தக்ஷினபாய, தென் மாகாண முதலமைச்சின் திட்டமிடல் பிரிவில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். தற்போதுள்ள சிரமங்கள் காரணமாக கேள்விப் பத்திரங்களை மின்னஞ்சல் மூலம் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சின் இவ் இலக்கங்களுக்கு வேலை நாட்களில் அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம். 091-4946620, 091-4946844

05. கேள்வியுடன் சமர்ப்பிக்கப்படும் பிணையை இலங்கையின் வர்த்தக வங்கியிலிருந்து தென் மாகாண முதலமைச்சின் செயலாளரின் பெயருக்கு பெற்றுக் கொண்ட 2023.02.22 முதல் 2023.06.20 வரை செல்லுபடியாகும். கேள்விப் பிணையொன்றை அல்லது முதலமைச்சின் கணக்குப் பிரிவிற்கு காசு செலுத்திய பின்பு வழங்கப்படும் நிதித் பற்றுச்சீட்டை கேள்விப் பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். காசோலை அல்லது வங்கிக் கட்டளையாக சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பிணைகள் நிராகரிக்கப்படும்

06. கேள்வி செல்லுபடியாகும் காலம் 2023.05.23 வரையாகும்

07. சமர்ப்பிக்கப்படும் வேலையுடன் சம்பந்தப்பட்ட கேள்விகள், இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் அதன் மூலப் பிரதியில் 'மூலப் பிரதி' என குறிப்பிட வேண்டியதுடன் நகல் பிரதிநியில் 'நகல் பிரதி' என குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகளின் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வேறுவேறு உறைகளில் இட்டு பொறியிட்டு அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு அவ் உறையையும் பொறியிட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் கைத்தொழிலின் பெயரைக் குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

08. பொறியிடப்பட்ட கேள்வி பத்திரங்கள் 2023.02.22 மு.ப. 10.00 இற்கு முன் கிடைக்குமாறு செயலாளர், தென் மாகாண முதலமைச்சு, 5ஆம் மாடி, தக்ஷினபாய, லபுதுவ, காலி. என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டு வந்து முதலமைச்சின் திட்டமிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

09. கேள்விப் பத்திரங்கள் திறத்தல் 2023.02.22 மு.ப. 10.30 இற்கு தென் மாகாண முதலமைச்சு பெறுகைக் குழுத் தலைவரின் தலைமையில் அமைச்சில் இடம்பெறுவதுடன் அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது கேள்விதாரரின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிக்கு சமுகமளிக்கலாம்.

10. கேள்விக்கு முன்னரான கூட்டம் 2023.02.08 மு.ப. 10.30 இற்கு ZOOM தொழில்நுட்பத்தின் ஊடாக நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. குறித்த இணைப்பினை மேற்படி தொ.பே இலக்கத்தின் ஊடாக விசாரித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

11. குறைபாடு உடைய கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படுவதுடன் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொண்டு கேள்விகளை சமர்ப்பிக்காத விண்ணப்பதாரிகளின் கேள்விப் பிணைத் தொகை அரசுடமையாக்கப்படும். பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும் என்பதை கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

தலைவர்,
பெறுகைக் குழு,
தென் மாகாண முதலமைச்சு,
5ஆம் மாடி, தக்ஷினபாய, லபுதுவ, காலி.
2023.02.01

எல் பீ ஃபினான்ஸ் பி.எல்.சி பகிரங்க ஏலவிற்பனை

எல் பீ ஃபினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தில் அடகு வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஏலவிற்பனைத் திகதி		முகவரி
01/07/13/20	மார்ச் 2023	இல. 755/1, பன்னிபிட்டிய வீதி, பத்தரமுல்ல.
01/07/13/20	மார்ச் 2023	இல. 91, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06.
01/07/13/20	மார்ச் 2023	இல. 92, ஸ்டான்லி திலகரட்ன மாவத்தை, நுகேகொடை.
01/07/13/20	மார்ச் 2023	இல. 434, ஈடபிள்யுபெரேரா மாவத்தை, கோட்டே வீதி, பிட்டகோட்டே.
01/07/13/20	மார்ச் 2023	இல. 595, ஹைலெவல் வீதி, கங்கொடவில, நுகேகொடை.
01/07/13/20	மார்ச் 2023	இல. 61/2, கண்டி வீதி, திஹாரிய.
01/07/13/20	மார்ச் 2023	இல. 594/3, கண்டி வீதி, நிட்டம்புவ.
01/07/13/20	மார்ச் 2023	இல. 19, பிரதான வீதி, கேகாலை.
01/07/13/20	மார்ச் 2023	இல. 1B, பௌத்தாலோக மாவத்தை, கம்பஹா.
01/07/13/20	மார்ச் 2023	இல. 81, கண்டி வீதி, வரகாபொல.
01/07/13/20	மார்ச் 2023	இல. 282, அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை.
01/07/13/20	மார்ச் 2023	இல. 13, ஸ்டேசன் வீதி, மாத்தறை.
01/07/13/20	மார்ச் 2023	இல. 66, தியஸ் வீதி, தங்காலை.
01/07/13/20	மார்ச் 2023	இல. 138 D/1, அம்பாந்தோட்டை வீதி, அம்பலாந்தோட்டை.
01/07/13/20	மார்ச் 2023	இல. 83, தெனியாய வீதி, அக்குரெஸ்ஸ.
01/07/13/20	மார்ச் 2023	இல. 2, எச்.வி.கட்டிடம், தெல்லாவ வீதி, நெலுவ.
01/07/13/20	மார்ச் 2023	இல. 149, பிரதான வீதி, தெனியாய.
01/07/13/20	மார்ச் 2023	இல. 65/A, ஸ்ரீ சத்தர்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10.
01/07/13/20	மார்ச் 2023	இல. 282, நாகலாகம் வீதி, கொழும்பு 14.
01/07/13/20	மார்ச் 2023	இல. 52/17, கொதட்டுவ புதிய நகரம், கொதட்டுவ.
01/07/13/20	மார்ச் 2023	இல. 21, புனித ஜோசப் வீதி, கொழும்பு 14.
01/07/13/20	மார்ச் 2023	இல. 371/1, டாம் வீதி, கொழும்பு 12.
01/07/13/20	மார்ச் 2023	இல. 551, தெமட்டகொட வீதி, கொழும்பு 09.
01/07/13/20	மார்ச் 2023	இல. 149, கே பி கிறிஸ்டி பெரேரா மாவத்தை, கொழும்பு 13.
01/07/13/20	மார்ச் 2023	இல. 197, செட்டியார் தெரு, கொழும்பு 11.
01/07/13/20	மார்ச் 2023	இல. 256, புதிய நகரம், தம்புத்தேகம.
01/07/13/20	மார்ச் 2023	ரஜட்ட கட்டிடம், பிரதான வீதி, கதுருவெல, பொலன்நறுவை.
01/07/13/20	மார்ச் 2023	இல. 137, பிரதான வீதி, அனுராதபுரம்.
01/07/13/20	மார்ச் 2023	இல. 514/A, புதிய நகரம், அனுராதபுரம்.
01/07/13/20	மார்ச் 2023	இல. 219, புத்தளம் வீதி, நொச்சியாகம.
01/07/13/20	மார்ச் 2023	இல. 26, கண்டி வீதி, மதவாச்சி.
01/07/13/20	மார்ச் 2023	இல. 38, குருநாகல் சந்தி, தம்புளை.
01/07/13/20	மார்ச் 2023	பிரதான வீதி, மெதிரிகிரிய.
01/07/13/20	மார்ச் 2023	இல. 15, தலாவ வீதி, கெக்கிராவ.
01/07/13/20	மார்ச் 2023	இல. 24, சிலாபம் வீதி, ஆனமடுவ.
01/07/13/20	மார்ச் 2023	இல. 96, அகலவத்த வீதி, மத்துகம.
01/07/13/20	மார்ச் 2023	இல. 87, பிரதான வீதி, பிட்டிகல.
01/07/13/20	மார்ச் 2023	இல. 14, பிரதான வீதி, எல்பிட்டிய.
01/07/13/20	மார்ச் 2023	இல. 48, இரத்தினபுரி வீதி, பதுரலிய.
02/08/14/21	மார்ச் 2023	இல. 134, பிரதான வீதி, வென்னப்புவ.
02/08/14/21	மார்ச் 2023	இல. 106C, குருநாகல் வீதி, புத்தளம்.
02/08/14/21	மார்ச் 2023	இல. 84, பிரதான வீதி கல்பிட்டிய.
02/08/14/21	மார்ச் 2023	இல. 356, பிரதான வீதி, நீர்கொழும்பு.
02/08/14/21	மார்ச் 2023	இல. 40A, கொழும்பு வீதி, சிலாபம்.
02/08/14/21	மார்ச் 2023	இல. 110, சிலாபம் வீதி, கொச்சிகடை.
02/08/14/21	மார்ச் 2023	இல. 57, வெயாங்கொட வீதி, மினுவாங்கொட.
02/08/14/21	மார்ச் 2023	இல. 229/1, கடவத்த வீதி, கனேமுல்ல.
02/08/14/21	மார்ச் 2023	இல. 69, கிரஉல்ல வீதி, திவுலபிட்டிய.
02/08/14/21	மார்ச் 2023	இல. 107, சென் ஜோசப் வீதி, நீர்கொழும்பு.
02/08/14/21	மார்ச் 2023	இல. 75A, சிலாபம் வீதி, மாரவில.
02/08/14/21	மார்ச் 2023	இல. 434, பேஸ்லைன வீதி, அவரிவத்த, கட்டுநாயக்க.
02/08/14/21	மார்ச் 2023	இல. 661/A, தேவத்த வீதி, ராகம.
02/08/14/21	மார்ச் 2023	இல. 6/1/1, பழைய நீர்கொழும்பு வீதி, ஜா-எல.
02/08/14/21	மார்ச் 2023	இல. 39, கொழும்பு வீதி, கந்தானை.
02/08/14/21	மார்ச் 2023	இல. 18, எலகந்த, ஹெந்தல, வத்தளை.
02/08/14/21	மார்ச் 2023	இல. 17, ஸ்டேசன் வீதி, ஹெந்தல சந்தி, வத்தளை.
02/08/14/21	மார்ச் 2023	இல. 350/16, கொழும்பு வீதி, தெல்கொட.
02/08/14/21	மார்ச் 2023	இல. 484, அவிசாவளை வீதி, கடுவளை
02/08/14/21	மார்ச் 2023	இல. 722, வராகொட வீதி, விஹாரை சந்தி, களனி.
02/08/14/21	மார்ச் 2023	இல. 44, மாகொல வீதி, கிரிபத்கொட.
02/08/14/21	மார்ச் 2023	இல. 175, கண்டி வீதி, கிரிபத்கொட.
02/08/14/21	மார்ச் 2023	இல. 136/12H, கண்டி வீதி, கடவத்தை.
02/08/14/21	மார்ச் 2023	இல. 145, மலே வீதி, கொழும்பு 02.
02/08/14/21	மார்ச் 2023	இல. 66, காலி வீதி, கல்கிசை.
02/08/14/21	மார்ச் 2023	இல. 11, கல்தெமுல்ல வீதி, மொரட்டுவ.
02/08/14/21	மார்ச் 2023	இல. 20, தர்மபால மாவத்தை, கொழும்பு 03.
02/08/14/21	மார்ச் 2023	இல. 245, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
02/08/14/21	மார்ச் 2023	இல. 54, டி.எஸ்.சேனநாயக்க மாவத்தை, பொரளை.
02/08/14/21	மார்ச் 2023	இல. 197, மன்ஸ் வீதி, கொழும்பு 10.
02/08/14/21	மார்ச் 2023	இல. 556, 558, மருதானை வீதி, கொழும்பு 10.
02/08/14/21	மார்ச் 2023	இல. 239, கிருல வீதி, நாரஹேன்பிட்டி.
02/08/14/21	மார்ச் 2023	இல. 129, பழைய காலி வீதி, மொரட்டுவ.
02/08/14/21	மார்ச் 2023	இல. 68, ஹெரண வீதி, பிலியந்தலை.
02/08/14/21	மார்ச் 2023	இல. 28, தெஹிவளை வீதி, பொரலஸ்கமுவ.
02/08/14/21	மார்ச் 2023	இல. 227, டி சொய்ஸா வீதி, மொரட்டுமுல்ல, மொரட்டுவ.
03/09/15/22	மார்ச் 2023	இல. 118A, கொழும்பு வீதி, குருநாகல்.
03/09/15/22	மார்ச் 2023	இல. 103A, கொழும்பு வீதி, குருநாகல்.
03/09/15/22	மார்ச் 2023	இல. 21, தம்புளை வீதி, குருநாகல்.
03/09/15/22	மார்ச் 2023	இல. 12, பிரதான வீதி, குளியாப்பிட்டி.
03/09/15/22	மார்ச் 2023	இல. 31, குருநாகல் வீதி, கலேவெல.
03/09/15/22	மார்ச் 2023	இல. 35, சரசவி கட்டிடம், பிரதான வீதி, நாரம்மல.
03/09/15/22	மார்ச் 2023	இல. 835/2A, தலங்கம வடக்கு, மாலபே.
03/09/15/22	மார்ச் 2023	இல. 365, ஹைலெவல் வீதி, கொட்டாவ.
03/09/15/22	மார்ச் 2023	இல. 76, ஹைலெவல் வீதி, தோமகம.
03/09/15/22	மார்ச் 2023	இல. 419, கோட்டே வீதி, ராஜகிரிய
03/09/15/22	மார்ச் 2023	இல. 69, தெஹிவளை வீதி, மஹாரகம.
03/09/15/22	மார்ச் 2023	இல. 227/A, ஹைலெவல் வீதி, வத்தேகெதர, மஹாரகம
03/09/15/22	மார்ச் 2023	இல. 124/A, துட்டுகெமுனு வீதி, கொஹுவல.
03/09/15/22	மார்ச் 2023	இல. 165, தர்மபால மாவத்தை, கொழும்பு 07.
03/09/15/22	மார்ச் 2023	இல. 50/12, கொடகம வீதி, அத்துருகிரிய.
03/09/15/22	மார்ச் 2023	இல. 04, பாணந்துறை வீதி, பண்டாரகம.
03/09/15/22	மார்ச் 2023	இல. 18, கெசெல்வத்த, பாணந்துறை.
03/09/15/22	மார்ச் 2023	இல. 508, காலி வீதி, பாணந்துறை.
03/09/15/22	மார்ச் 2023	இல. 103, பாணந்துறை வீதி, ஹொரண.
03/09/15/22	மார்ச் 2023	இல. 534, காலி வீதி, வாத்துவ.
03/09/15/22	மார்ச் 2023	இல. 334, பிரதான வீதி, களுத்துறை தெற்கு.
03/09/15/22	மார்ச் 2023	இல. 358/D, மத்துகம வீதி, தர்கா நகர்.
03/09/15/22	மார்ச் 2023	இல. 175/A, காலி வீதி, பேருவளை.
03/09/15/22	மார்ச் 2023	இல. 358, காலி வீதி, அளுத்கம.
03/09/15/22	மார்ச் 2023	இல. 84A, காலி வீதி, தெஹிவளை.
03/09/15/22	மார்ச் 2023	இல. 124, காலி வீதி, தெஹிவளை.
03/09/15/22	மார்ச் 2023

பெறுகை அறிவித்தல்

நாரம்மல பிரதேச சபை – நாரம்மல

நாரம்மல பிரதேச சபைக்கு சொந்தமான நாரம்மல பொது வர்த்தக கட்டிடத்தொகுதி கடைஅறை இல.46ஐ குத்தகைக்கு விடுவதற்காக கொள்வனவாளர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் 2023.02.15 பி.ப.2.30 வரை என்னால் ஏற்கப்படும்.

கேள்விப் படிவக் கட்டணத்தை செலுத்திய பின்பு கேள்வி விண்ணப்பங்கள், 2023.02.14 பி.ப.3.00 வரை நாரம்மல பிரதேச சபை தலைமையகத்தில் விநியோகிக்கப்படும் 2023.02.15 பி.ப.3.00 இற்கு தலைமையகத்தில் நடைபெறும் கேள்விச் சபையின் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் நாரம்மல பிரதேச சபைக்கு வருகைதந்து அல்லது 037-2249275 தொலைபேசி இலக்கத்தை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

விபரம்	கடை அறை இலக்கம்	சதுர அடி அளவு	குறைந்தபட்ச கேள்வி (மாதாந்த வாடகை)	கேள்விப் படிவக் கட்டணம்	கேள்விப் பிணை தொகை
நாரம்மல பொது வர்த்தக கட்டிடத் தொகுதி	இலக்கம் 46	84 சதுர அடி	ரூ.2700.00	ரூ-500.00	ரூ.16,200.00

தலைவர்,
நாரம்மல பிரதேச சபை,
நாரம்மல

மக்கள் வங்கி

மீட்கப்படாத தங்க நகைகளின் ஏல விற்பனை

மக்கள் வங்கி நுவரெலியா பிராந்தியத்தின் கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் 2021.09.30 திகதி வரை அடகு வைக்கப்பட்டு 24.02.2023 திகதி வரை மீட்கப்படாத தங்க நகைகளின் ஏல விற்பனை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

ஏலமிடும் திகதி	2023.02.25/26	2023.02.25/26	2023.02.25/26
ஏலமிடும் இடம்	ஹங்குராங்கெத்த	இராகலை	ஹட்டன்
கிளை	ஹங்குராங்கெத்த, நில்தண்டாகின்ன, ரிகில்லகஸ்கட	இராகலை, நுவரெலியா, உடபுசல்லாவ	தலவாக்கலை, பூண்டுலோயா, மஸ்கெலியா, ஹட்டன், கினிகத்தேன பொகவந்தலாவ
சேவை நிலையங்கள்	பதியபலல்ல, ஹேவாஹெட்ட, அதிகாரிகம, வலப்பனை	இராகலை, கந்தபொல, நானுஓயா	அக்கரபத்தன, ஹபுகஸ்தலாவ, தவலந்தென்ன, அப்கொட், டிக்கோயா, கொட்டகலை, வட்டவளை

ஏல விற்பனையில் மாற்றம் செய்தல், பிற்போடுதல், இரத்து செய்தல் மற்றும் இடத்தை மாற்றல் போன்றவைகளுக்கு வங்கி சட்டபூர்வ அதிகாரத்தை கொண்டுள்ளது.

பிரதேச முகாமையாளர்
பிரதேச பிரதான காரியாலயம்
மக்கள் வங்கி நுவரெலியா.
தொலைபேசி
052-2222555

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk
AA+ (lka) Fitch Rating, A1 - Brand Finance Rating

பெறுகை அறிவித்தல்

நியாகம பிரதேச சபை

கொம்பொஸ்ட் முற்றத்திற்கு குப்பைகளைத் துணிக்கைகளாக்கும் இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்தல்

கேள்விகளைச் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் தினம்: 2023 பெப்ரவரி 22ஆம் திகதி

01. நியாகம பிரதேச சபைக்கு உரித்தான கொம்பொஸ்ட் உரம் உற்பத்தி மத்திய நிலையத்திற்கு குப்பைகளை அரைக்கும் இயந்திரமொன்றைக் (Multi Purpose Chopper Machine) கொள்வனவு செய்து கொள்வதற்காக, பெறுகைக் குழுவின் தலைவரினால், 2023.02.22 அன்று பி.ப. 3.00 வரை முத்திரையிடப்பட்ட கேள்வி விலைகள் ஏற்றுக் கொள்ளப்படும். அன்றைய தினம் அதே நேரத்தில் அதே அலுவலகத்தில் கேள்விதாரர்களின் முன்னிலையில் கேள்விகள் திறக்கப்படும்.

விபரம்	கேள்விப் பிணையம் அல்லது பண வைப்பு ரூபா	கேள்விப் பிணையத்தின் செல்லுபடிக் காலம்	விண்ணப்பப் படிவக் கட்டணம் ரூபா
குப்பைகளை அரைக்கும் இயந்திரம் (Multi Purpose Chopper Machine) NPS/ Mechi/2023/01	15,000.00	2023.06.09 வரை	1500.00

02. 2023.02.21 அன்று பி.ப. 03.00 வரை நியாகம பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் இதற்கான விபரங்களுடன் கூடிய கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
03. தேசிய கேள்விகோரல் (NCB) முறைமையின் கீழ் கேள்விகள் கோரப்படும்.
04. பெறுகை தொடர்பான மேலதிக விபரங்களை வார வேலை நாட்களில் பொதுவான அலுவலக நேரங்களில் நியாகம பிரதேச சபையின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
05. அனைத்துக் கேள்விகளுடனும், மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கேள்விப் பிணையமொன்று அல்லது பண வைப்பு ஒன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வங்கிப்பிணையமொன்றெனின், இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டுமென்பதுடன், அது நிபந்தனைகளற்ற மற்றும் விண்ணப்பித்த உடன் காசாக மாற்றக்கூடியதாக இருத்தல் வேண்டும். பிணையமானது, கேள்விப்படிவத்தின் IVஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் இருத்தல் வேண்டும். பண வைப்பு ஒன்றெனின், குறித்த தொகையை நியாகம பிரதேச சபையில் வைப்புச் செய்து பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டு, கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
07. கேள்விகளை உள்ளடக்கும் உறையின் இடது பக்க மேல் மூலையில், கேள்வியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். கேள்விகள் இரண்டு பிரதிகளில் தனித்தனியாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன், அவற்றில் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதி எனக்குறிப்பிட்டு, இறுதியில் ஒருறையில் சேர்த்து, கீழ்க்காணப்படும் முகவரிக்கு, 2023 பெப்ரவரி 22 அன்று பி.ப. 03.00 இற்கு முன்னர் பதிவுத்தபாலில் அல்லது நேரில் ஒப்படைத்தல் வேண்டும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில், கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.
08. கேள்விகளின் செல்லுபடிக்காலம் 90 நாட்களாகும்.
09. 2023.02.15 அன்று முப. 10.00 இற்கு நியாகம பிரதேச சபை அலுவலகத்தில் கேள்வி முன்னோடிச் சந்திப்பு நடைபெறும்.
10. பெறுகைக்குழுத் தலைவரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

2023.02.02
தலைவர், பெறுகைக் குழுவின் தலைவர்
நியாகம பிரதேச சபை
போத்திவல - மத்தக
தொ.பே.இல. 091-4944231
தொலைநகல்: 0912296518
niyagamaps@gmail.com

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

சிறு விளம்பரம்

வேன்கள்
விற்பனைக்கு

251-8628 Nissan Van, 1994, கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ. பே. 071 4542958
006682

வெற்றிடங்கள்
டிரைவர்கள்

சாரதிகள் தேவை. அனுபவமுள்ள இலகுரக , தட்டுலொறி மற்றும் பூம் டிரக் ஓட்டக்கூடிய தன்னைப்பற்றி பரிந்துரைக்கக்கூடிய நபர்கள் இருப்பவர்கள் உடன் தேவை. நேரில் விசாரிக்கவும். எலைட் டிரேடிங் இன்டர்நெஷனல் (பிரைவேட்) லிமிட்டட், 301, பழைய சோனகத்தெரு, கொழும்பு 12. (ஆமர் வீதி, கெப்பிட்டல் சினி மா அரங்குக்கு முன்னாலுள்ள வீதி) 0117397777, 0 762129669
006911

பஸ்கள், லொறிகள்
விற்பனைக்கு

NW LJ - 3679 Tata 1615 Lorry, 2011, கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ. பே. 071 4542958
006689

சாரதிகள் தேவை. "ஏ" தர சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் சிறந்த பரிந்துரையுடன் சாரதிகள் 3 பேர் தேவை. அவர்களுக்கு மேர்சிடிஸ் பென்ஸ், லேண்ட் குருசர், பிராடோ போன்ற வாகனங்களை செலுத்தக்கூடிய அனுபவம் இருத்தல் வேண்டும் எலைட் இல. 301, பழைய சோனகத்தெரு, கொழும்பு 12. 077 2424013, 0117 397 777
006915

மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்
விற்பனைக்கு

WP QG-1386 Bajaj, 2006, NW AAL-3456 B ajaj, 2013 Threew heel கூடிய விலைக் கோரிக்கைக்கு வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே 0711 2 10 810
006685

தொழில்துறை
பொது

ஆடை கழுவுவதற்கு, அயன் செய்வதற்கு அனுபவமுள்ள ஊழியர்கள் தேவை. தங்குமிட வசதியுண்டு. அடையாள அட்டையுடன் வாருங்கள். தினசரி லொண்டரி, மினுவாங்கொடை. 0778086488.
006583

Repeat Your ad For Better Offers

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

பரீட்சைத் திணைக்களம்

2022 (2023) க.பொ.த. சா/த மற்றும் ஏனைய பரீட்சைகளுக்காக Wood free தாள்கள் மற்றும் வெள்ளை அச்சுத் தாள்கள் வழங்களின் பெறுகைக்கான விலைமனுக் கோரல்

ஒப்பந்த இல. 4/3/21/2023

1. இந்தோனேசிய Wood free தாள் அல்லது வெள்ளை அச்சுத் தாள் வழங்கலின் பெறுகைக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து இலங்கை, பரீட்சைத் திணைக்களத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
3. ஒப்பந்தம் வழங்கப்படுவதற்காக தகுதியை பெறுவதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் இலங்கையில் இதனையொத்த வழங்கல்களில் 3 ஆண்டுகள் அனுபவம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.
4. 1987 இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்த சட்டத்தின் 6ஆவது பிரிவுக்கு அமைய பொது ஒப்பந்தப் பதிவாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியான சான்றிதழ் ஒன்றை விலைமனுதாரர் வைத்திருத்தல் வேண்டும்.
5. ஆர்வம் கொண்ட தகுதியுடைய விலைமனுதாரர்கள் உதவி ஆணையாளர், வழங்கல் பிரிவு, 3ஆவது மாடி, பரீட்சைத் திணைக்களம், இலங்கை (தொலைபேசி/ தொலைநகல் 011 278 4393 அல்லது 011 278 5219) என்ற முகவரியில் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2023.02.21 ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 03.00 வரை கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
6. ஆவணத்திற்காக 30,000.00 இலங்கை ரூபா மீளளிக்கப்படாத கட்டணம் ஒன்றை செலுத்தி 2023.02.02 ஆம் திகதி தொடக்கம் 2023.02.21 ஆம் திகதி வரை மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 03.00 வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம் (கட்டணம் ரொக்கப்பணமாக செலுத்தப்பட வேண்டும்).
7. விலைமனுக்கள் 90 நாட்கள் வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும். (2023.05.23 வரை)
8. அனைத்து விலைமனுக்களும் விலைமனு ஆவணங்களுக்கு இணைக்கப்பட்ட வடிவத்தில் இலங்கையில் இயங்கும் புகழ்பெற்ற வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து, நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதமாக இலங்கை ரூபா ஒரு மில்லியனே அறுநூற்று நாற்பதாயிரம் (இ. ரூபா 1,640,000.00) விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு அது விலைமனு மூடப்படும் திகதியில் இருந்து 120 நாட்கள் வரை (2023.06.22 வரை) செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
9. விலைமனுக்களை 2023.02.22 ஆம் திகதி பி.ப. 2.30 அல்லது அதற்கு முன்னர் வழங்கல் பிரிவு, 03ஆவது மாடி, பரீட்சைத் திணைக்களம், பெலவத்த, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் திறக்கப்படாது திருப்பித் தரப்படும். விலைமனுக்கள் ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் கீழ் தரப்பட்டுள்ள முகவரியில் நேரடியாக பங்கேற்பதற்கு விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
10. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரை இடப்பட்ட விலைமனுக்களை (இரு பிரதிகள்) இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "Wood free அச்சு வெள்ளை தாள்கள் வழங்கல்", ஒப்பந்த இல. 4/3/21/2023" என்று குறிப்பிடுதல் வேண்டும்.
11. எந்தக் காரணமும் இன்றி எந்தவொரு விலைமனுவையும் அல்லது அனைத்தையும் நிராகரிப்பதற்கும் அல்லது விலைமனுக்கோரல் செயற்பாட்டை இல்லாதொழிப்பதற்கும் அதேபோன்று எந்த விலைமனுவையும் அல்லது எந்த விலைமனுவின் பகுதியையும் ஏற்றுக்கொள்ளும் உரிமை பரீட்சைத் திணைக்களத்தின் பெறுகைக் குழு கொண்டுள்ளது.

தலைவர்,
சிரேஷ்ட பெறுகைக் குழு,
இலங்கை, பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்த, பத்தரமுல்லை.
2023/02/02

கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம்

விலைமனுக்கோரல் (IFB)

கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம் சார்பாக பிரதான பெறுகைக் குழுவின் தலைவரினால் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கு தகுதியான முத்திரையிடப்பட்ட மனுதாரர்கள் கோரப்படுகின்றனர்.

ஒப்பந்த இலக்கம்	ஒப்பந்ததின் பெயர்	தேவைப்படும் (CIDA) தரம்	மீளச் செலுத்தப் படாத கட்டணம் (ரூ).	காலம்	தேவைப்படும் மனுப் பாதுகாப்புத் தொகை (ரூ).	மனுக்கள் திறக்கப்படும் / மூடப்படும் திகதி
CLT/WK/012/2023	கொழும்பு தாமரைக் கோபுரத்தின் 15 மீ மட்டத்தில் வெளிப்புற ஒலி அமைப்பு	N/A	3,000.00	21 நாட்கள்	30,000.00	2023.02.15 13.30 மணி
CLT/WK/013/2023	Lotus by the Lake க்கான கூடாரம் வடிவமைப்பு மற்றும் கட்டுமானம்	C7 அல்லது மேல்	3,000.00	21 நாட்கள்	20,000.00	2023.02.15 13.45 மணி
CLT/WK/014/2023	கொழும்பு தாமரைக் கோபுரத்திற்கான நுழைவுச் சீட்டுகளை அச்சிடுதல்	N/A	3,000.00	180 நாட்களுக்காக	N/A	2023.02.15 14.00 மணி

1. ஆர்வமுள்ள மனுதாரர்கள் மீளச்செலுத்தப்படாத கட்டணத்தை **கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தின் நிதிப் பிரிவில் செலுத்தி கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம்** முகாமையாளர் (பெறுகை) அலுவலகத்தில் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
2. மேலதிக விபரங்களை **இல.320,டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 இல் அமைந்துள்ள கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தின் முகாமையாளரிடம் (பெறுகை)** பெற்றுக்கொள்ளலாம்.

   (தொ.பே: **0112-421952** / மின்னஞ்சல் – **tender@colombolotustower.lk**).
3. மனுக்கள் செல்லபடியாகும் காலம் **60 நாட்கள்.**
4. முத்திரையிடப்பட்ட மனுக்கள் **இல.320, டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 இல் அமைந்துள்ள கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தின் முகாமையாளர் (பெறுகை) அலுவலகத்திற்கு** கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும்.
5. அனைத்து மனுக்களும் கட்டாயமாக மேலே குறிப்பிட்டுள்ள மனுப் பாதுகாப்புத் தொகையுடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். மனுப்பாதுகாப்புத் தொகை செல்லுபடியாகும் காலம் **90 நாட்கள்.**
6. மேலே குறிப்பிடப்பட்டுள்ள திகதி முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதி அவ்வேளையில் பிரசன்னமாயிருக்க முடியும்.

பணிப்பாளர் / தலைமை நிர்வாக அதிகாரி,
கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம்,
இல. 320, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,

இலங்கை துறைமுக அதிகார சபை

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

1. பின்வரும் பொருட்களுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் சார்பில் திணைக்களப் பெறுகைக் குழுவின் தவிசாளர் கோருகிறார்.

கேள்வி இல.	கேள்வியின் பெயர்	கேள்விப் பிணைத் தொகை (ரூபா)	ஆவணக் கட்டணம் (VAT உள்ளடக் கப்பட்டுள்ளது)	முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம்
CES/FP/04/PT/6416(MP)	Spares Parts for Kato CR - 100 Mobile Crane	35,000.00	1,000.00	02.03.2023 மு.ப. 10.00 மணி
CES/FP/06/PT/6423(EL)	Automation System for Two Aquamaster US 3001 CP Propulsion Systems of M/T Gotaimbara	600,000.00	12,500.00	02.03.2023 மு.ப. 10.00 மணி
CES/FP/02/PT/6424(EL)	Spare Parts for Scan Steering System of MT Kanchadewa and MT Deera	30,000.00	1,000.00	02.03.2023 மு.ப. 10.00 மணி
CES/FP/03/PT/6425(MP)	05 Nos. Transmission Control Module (TCM) for the UD Nissan Prime Movers	55,000.00	1,000.00	02.03.2023 மு.ப. 10.00 மணி
CES/FP/06/PT/6413(EL)	Local Display Units for Wartsila W26 Series Engines	160,000.00	3,500.00	07.03.2023 மு.ப. 10.00 மணி
CES/FP/02/PT/6429(MP)	24 Nos, Trolley Rails for ZPMC RTG Cranes at JCT (RTG 48 to 77)	75,000.00	1,000.00	07.03.2023 மு.ப. 10.00 மணி
CES/LP/22/PT/08/057	Spares for Hyster H 3.5 UT Fork Lift Trucks	50,000.00	1,000.00	23.02.2023 பி.ப. 1.30 மணி

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். மேலும் யாராவது விலைமனுதாரர் ஒரு முகவராகவோ, உப முகவராகவோ, ஒரு பிரதிநிதியாகவோ அல்லது யாராவது வெளிநாட்டு உற்பத்தியாளரின் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவராகவோ அல்லது வழங்குநரோ தம்மை பொது ஒப்பந்தங்கள் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளும்படி வேண்டப்படுவதோடு முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. விலைமனுதாரர்கள் மேற்குறிப்பிட்டவைகளுக்கு நிகரான பொருட்களை வழங்கும் வியாபாரத்தில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருடங்கள் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிகத் தகவல்களை பிரதான முகாமையாளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களை பின்வரும் முகவரியில் அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 4ம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2023 பெப்ரவரி 03ஆம் திகதி தொடக்கம் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான நேரத்தில் முடிவுறுத்தப்படும் திகதிக்கு முதல் நாள் வரை பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் காசாகச் செலுத்தப்படல் வேண்டும்.
6. விலைமனுக்கள் பின்வரும் முகவரிக்கு இறுதி நேரம் அல்லது அதற்கு முன்னர் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் பின்வரும் முகவரியில் முடிவுறுத்தப்படும் வேளையில் நேரடியாகச் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களுடனும் மேற்குறிப்படப்பட்ட விலைமனுப் பிணையொன்று இணைக்கப்படல் வேண்டும்.

பிரதான முகாமையாளர் (வழங்கல்கள்),
வழங்கல்கள் பிரிவு,
இலங்கை துறைமுக அதிகார சபை,
இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.

தொலைபேசி எண்கள் : 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638
தொலைநகல் எண்கள் : 2381652, 2470443

பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பெனி லிமிடெட்

கைத்தொழில் அமைச்சு

பரந்தன் சுற்றுச்சூழல் நட்பு (ECO Friendly) இரசாயன கைத்தொழில் வலயத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்தியின் ஆலோசனை சேவைக்கான அழைப்பு

ஒப்பந்த இல: PCCL/PEIP/INFRA/CONSULT/2023/01

1. கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்தனில் சுற்றுச்சூழலுக்கு உகந்த இரசாயன கைத்தொழில் வலயத்தின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான ஆலோசனை சேவையை தகைமை மற்றும் தகுதி வாய்ந்த ஆலோசகர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பெனி லிமிடெட் (PCCL) அமைச்சின் ஆலோசனை பெறுகைக் குழு (CMPC), அழைக்கிறது.

   முன்மொழியப்பட்ட பணிகளின் நோக்கம் பின்வருமாறு இருக்கும்.

   வடிவமைத்தல், கருத்தியல் வரைபடங்கள் தயாரித்தல், கட்டடக்கலை வரைபடங்கள் தயாரித்தல், கட்டமைப்பு வரைபடங்கள் தயாரித்தல், மின் வரைபடங்கள் தயாரித்தல், குழாய் வேலைகள் மற்றும் வளிச்சீராக்க வரைபடங்கள் தயாரித்தல், கழிவுநீர் முகாமைத்துவ திட்டங்கள் மற்றும் வரைபடங்கள் தயாரித்தல், BOQ தயாரித்தல், பொறியியல் மதிப்பீடுகள், விலைக்கோரல் ஆவணங்கள் தயாரித்தல், கேள்வி மதிப்பீட்டு அளவுகோல்கள், ஒப்பந்ததாரர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தொழில்நுட்ப ஆதரவு, பொறியியல் பற்றுச்சீட்டுகளைச் சரிபார்த்தல், செய்யப்பட்ட வேலையின் சான்றிதழ் மற்றும் கொடுப்பனவுகளுக்குச் சான்றளித்தல் மற்றும் நிர்மாணத்தைக் கண்காணித்தல் மற்றும் ஒப்பந்ததாரர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் பரந்தன் சுற்றுச்சூழல் நட்பு (ECO Friendly) இரசாயனக் கைத்தொழில் வலய வேலைகள் முடிவடையும் என்று எதிர்பார்க்கும் வாடிக்கையாளர்களுக்கு பரிந்துரை செய்தல்.

   a) மழைநீர் வடிகால் முறைமைகள் கொண்ட உள்ளக வீதிகள் - ஏறக்குறைய 2.5 கி.மீ.
   b) நுழைவாயில்.
   c) நிர்வாக கட்டிடம்.
   d) நிர்வாகிகள் மற்றும் பொதுத் தொழிலாளர்களுக்கான பணியாளர் குடியிருப்புகள்.
   e) சேர்க்யூட் பங்களா.
   f) மின்சாரம் வழங்கல்.
   g) நகர நீர் வழங்கல்
   h) நிலத்தடி நீர் வழங்கல் - RO பொறித்தொகுதி/ பம்பி நிலையம்/ சேமிப்புத் தொட்டிகள்.
   i) நீர் விநியோக குழாய் வழிகளைப் பதித்தல்
   j) வீதிகளுக்கு விளக்கிடுதல்.

   ஆரம்ப கட்டத்தில், 420 மில்லியன் இல. ரூபா கிரயச் செலவில் மேற்படி அபிவிருத்திப் பணிகள் ஆலோசகரின் வரம்பிற்குள் சேர்க்கப்படும்.
2. ஆர்வமுள்ள ஆலோசகர்கள்/ நிறுவனங்கள் மேலதிக தகவல்களை இரத்மலானை, இல. 446, காலி வீதி, பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனி லிமிடெட் அமைச்சு ஆலோசனை பெறுகைக் குழுத் தலைவரிடமிருந்து 2023 பெப்ரவரி 22ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 1.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி 0112437831/ 0777999238)
3. ஆலோசனைச் சேவைகளுக்கான தகுதியைப்பெற, வெற்றிகரமான ஆலோசனை நடைமுறைகள் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உள்ளாகாமலும், பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்: ஆலோசனை நிறுவனம் அல்லது கூட்டமைப்பு ஆலோசனை நடைமுறைகள் நிர்மாணம் மற்றும் ஆலோசனைப் பணிகளுக்காக அந்தந்த நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள ஆலோசகர்கள் 2023 பெப்ரவரி 22ஆம் திகதி வரை பி.ப. 1.00 மணி வரையில் இரத்மலானை, இல. 446, காலி வீதி, பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனி லிமிடெட்டின் வழங்கல் பிரிவைத் தொடர்பு கொள்வதன் மூலம் அல்லது பின்வரும் PCCL இணையதளத்திலிருந்து (www.pccl.gov.lk) மற்றும் கைத்தொழில் அமைச்சின் (www.industry.gov.lk) இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
5. முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை நகல் பிரதிகள் சகிதம் 2023 பெப்ரவரி 22ஆம் திகதி வரை பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் இரத்மலானை, இல. 446, காலி வீதி, பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனி லிமிடெட்டில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது மேற்கூறப்பட்ட முகவரியிலுள்ள தலைவருக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம்.
6. சகல விலைமனுக்களுடனும் பின்வரும் வங்கிக் கணக்கிற்கு ஆவணக் கட்டணமாக வைப்புச் செய்யப்பட்ட பத்தாயிரம் இல. ரூபாவுக்கான (10,000.00 இல. ரூபா) வைப்புப் பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

   கணக்கு இலக்கம்: 004100100211301
   கணக்கின் பெயர்: பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பெனி லிமிடெட்
   வங்கி: மக்கள் வங்கி - 7135
   கிளை: சர்வதேச வங்கிப் பிரிவு - 004
7. கிளிநொச்சி பரந்தனில் பரந்தன் இரசாயன கைத்தொழில் வலயத்தின் வேலைத்தளப் பரிசோதனையின் பின்னர் 2023 பெப்ரவரி 08ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். விலைமனுதாரர்களின் சொந்த செலவில் அதே தேதியில் காலை 08.30 மணிக்கு வேலைத்தள பரிசோதனை தொடங்கும்.

தலைவர்,
அமைச்சு ஆலோசகர் பெறுகைக் குழு,
பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனி லிமிடெட்,
இல. 446, காலி வீதி, இரத்மலானை.

அநுராதபுர மாவட்ட செயலகம்

பாவனையிலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களை விற்பனை செய்தல்

பெறுகை அறிவித்தல்

அநுராதபுர மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான பாவனையில் இருந்து அகற்றப்பட்ட கீழ்க்காணும் வாகனங்களை திறந்த கேள்வி மூலம் விற்பனை செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

தொடர் இல.	வாகன இலக்கம்	வாகன வகை	உற்பத்தி ஆண்டு	மீளளிக்கப்படும் கட்டணம்	விற்பனை தன்மை
01	57-8972	டபிள் கெப்	1996	50,000.00	கழிவக விற்பனை
02	31-6753	மோட்டார் வாகனம்	1981	25,000.00	
03	JZ-6225	மோட்டார் சைக்கிள்	2005	10,000.00	
04	50-0305	டபள் கெப்	1985	50,000.00	
05	43-2967	லொறி பவுசர்	1992	50,000.00	
06	GJ-7329	மோட்டார் சைக்கிள்	2001	10,000.00	பாவனையில் இருந்து அகற்றப்பட்ட வாகனமாக விற்பனை
07	131-3043	மோட்டார் சைக்கிள்	1992	10,000.00	
08	21-2639	முச்சக்கரவண்டி	1992	25,000.00	
09	43-3017	லொறி பவுசர்	1992	50,000.00	
10	JZ-6218	மோட்டார் சைக்கிள்	2005	10,000.00	
11	JZ-6221	மோட்டார் சைக்கிள்	2005	10,000.00	

02. 2023.02.02 முதல் 2023.02.22 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை ஒவ்வொரு வாகனத்திற்கும் மீளளிக்கப்படாத ரூ. 3,000.00 தொகையை செலுத்தி, கேள்விப் பத்திரங்களை, விபரப் பத்திரங்களை மற்றும் வாகன பரிசீலனைக்கான அனுமதிப்பத்திரம் போன்றவற்றை அநுராதபுர மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.
03. அந்தந்த வாகன இலக்கங்களுக்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படும் கேள்விக் வைப்புத் தொகையை 2023.02.23 பி.ப. 2.30 வரை மாவட்ட செயலகத்தின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதியை கேள்வி ஆவணங்களை ஒப்படைக்கும் போது அதனுடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.
04. ஒவ்வொரு வாகனத்திற்கும் வேறு வேறாக கேள்வி ஆவணங்களைச் சமர்ப்பித்தல், வேண்டும். கேள்வி ஆவணங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில், "இல. ..... எனும் வாகனத்திற்கான விலைமனு" என்று தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை 2023.02.23 பி.ப. 3.00 இற்கு முன்பு கிடைக்குமாறு மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், அநுராதபுரம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பிரதம கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கையோடு கொண்டுவந்து உள்ளிடலாம். 2023.02.23 பி.ப. 3.00 இற்கு கேள்விகள் திறக்கப்படுவதுடன், அவ் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். இது பற்றிய பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.
05. அங்கீகரிக்கப்பட்ட கேள்விதாரர்கள், அவ்வாறு அங்கீகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டு 07 நாட்களுக்குள் முழுமையான தொகையை செலுத்தி அவ்வாகனங்களை குறித்த இடத்திலிருந்து அகற்றிக் கொள்ளல் வேண்டும்.
06. இது பற்றிய மேலதிக விபரங்களை மாவட்ட செயலகத்தின் தொலைபேசி இல. 071-8145148 ஐ அழைத்து பிரதம கணக்காளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்,
மாவட்ட செயலகம், அநுராதபுரம்.
திகதி : 2023.01.31

இலங்கை ஜனநாயக சோசலிஷ குடியரசு

கமத்தொழில் அமைச்சு

2023 சிறுபோகத்திற்கு யூரியா உரத்தை கொள்வனவு செய்வதற்கான கேள்விமனு அறிவித்தல்

பெறுகை முறையியல்: சர்வதேச போட்டிக் கேள்வி மனு நடைமுறை *(ICB)*
ஒப்பந்த இலக்கம்: *MOA/PROC/07/UREA/YALA 2023*

01. இலங்கை ஜனநாயக சோசலிஷக் குடியரசு அரசாங்கம் உலக வங்கி நிதியிட்டுள்ள அவசர நெருக்கடி பதிலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் **(ECPR)** கீழ் **350 மில்லியன்** அமெரிக்க டொலர்களுக்கு சமனான ஒரு தொகையை பெற்றுள்ளது. அதில் 21 மில்லியன் அ.டொ. நிதி 2023 சிறுபோகத்திற்கு தேவையான யூரியா உரத்தை கொள்வனவு செய்யும் பொருட்டு பயன்படுத்தப்படவுள்ளது.
02. அமைச்சரவை நியமித்த நிலையியல் கொள்வனவு குழுவின் தலைவர் **(SCAPC)** கமத்தொழில் அமைச்சின் சார்பாக 2023 மார்ச் மாதம் முதல் ஆரம்பமாகும் 2023 சிறுபோக நெற் பயிர்ச் செய்கைக்கு குறிப்பிடப்பட்ட 25,000 மெற்றிக் டொன் அளவு வரையான யூரியா (க்ரனியுலா) உரத்தை வழங்கும் பொருட்டு தகுதி வாய்ந்த யூரியா உற்பத்தி தரப்புகளிடமிருந்து, விநியோகத் தரப்புகளிடமிருந்து அல்லது அவற்றின் உத்தரவு பெற்ற முகவர் நிலையங்களிடமிருந்து கேள்வி விலை மனுக்களை அழைக்கின்றார்.

    a) துண்டு அளவு, கப்பல் சரக்குகள் எடுத்துவரப்படும் விதம், வருகைதரும் / இறுதியாக வந்தடையும் துறைமுகங்கள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

ஒப்படைக்க வேண்டிய காலம்	அளவு (மெ.டொ.)	வடிவம்	இறுதியாக வந்தடையும்/விடுவிக்கும் துறைமுகம்	கப்பல் சரக்கு அளவு (மெ.டொ.)
2023.04.20	25,000	உறை	கொழும்பு	25,000 – 50,000

    b) CIF குழுவு (Incoterm) பிரகாரம் விலைப் பட்டியலில் விலை குறித்தனுப்பப்படுதல் வேண்டும்.

03. தகுதியும் தகைமைகளும்

    a). சகல கேள்வி மனுதாரர் தரப்புகளும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் பொருட்களை விநியோகிப்பதற்கு சட்ட முறையான உரிமைகளை கொண்டிருத்தல் வேண்டும். கேள்வி மனு தாரர் தரப்பு அதன் உண்மையான நாட்டில் சட்டமுறையாக தாபிக்கப்பட்ட ஒரு வியாபார நிறுவனம் என்றபதை சான்றுபடுத்துவதற்கு உரிய அதிகார சபையினால் விநியோகிக்கப்பட்ட பதிவு/கூட்டிணைந்த ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பிக்க வேண்டும்.

    b). கேள்வி மனு தாரர் தரப்பு தற்பொழுது சர்வதேச உர சங்கத்தின் (IFA) அல்லது அதற்கு இணையான ஒரு சர்வதேச உர சங்கத்தின்/அமைப்பின் செல்லுபடியாகும் உறுப்புரிமையை வகிக்க வேண்டும். கேள்வி மனு தாரர் தரப்பு தனது உறுப்புரிமை மூல ஆவணத்தின் ஸ்கான்செய்த (Scanned Copy) ஒரு பிரதியை சமர்ப்பிக்க வேண்டும்.

    c). ஒரு கேள்வி மனு தாரர் தரப்பு ஒரு அக்கறை முறண்பாட்டைக் (Conflict of Interest) கொண்டிருக்க கூடாது. அக்கறை முரண்பாடு இருப்பதாக கண்டறியப்படும் சகல கேள்வி மனு தாரர் தரப்புகளும் தகுதியற்ற தரப்புகள் என கருதப்படும். கேள்வி மனு தாரர் தரப்புகள் இந்தக் கோள்வி மனு நடைமுறையில் ஒன்று அல்லது அதற்கு அதிகமான தரப்புகளுடன் அக்கறை முரண்பாடுகளை கொண்டிருந்தால், அதாவது:

    i. இந்த கேள்வி மனு ஆவணங்களின் கீழ் கொள்வனவு செய்யப்படவுள்ள பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்தப்படுவதற்கு வடிவமைப்பு, தகவுதிறன் மற்றும் ஏனைய ஆவணங்களை தயாரிக்கும் நிமித்தம் ஆலோசனை சேவைகளை வழங்குவதற்கு கொள்வனவு தரப்பினால் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஒரு தாபனத்தில் அல்லது அதன் ஏதாவது இணைந்த நிறுவனங்களில் கடந்த காலத்தில் சம்பந்தப்பட்டுள்ள அல்லது சம்பந்தப்பட்டு இருக்கின்ற அல்லது

    ii. ஒரேமாதிரி கேள்வி செயல்முறைக்கு ஒன்றுக்கு அதிகமான கேள்வி விலை மனுக்களை சமர்ப்பித்த, தரப்பு தகுதியற்ற தரப்பாக கருதப்படும்.

    d) கேள்வி மனு தாரர் தரப்பு உலக வங்கியால் அல்லது இலங்கை அரசாங்கத்தால் அல்லது கமத்தொழில் அமைச்சால் தடைசெய்யப்பட்டுள்ள பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருத்தல் கூடாது.

04. கேள்வி மனு ஆவணங்கள் **2023.02.02** ஆம் திகதி இலங்கையின் நிதி அமைச்சினது e-GP செயலக இணைய தளத்திலும் (https://www.promise.lk) மற்றும் இலங்கையின் கமத்தொழில் அமைச்சின் இணைய தளத்திலும் https://www.agrimin.gov.lk) கிடைக்கக்கூடியதாக இருக்கும். அக்கறை உடைய கேள்வி மனு தாரர் தரப்புகள் மேற்குறித்த இணைய தளங்களில் இருந்து உரிய கேள்வி மனு ஆவணங்களை கீழிறக்கம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.
05. சர்வதேச போட்டிக் கேள்வி (ICB) மனு நடைமுறையின் ஊடாக கேள்வி மனு தேர்ந்தெடுக்கப்படும். கேள்வி மனு காலம் **21 நாட்களாகும்.**
06. பொறியிடப்பட்ட கேள்வி மனு அடங்கிய கடித உறை பின்வரும் முகவரிக்கு முகவரியிடப்பட்டு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

    தலைவர்,
    அமைச்சரவை நியமித்த கொள்வனவு குழு (SCAPC), கமத்தொழில் அமைச்சு,
    பெறுகைப் பிரிவு - உர அலகு, நில மாடி, இலக்கம் 80/5, "கொவிஜன மந்திரய" ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்ல, இலங்கை.

    மேலும் **நில மாடி, இலக்கம் 80/5, "கொவிஜன மந்திரய" ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்ல,** இலங்கை என்ற முகவரியில் உள்ள **கமத்தொழில் அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளர் (பெறுகை - உரம்)** அலுவலகத்தில் இந்த நோக்கத்தின் நிமித்தம் வைக்கப்பட்டுள்ள கேள்வி மனு பெட்டியினுள் **2023.02.23** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் இலங்கை நேரப்படி **மு.ப.11:00** மணிக்கு இடப்படுதலும் வேண்டும்.

07. பூர்வாங்க கேள்வி மனுக் கூட்டம் **2023.02.14** ஆம் திகதி **மு.ப.10:30 மணிக்கு இலக்கம் 80/05, கொவிஜன மந்திரய, ரஜமல்வத்த ஒழுங்கை, பத்தரமுல்ல எனும் முகவரியில் அமைந்துள்ள கமத்தொழில் அமைச்சின் சந்திப்பு மண்டபத்தில் (முதலாம் மாடியில் உள்ள)** நடைபெறும். இணையவழி சந்திப்பு வசதிக்காக வழங்கவுள்ள தொடர்பு வசதியை பெற்றுக்கொள்ளும் முகமாக கீழே காணப்படும் **procurement_sma@agrimin.gov.lk** என்ற இணையத்தள முகவரிக்கு **2023.02.13** ஆம் திகதி **பி.ப.02:00 மணிக்கு** அதற்கு முன்னர் கேள்வி மனு தாரர் தரப்புகள் மின்னஞ்சல் ஊடாக கோரலை அனுப்ப தேவைப்படுத்தப்படும்.
08. கேள்வி மனுக்கள் **2023.02.23** திகதி **மு.ப.11.00** மணிக்கு மூடப்பட்டு அதன்பின்னர் உடனடியாக திறக்கப்படும். கேள்விமனு தாரர் தரப்புகள் அல்லது அவற்றின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் கேள்வி மனுக்கள் திறக்கப்படும் நேரத்தில் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன. தாமதித்து கிடைக்கும் கேள்வி மனுக்கள் திறக்கப்படாமலே திருப்பி அனுப்பி வைக்கவும்படும்.
09. 8 (ITB 8) இற்கு இணங்க சகல கேள்வி மனுக்களும் பிணையுத்தரவாத வெளிப்படுத்துகை ஆவணத்துடன் அனுப்பி வைக்கப்படுதல் (Bid Security Declaration) வேண்டும்.
10. இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நேரம் இலங்கை நேரமாகும்.
11. கேள்வி மனுவுடன் சமர்ப்பிக்கப்படும் சகல ஆவணங்களும் ஆங்கில மொழியில் இருத்தல் வேண்டும்.
12. மேலதிக விபரங்களை கீழ்காணும் அதிகாரியிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

    சிரேஷ்ட உதவி செயலாளர் (பெறுகை - உரம்), கமத்தொழில் அமைச்சு,
    இலக்கம் 80/5, நில மாடி, "கொவிஜன மந்திரய" ரஜமல்வத்த ஒழுங்கை, பத்தரமுல்ல, இலங்கை.
    இணையத்தள முகவரி: www.agrimin.gov.lk
    தொலைபேசி/தொலைநகல் இலக்கம்: +94 11 (0) 288 3829 / +94 9 (0) 11 286 3497
    மின்னஞ்சல் முகவரி: procurement_sma@agrimin.gov.lk

    தலைவர்,
    அமைச்சரவை நியமித்த கொள்வனவு குழு (SCAPC), கமத்தொழில் அமைச்சு, பெறுகைப் பிரிவு - உர அலகு, நில மாடி, இலக்கம் 80/5, "கொவிஜன மந்திரய" ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்ல, இலங்கை.
    திகதி: 2023.02.02

இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க இலங்கை ஏ நிதான துடுப்பாட்டம்

இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கு எதிரான முதலாவது உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் போட்டியில் இன்னிங்ஸ் தோல்வி ஒன்றை தவிர்க்க தனது இரண்டாவது இன்னிங்ஸை துடுப்பெடுத்தாடும் இலங்கை ஏ அணி இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவின்போது ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 228 ஓட்டங்களை பெற்று ஸ்திரமான நிலையில் உள்ளது.

காலியில் நடைபெற்றுவரும் இந்தப் போட்டியின் இரண்டாவது நாளான நேற்று தனது முதல் இன்னிங்ஸை தொடர்ந்த இங்கிலாந்து லயன்ஸ் 87.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 467 ஓட்டங்களை பெற்றது.

டொம் ஹைனஸ் சதம் பெற்றதோடு பந்துவீச்சில் ஐந்து விக்கெட்டுகளை பதம்பார்த்த மத்தியு பிஷர் 53 ஓட்டங்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது இலங்கை ஏ அணி சார்பில் அம்ஷி டி சில்வா மற்றும் லசித் எம்புல்தெனிய தலா 3 விக்கெட்டுகளை பதம்பார்த்தனர்.

இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 136 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்த நிலையில் 331 ஓட்டங்களால் பின்தங்கி இன்னிங்ஸ் தோல்வி ஒன்றை தவிர்க்கும் நெருக்கடி ஒன்றுடனேயே நேற்று இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்தது. எனினும் ஆரம்ப வீரர்களான நிஷான் மதுஷங்க மற்றும் ஓஷத பெர்னாண்டோ அபாரமாக துடுப்பெடுத்தாடி முதல் விக்கெட்டுக்கு 203 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டனர். இதில் ஓஷத பெர்னாண்டோ 134 பந்துகளில் 114 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். எனினும் மதுஷங்க 91 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது சதத்தை நெருங்கியுள்ளார்.

இதன்படி இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவின்போது இலங்கை ஏ அணி 48 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 228 ஓட்டங்களை பெற்றுள்ளது. மதுஷங்கவுடன் லக்ஷித மானசிங்க 14 ஓட்டங்களைப் பெற்று களத்தில் உள்ளார். எனினும் இலங்கை ஏ அணி இன்னிங்ஸ் தோல்வி ஒன்றை தவிர்க்க 9 விக்கெட்டுகள் கைவசம் இருக்க மேலும் 103 ஓட்டங்களை பெற வேண்டி உள்ளது.

நான்கு நாட்கள் கொண்ட இந்தப் போட்டியின் மூன்றாவது நாள் இன்றாகும்.

டி20 உலகக் கிண்ணத்திற்கு இலங்கை குழாம் அறிவிப்பு

தென்னாபிரிக்காவில் எதிர்வரும் 10 தொடக்கம் 26ஆம் திகதி வரை நடைபெறவுள்ள மகளிர் டி20 உலகக் கிண்ணப் போட்டிக்கான இலங்கைக் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் துடுப்பாட்ட வீராங்கனை சாமரி அத்தபத்து தலைவியாக அறிவிக்கப்பட்டுள்ளார். எனினும் கைவிரல் காயத்திற்கு உள்ளான ஹாசினி பெரேரா அணியில் இடம்பெறவில்லை என்பதோடு அவருக்கு பதில் சத்யா சந்தீபனி சேர்க்கப்பட்டுள்ளார்.

இலங்கைக் குழாம்: சாமரி அத்தபத்து (தலைவி), ஓஷதி ரணசிங்க, ஹர்சித்த சமரவிக்ரம, நிலக்ஷி டி சில்வா, கவிஷ தில்ஹாரி, அனுஷ்க சஞ்சீவனி, கௌஷனி நுத்யாங்கன, மல்ஷா செஹானி, இனோகா ரணவீர, சுகந்திகா குமாரி, அச்சினி குலசூரிய, விஷ்மி குணரத்ன, தரிக்க செவ்வந்தி, அமா காஞ்சன, சத்யா சந்தீபனி.

பாராளுமன்ற பணியாளர்களின் கிரிக்கெட்: 'வன்டுவன்' வெற்றி

பாராளுமன்ற பணியாளர்களின் திணைக்களங்களுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் போட்டியில் ரமேஷ் மலிந்த நாணயகார தலைமையிலான 'வன் டு வன்' அணி வெற்றிபெற்றதோடு தியவண்ணா ரைடர்ஸ் அணி இரண்டாம் இடத்தை பிடித்தது. பாராளுமன்ற விளையாட்டு சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கிரிக்கெட் போட்டி பத்தரமுல்லை ஜீ.எச் புத்ததாச மைதானத்தில் நடைபெற்றது.

இதில்; பெண்களுக்கான கிரிக்கெட் அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டியில் 'கோல்டன் பிளேம்ஸ்' வெற்றியீட்டியது. அதேநேரம், பாராளுமன்ற உறுப்பினர்களின் கிரிக்கெட் அணி மற்றும் ஏற்பாட்டாளர் அணிக்கு இடையிலான நட்புறவுப் போட்டியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் அணி வெற்றிபெற்றது.

பாராளுமன்ற பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும், பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க, பதவியணித் தலைமை அதிகாரியும், பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹணதீர, பாராளுமன்ற திணைக்களத் தலைவர்கள் மற்றும் ஏனைய பணியாளர்கள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

சிம்பாப்வே டெஸ்ட் அணிக்கு இங்கிலாந்து வீரர் அழைப்பு

மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடருக்கான சிம்பாப்வே அணியில் இங்கிலாந்து அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் கரி பலன்ஸ் இணைக்கப்பட்டுள்ளார்.

சிம்பாப்வேயில் பிறந்த 33 வயது பலன்ஸ் தான் குடியேறிய நாடான இங்கிலாந்துக்காக 23 டெஸ்ட் மற்றும் 16 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் ஆடியுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் கௌன்ஸில் விதியின்படி வீரர் ஒருவர் முழு அங்கத்துவ நாடு ஒன்றில் இருந்து மற்ற நாட்டுக்காக ஆடுவதற்கு மூன்று ஆண்டு கால இடைவெளி எடுத்துக் கொள்ள வேண்டும். அதனை பூர்த்தி செய்ததை அடுத்தே அவர் சிம்பாப்வே அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே அவர் சிம்பாப்வே அணிக்காக கடந்த மாதம் ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளில் ஆடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிம்பாப்வே மற்றும் மேற்கிந்திய தீவுகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் புலவாயோவில் வரும் சனிக்கிழமை (04) ஆரம்பமாகவுள்ளது.

அளவை விஞ்சிய கொண்டாட்டம்: இங்கிலாந்து வீரருக்கு அபராதம்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் டெம்பா பவுமாவின் விக்கெட்டை வீழ்த்திய பின்னர் கொண்டாட்டத்தில் ஈடுபட்ட இங்கிலாந்து வேகப் பந்து வீச்சாளர் சாம் கரனுக்கு ஐ.சி.சி அபராதம் விதித்துள்ளது.

கடந்த ஜனவரி 29ஆம் திகதி நடைபெற்ற இந்தப் போட்டியில் 109 ஓட்டங்களை பெற்ற பவுமாஇ கரன் வீசிய பந்தில் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார். இதன்போது கரன் துடுப்பாட்ட வீரருக்கு அருகில் சென்று அளவை விஞ்சி கொண்டாட்டத்தில் ஈடுபட்டதாக ஐ.சி.சி குறிப்பிட்டுள்ளது.

இது பவுமா கோபத்தை வெளிப்படுத்தத் தூண்டுவதாக இருந்தது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால் சாம் கரனுக்கு போட்டிக் கட்டணத்தில் 15 வீதம் அபராதம் விதிக்கப்பட்டிருப்பதோடு ஒரு தகுதி இழப்புப் புள்ளியும் வழங்கப்பட்டுள்ளது. ஒரு வீரர் 24 மாத காலத்திற்குள் நான்கு தகுதி யிழப்புப் புள்ளிகளைப் பெற்றால் போட்டித் தடையை எதிர்கொள்வார் என்பது குறிப்பிடத்தக்கது.

கரன் தனது செயலை ஒப்புக்கொண்டதை அடுத்து இது தொடர்பில் விசாரணை இன்றியே இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபை குறித்து விளையாட்டு அமைச்சர் வாக்குறுதி

இலங்கை கிரிக்கெட் சபை தொடர்பில் முழுமையான கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டு கணக்காய்வு நாயகத்தின் அறிக்கை கிடைக்கும் வரை இலங்கை கிரிக்கெட் நிறுவனம் தொடர்பில் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது என்று விளையாட்டுத் துறை அமைச்சர் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு உறுதி அளித்துள்ளார்.

குசலா சரோஜினி வீரவர்தன அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு இலங்கை கிரிக்கெட் சபை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே விளையாட்டுத் துறை அமைச்சர் இந்த வாக்குறுதியை வழங்கியுள்ளார்.

சோஹித்த ராஜகருணா மற்றும் தம்மிக்க கனேபொல ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த வழக்கு நேற்றுக் (01) காலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதில் இலங்கை கிரிக்கெட் சபையின் பதிவை ரத்துச் செய்வதை தடுக்குமாறு கோரி இலங்கை கிரிக்கெட் சபை தலைவர்களால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் டி20 உலகக் கிண்ணப் போட்டிக்காக அவுஸ்திரேலியா சுற்றுப்பயணம் மேற்கொண்ட இலங்கை அணியின் நடத்தை தொடர்பில் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் குசலா சரோஜினி வீரவர்தன தலைமையிலான ஐந்து பேர் கொண்ட விசாரணைக் குழு சமர்ப்பித்த அறிக்கையில் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகளே இந்த வழக்குக்கு அடிப்படையாகக் கூறப்பட்டுள்ளது.

இந்த விசாரணை அறிக்கையில் அவுஸ்திரேலிய சுற்றுப்பயணத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல்கள் பற்றி சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இலங்கை கிரிக்கெட் சபை மீது விரிவான கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் ஆதாரங்கள் அழிக்கப்படுவதை தடுக்க சபையின் ஆவணங்களை கைப்பற்றும்படியும் விளையாட்டுத் துறை அமைச்சருக்கு பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

லெபனான் நாணயம் 90 வீதம் மதிப்பிழப்பு

லெபனான் தனது நாணயத்தை 90 வீதம் அளவு மதிப்பிழப்புச் செய்து நேற்று (01) தொடக்கம் டொலர் ஒன்றுக்கு நிகரான பௌண்ட்ஸின் பெறுமதி 15,000 என நிர்ணயித்துள்ளது. இதன் மூலம் லெபனான் பௌண்ட்ஸின் பெறுமதி அடுத்த 25 ஆண்டுகளுக்கு மாற்றம் இன்றி இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னர் டொலர் ஒன்றுக்கு நிகராக 1,507 பௌண்ட்ஸ் இருந்ததே தற்போது 15,000 பௌண்ட்ஸ்களாக மாற்றப்பட்டுள்ளது என அந்நாட்டு மத்திய வங்கி ஆளுநர் ரியாத் சலாமி தெரிவித்துள்ளார்.

எனினும் பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் லெபனானில் கறுப்புச் சந்தையில் டொலர் ஒன்றுக்கு நிகரான பௌண்ட்ஸின் பெறுமதி சுமார் 57,000 ஆக இருக்கும் நிலையில் இந்த மாற்றம் பொருளாதாரத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாது என்று நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நடனமாடிய ஜோடிக்கு பத்து ஆண்டுகள் சிறை

வீதியில் நடனமாடிய வீடியோ ஒன்றை பதிவேற்றிய இருபது வயதுகளில் இருக்கும் ஈரானிய ஜோடிக்கு மொத்தம் பத்து ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.



இவர்கள் மீது சீர்கேட்டை ஊக்குவித்தது, விபசாரத்தில் ஈடுபட்டது மற்றும் பரப்புரையில் ஈடுபட்டதாகக் குற்றங்காணப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இவர்கள் டெஹ்ரானின் அசாதி சதுக்கத்தில் நடனமாடும் வீடியோ ஒன்றையே சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ளனர். இந்த வீடியோ இன்ஸ்டாகிராமில் வெளியானதை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஈரானில் ஹிஜாப் விவகாரத்தில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் வலுத்த நிலையில் ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் நாட்டில் கடுமையான தண்டனை விதிக்கப்பட்டு வருகிறது. எனினும் இவர்கள் நடனமாடியது ஆர்ப்பட்டத்துடன் தொடர்புபட்டதல்ல என கூறப்படுகிறது.

இந்த இருவரும் சமூக ஊடகங்களை பயன்படுத்துவதற்கும் நாட்டை விட்டு வெளியேறுவதற்கும் இரண்டு ஆண்டு தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச செய்திகள்

அவுஸ்திரேலியா: தொலைந்த கதிரியக்க கருவி கண்டுபிடிப்பு

அவுஸ்திரேலியாவில் கடந்த வாரம் காணாமல் போன மிகச் சிறிய கதிரியக்கக் கருவி கண்டுபிடிக்கப்பட்டதாக அந்நாட்டு நிர்வாகம் நேற்று (01) தெரிவித்தது.

வைக்கோல் போரில் ஊசியை போன்று அவசரப் பிரிவினரால் அந்தக் கருவி கண்டுபிடிக்கப்பட்டதாக மேற்கு அவுஸ்திரேலிய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தில் 1,400 கிலோமீற்றர் தூரம் எடுத்துச் செல்லப்பட்டபோது காணாமல் போன கதிரியக்கக் கருவியை கண்டுபிடிக்க பாரிய தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அந்தக் கருவி வெறுமனே 6 மில்லிமீற்றர் விட்டம் மற்றும் 8 மில்லிமீற்றர் நீளம் கொண்டபோதும் அதனை காணாமல்போன நிலையில் விட்டுவிட முடியாத அளவு உயிராபத்துக் கொண்டதாகும். இதில் சிறிய அளவு சீசியம்–137 கதிரியக்கம் இருப்பதோடு அது தோல் பாதிப்பு, தீக்காயம் அல்லது கதிரியக்க நோயை ஏற்படுத்தக்கூடியதாகும்.

தொலைதூர கிம்பேர்லி பிராந்தியத்தில் உள்ள சுரங்கம் ஒன்றிலேயே இந்தக் கருவி பயன்படுத்தப்பட்டிருந்தது.

இதனை கண்டுபடிப்பதற்கு சிறப்புக் கருவிகள் மற்றும் கதிரியக்கக் கண்காணிப்புக் கருவிகளை அவசர சேவை பிரிவினர் பயன்படுத்தினர். அது தொலைந்து போனதற்காக ரியோ டின்டோ நிறுவனம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டது.

இதன்போது கையில் உலோக கண்காணிப்பு கருவியை வைத்துக் கொண்டு 36 கிலோ மீற்றர் வீதியில் தீயணைப்பு மற்றும் அவசர மீட்புப் படையினர் தேடும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அதிகமான வாகனங்கள் சென்று கொண்டிருக்கும் மிகவும் பரபரப்பான வீதிகளில் மில்லிமீற்றர் அளவுள்ள அந்தக் கருவியை தேடும் பணி ஒரு வாரமாக நீடித்தது. குறிப்பாக மக்கள் கூட்டம் அதிகம் இருக்கும் பகுதிகளில் தேடுதல் பணி தீவிரப்படுத்தப்பட்டிருந்தது.

கதிரியக்க பொருட்களை பாதுகாப்பாக கையாளாவிட்டால் 1000 டொலர் அபராதம் விதிக்கப்படும் என்றும் அந்த குற்றம் தொடர்ந்து இடம்பெறும் ஒவ்வொரு நாளுக்கும் தலா 50 டொலர் அபராதம் விதிக்கப்படும் என்றும் 1975இன் மாநில சட்டம் குறிப்பிடுகிறது.

எனினும் இந்த அபராத அளவு குறைவாக இருப்பதாக மாநில சுகாதார அமைச்சர் ஆம்பர் ஜேட் சான்டர்சன் தெரிவித்துள்ளார்.

புறப்பட்ட இடத்திலேயே தரையிறங்கிய விமானம்

டுபாயிலிருந்து நியூசிலாந்துக்கு சென்று கொண்டிருந்த எமிரேட்ஸ் விமானம், 13 மணிநேர பயணத்திற்குப் பின்னர் மீண்டும் புறப்பட்ட இடத்திற்கே திரும்பியதால் பயணிகள் அவதிக்குள்ளாகினர்.

டுபாயில் இருந்து கடந்த ஜனவரி 27ஆம் திகதி புறப்பட்ட எமிரேட்ஸ் விமானம் ஒக்லாந்து நகரில் நிலவும் மோசமான வானிலை மற்றும் கனமழை காரணமாக மீண்டும் திருப்பி விடப்பட்டது.

சற்று நேரத்தில் தரையிறங்குவோம் என எதிர்பார்த்துக் காத்திருந்த பயணிகள் மீண்டும் டுபாயிலேயே கொண்டு வந்து இறக்கிவிடப்பட்டதால் ஏமாற்றமடைந்தனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்ட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 பெப்ரவரி மாதம் 2ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.